தென்மொழி

# கோடரிக் காம்புகள்!

ஆங்கிலத்தை யார்வெறுப்பார்? அருந்தமிழை யார் தவிர்ப்பார்?
அரசியலால் பதவிநலம் அடைதல் வேண்டித்
திங்குளத்தைப் பாய்ச்சுகின்ருர்; தீமைசெயத் தூண்டுகின்ருர்;
திரிபுணர்வை மாணவர்பால் எழுப்ப லானுர்!
தேங்குகின்ற அறிவியல்நூல் தெளிவதற்கும் உலகமெலாம்
உலாவரற்கும் ஆங்கிலமே தேவை என்ருல்
ஓங்குயர்ந்த மனநலத்தை மாண்பொழுங்கை மெய்யறிவை
உணர்வதற்கோ செந்தமிழை ஓதல் வேண்டும்!

கயிற்றினையே பாம்பென்றும் பாம்பினையே கயிறென்றும்
கருதுதல்போல் மாணவர்கள் கலக்க முற்று,
வயிற்றுமொழி பெரிதென்றும் வாய்மொழியாஞ் செந்தமிழைத்
தீதென்றும் மயலுணர்வால் வம்பு ரைப்பார்!
பயிற்றுமொழி தமிழேதான் என்றிங்கே பகர்ந்தவர்யார்?
ஆங்கிலத்தைப் பழித்தவர்யார்? பதற்ற முற்றே
குயிற்றிறத்துத் தீந்தமிழைக் குலைத்திடவும் எழுந்துவிட்டீர்?
கோடரிக்காம் பன்ன.குலம் கெடுக்க வந்தீர்!

அருந்தமிழில் கற்பதுவும் ஆங்கிலத்தில் கற்பதுவும்
அவர்விருப்பம்; இல்லையென மறுத்தார் யாரே?
பெருந்தொகையாய் மதிப்பீட்டெண் பெறுதவர்க்கே ஆங்கிலத்
பயிற்றுவித்தால் பெரும்பயன்தான் கிடைப்ப துண்டோ? [தில்
அருந்துகிலாப் பிள்ளையுடன் சாப்பாட்டு இராமனுக்கே
விருந்தளித்தால் ஆர்க்குநலன்? ஆய்ந்து சொல்வீர்!
பொருந்துகின்ற செந்தமிழில் அறிவியலைப் புகட்டுவதில்
புதுமையென்ன? விரும்பிலர்ஏன் புகைதல் வேண்டும்?

வழிவழியாய்க் கற்றமொழி ஆகையினுல் பார்ப்பனர்க்கே
ஆங்கிலத்தில் வல்லாண்மை மிக்க வுண்டு.
மொழிவழியாய் அறிவியலைக் கற்பதெனில் தாய்மொழிக்கே
முதற்சலுகை தரல்வேண்டும் என்ற கொள்கை
விழிவழியே செங்குருதி கொப்பளிக்க வைத்ததெனில்
வீணுரைசெய் தமிழர்க்கிது விளங்க வேண்டும்!
இழிவழிய எந்தமிழர் தம்வாழ்வை முன்னேற்றற்
கிதுதவிர வழியுண்டோ? இயம்பு வீரே!

கனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

www.thamizham.net - Free E book No 7426

# நமக்கு வந்த மடல்கள்.

**0 219:** தண்டமிழ் காக்க வந்த தவச்செல்வ! தென்மொழி கடகம்–மடங்கல் இதழின் ஆசிரியவுரையில் பிராமணீயத்தின் நச்சுத் தன்மைகளையும் அதைக் களைய வேண்டியதன் இன்றியமையாமையையும் மிகமிக விளக்கமாக, அழுத்தமாக, ஆணித்தரமாக விளக்கியுள்ளீர்கள். இதைவிடத் தெளிவாக, உண்மையாகப் பார்ப்பனர் செய் அட்டூழியங்களை எவரும் துணிந்து எழுதியதுமில்லை; (நான்) படித்ததுமில்லை. தங்களது ஆசிரியவுரையைப் படிக்கையில் என் அரத்த நாளமெல்லாம் கொதித்தது. பிராமணீயத்திற்குச் சாவுமணி அடிக்கப் பாய்புலி எனப் புறப்பட்டு விட்ட பாவலரே, உங்கட்கு உறுதுணையாக வர ஆயிரமாயிரம் காளைகள் அணியமாய் உள்ளோம் என்பதைக் கூறிக் கொள்ள விழைகிறேன்.

"ஊழி பெருகி உலகம் புரண்டாலும்
உளந்திருந்த மாட்டீர்கள், ஓ! ஓ! ஓ! பார்ப்பனரே!"


இந்த வரிகள்தாம் எவ்வளவு உண்மை பொதிந்தவை! ஆம். ஐயா. பார்ப்பனரில் ஒரு சிலர் விதிவிலக்காக இருப்பர் என்றும், அதிலும் குறிப்பாக மதிக்கத் தகுந்த எங்கள் பேராசிரியர் (பார்ப்பனர்) போன்றோர் இனவெறி. 'சாதி'வெறி அற்றிருப்பர் என்றும் இதுகாறும் நான் நம்பியிருந்தேன். என்ன ஏமாற்றம்! இன்றுதான் அவர் (எங்கள் பேராசிரியர்) உண்மைத் தோற்றம் புலனாயிற்று. நானும் நண்பர்கள் சிலரும் சில பொத்தகங்கள் பெற அவர் இல்லம் சென்றோம். நாங்கள் உள்ளே செல்லுமுன் பேராசிரியர் வெளியே வந்தார். (பொத்தகங்களுடன்–அதாவது முன்னெச்சரிக்கையுடன்). வந்தவர் வாசற்படியிலேயே நின்று சில மணித்துளிகள் உரையாற்றிவிட்டு, வீடுதேடிச்சென்ற எங்களை முகமனுக்குக்கூட உள்ளே வாருங்கள் என்று அழையாமல், 'சென்று வாருங்கள்' என்று வெளிக்கதவினின்றே அனுப்பிவிட்டார். கல்லூரி மாணவர்களாகிய எங்கட்கு அவர் இல்லத்தில் தந்த வரவேற்பைப் பார்த்தீர்களா? நாங்கள் சிரிப்பதா அழுவதா என்று தெரியாமல் விடுதி மீண்டோம். பெருந்தன்மை நிறைந்தவர், சான்றோர் என்று நாங்கள் கருதிவந்த இவரே இத்துணைச் 'சாதி' வெறியும், இனவெறியும் கொண்டிருக்கின்றாரென்றால், ஏனைய பார்ப்பனரைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

எனவே, பார்ப்பனர் என்றும் பார்ப்பனர் தாம்! அவர்கள் திருந்துவார்கள் என்பதில் எனக்கு எள்ளத்துணையும் நம்பிக்கை இல்லை. அவர்கள் மாறுவார்கள் என்று எதிர்பார்ப்பதைவிட நாமே வலிந்து மாற்றவேண்டும். அதற்குத் தமிழர்கள் ஒன்றுபட வேண்டும். தமிழர் விழித்தெழ, தன்மான உணர்ச்சி பெற, ஒன்றுபட, தங்கள் தூவல் ஆற்றவேண்டிய பணி ஏராளம், ஏராளம்! தொடரட்டும் தங்கள்பணி; முழங்கட்டும் விடுதலை முரசம்! வெற்றி விரைவில்!!

**–தென்மொழி யன்பன்–திருப்பத்தூர்.**

**0 220:** அன்புடையீர், வணக்கம் பல. இந்தத் திங்கள் 'தென் மொழி' இதழில் அட்டையில் வெளியிட்டுள்ள 'ஓ! ஓ! ஓ! பார்ப்பனரே', என்ற பாடலையும், ஆசிரியவுரையையும் கண்டு இவ்வூரில் (தென் ... ...)

www.thamizham.net - Free E book No 7426



# தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

**சுவடி:8 ஓலை: 7.**

(மடங்கல்-கன்னி தி. பி. ௨00௧- செப்-அக்.-1970.
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
**தென்மொழியின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.**

# பிரிவினை தவிர வேறுவழியில்லை!



மானமுள்ள தமிழர்களாகிய நாம் ஒன்றுபட வேண்டிய நேரம் வந்துவிட்டது. நாட்டின் அரசியல் அமைதி பார்ப்பனரால் சீர் குலைக்கப்பட்டுவிட்டது. ஆரியப்பார்ப்பான் ஒவ்வொருவனும் இன்று நஞ்சைக் கக்கத் தொடங்கிவிட்டான். அரசியல் நிலையிலும் குமுகாய நிலையிலும் அவன் தமிழர்களில் தனக்குகந்தவர்களைத் தேடிப்பிடித்துத் துணையாக்கிக் கொள்ள முனைந்துவிட்டான். பயிற்சிமொழிச் சிக்கல் என்ற பெயரால் பார்ப்பான் தன்இனத்தைஒன்றிணைத்து வருகின்றான். தமிழர்களிடையே தப்பிப் பிறந்த சில வீடணப் பிரகலாதன்கள், பார்ப்பானின் வீடு தேடிப் போய், அவன் திட்டத்திற்குக் கைகொடுக்க முன்வந்து விட்டனர். தம்காலில் தாமே நிற்கத் தகுதியுடையவர்களாகக் கருதப்

www.thamizham.net - Free E book No 7426

பெற்றவர்கள் பார்ப்பான் துணையுடன் தாமிழந்த பட்டம் பதவிகளுக் காகத் தமிழர்களின் அனைத்து நலன்களையும் அடகு வைக்க முற்பட்டு வருகின்றனர். ஆம், பேராயக் கட்சியின் தன்னலமற்ற ஒரேதலைவர் என்று பெரியார் ஈ.வே இரா. வால் பாராட்டப் பெற்ற காமராசர்கூட, தம் பதவி வேட்கைக்காகத் தமிழர் நல எதிரியாகிய இராசாசியுடன் இணைந்து செயலாற்ற முடிவு செய்து விட்டார். 'கல்வியறிவற்ற கருப் புக் காக்கை' என்றும் அரசியலிலிருந்தே 'கல்லாலடித்துத் துரத்தப் பட வேண்டியவர்' என்றும், எந்தக் காமராசரைப் பார்த்து இராசாசி நேற்றுவரை கூறிவந்தாரோ, அந்தக் கருப்புக் காக்கையுடன் இந்தப் பார்ப்பனக் கிழட்டுக் கழுகு இணையத் தொடங்கிவிட்டது. 'காமராசும் நானும் ஒன்றே' என்று அறிக்கைமேல் அறிக்கை விட்டுத் தன் ஆராக் காதலைப் புலப்படுத்தி வருகின்றது.

'காமராசும் தாமும் ஒன்றே' என்று கூறும் அந்த ஆரியக் கழு கின் மனநிலையைத் தமிழர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். காமராசும் தாமும் ஒன்று என்ருல் எதில் ஒன்று? என்ற கேள்விக்குத் தமிழர்கள் உடனடியாக விடை கண்டுபிடித்தாகல்வேண் டும். காமராசு என்னும் மரமேறிக் கள்ளிறக்கும் ஒருவரும், இராசாசி என்னும் பூணூல் அணிந்த ஆரியப் 'புரோகிதர்' ஒருவரும் ஒன்ருகிவிட் டனர் என்ருல், அதற்கு என்ன பொருள் என்பதைத் தமிழர்கள் விளங் கிக்கொள்ளுதல் வேண்டும். இராசாசியின் குடும்பத்தில் காமராசர் பெண்ணெடுத்துக் கொள்ளலாம் என்பது பொருளா? அல்லது இரா சாசி இனத்துடன் காமராசரின் இனம் கொள்வினை கொடுப்பினை வைத் துக்கொள்ள ஒப்பந்தம் செய்தாயிற்று என்பது பொருளா? அல்லது காமராசரும் பூணூல் அணிந்து கொண்டு ஐயர், ஐயங்கார் என்று பட்டங்கள் சூட்டிக் கொள்ளலாம் என்றும், கருமாதி கல்லெடுப்புகளுக் குப் 'புரோகிதம்' பண்ணலாம் என்பதும் பொருளா?—இவற்றின் எந்தப் பொருளின் அடிப்படையில் இராசாசியும் காமராசும் ஒன்ருகி விட்ட னர் என்பதைத் தமிழர் எனப்படும் ஒவ்வொருவரும் நன்கு அறிந்து கொண்டே ஆகல் வேண்டும்.

'இராசாசியும் காமராசருப் ஒன்றே'—என்று இராசாசியும் வாயி னிக்கக் கூறிக்கொள்ளலாம்; காமராசரும் வயிறு குளிரக் கூறிக் கொள்ளலாம். ஆனுல் "அவர்கள் இருவரும் ஒன்ருகமாட்டார்; அப்படி இருவரும் சேர்ந்து தமிழர்களை—ஏதுமறியாப் பொதுமக்களை எப்படியோ ஏமாற்றத் திட்டமிட்டிருக்கின்றனர்' என்பதை மட்டும் அவர்களின் கர வான எண்ணங்களால் ஏமாறி நிற்கும் ஒருசிலர் தவிர, உண்மைத் தமிழர் ஒவ்வொருவரும் சரியாகப் புரிந்து கொள்வார் என்றே உறுதி யாக நம்புகின்ருேம். காமராசருக்கு வேண்டுமானுல் இராசாசியின் நரித்தனம் புரியாமல் இருக்கலாம். அல்லது புரிந்துதான் இருக்கிறது என்று வெளிப்படையாகக் கூறத் துணிவில்லாமல் இருக்கலாம். அல் லது, அவரை ஏதோ ஓர் அரசியல் காரணத்திற்காகத் துணைக்கழைக் கும் நம்பிக்கைக் குறைந்த தன்மையாகவும் இருக்கலாம். ஆனுல் இங் குள்ள தன்மானத் தமிழர்கள் அவரைப்போல் புரியாதவர்களும் அல் லர்; துணிவற்றவர்களும் அல்லர்; தன்னம்பிக்கை குறைந்தவர்களும் அல்லர். காமராசர் எப்படித் தாம் இழந்த அரசியல் அதிகாரத்தைக் கைப்

www.thamizham.net - Free E book No 7426

பற்றுவதற்குத் தம் நேருக்கு நேரான அரசியல் எதிரியைக்கூட, தோளுக்குத் தோளிணைய அணைக்க முற்பட்டாரோ, அப்படியே இங்குள்ள தன்மானத் தமிழர்களும், தாம்பெற்ற அரசியல் அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள, தத்தமக்குள்ள கருத்துவேறுபாடுகளையும் மறந்து, தோளோடு தோளிணைந்து போராடத் தெரிந்தவர்கள் என்று கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

வாழ்க்கை என்பது எப்படி வெறுமையாக இல்லாமல் ஓர் இலக்கு நோக்கிய வாழ்க்கையாக இருக்க வேண்டும் என்று நாம் சொல்லி வருகின்றோமோ, அப்படியே அரசியல் என்பதும் வெறும் பதவிப் போராட்டமாக இல்லாமல் அறவியலை நோக்கியே போகவேண்டும் என்பதும் நம் கொள்கை. ஆனால் அரசியல் என்றாலே காற்றடித்த பக்கம் சாயும் கயவாளித் தனந்தான் என்று காமராசரும் இராசாசியும் பொருள் கொள்வார்களானால், நாமும் அதே கயவாளித்தனத்தைச் செய்தேனும் இன்றுள்ள அரசியல் நிலைமையைக் காத்துக்கொள்ள முடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகின்றோம். ‘கண்ணுக்குக்கண்’ ‘பல்லுக்குப் பல்’—என்பதை மோசே கால்த்து நெறியாக இதுவரை நாம் நினைத்து வந்தோம். ஆனால் அதுதான் கீதையிலே சொல்லப்பெற்றிருக்கும் அரசியல் மாமந்திரம் என்பதாக இராசாசி கூறுவாரானால், அதைக் கடைப்பிடிக்க இராசாசிக்குமேல் நமக்கும் தெரியும். அப்படிக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நேரமும் தெரியும்.

ஆனால் இராசாசியும் காமராசரும் இணைந்து ஒன்று சேர்வதற்குரிய காரணத்தை இருவருமே தனித்தனியாகக் கூறுவதிலிருந்துதான், அவர்கள் இருவருக்கும் அரசியலைக் கைப்பற்றுவது நோக்கமில்லை என்றும், அவ்வாறு அரசியலைக் கைப்பற்றும் துணிவு அவர்களுக்கு இல்லை என்றும் நாம் கருத வேண்டியிருக்கின்றது. எனவே, அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து ஒருங்கே நடுவணரசையும், தமிழக அரசையும் கைப்பற்றிவிடுவார்கள், அந்த நிலையில் நமக்கும் ஏதாவது கிடைக்காதா என்று நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டு தமுக்கடித்துத் திரியும் அரசியல் தித்திருக்கக்காரர்களை அவ்வாறு எண்ணி ஏமாறிவிட வேண்டா என்று எச்சரிக்கின்றோம்.

இனி, நானும் காமராசரும் ஒன்று—என்று இராசாசி கூறுவதற்குரிய அடிப்படை நோக்கந்தான் என்ன? அவர் அறிக்கை கூறுவது இது: (தமிழ்ப் படுத்தாமல் அவரின் அம்மாமித் தமிழிலேயே தருகிறோம்) “முதலாவது என் எச்சரிக்கை நாஸ்திக வலையில் சிக்கிக் கொள்ளாதீர்கள். பகவானுடைய கருணை இருந்தால்தான் எல்லாக் காரியங்களும் வெற்றி பெறும். கண்ணுக்கு எட்டாத ஒரு பரம்பொருள் பிரபஞ்சத்தையெல்லாம் ஆண்டு வருகின்றது. அந்த ஆதர்சயமான பரம்பொருள் வியக்த ரூபமாக ஸர்வாச்சர்யமயமான ஆகாயத்தில் நம்முடைய பூவுலகத்தைப் பொறுத்தமட்டில் கண்ணைக் கூசும் ஜோதியாக சூரியன் ஜொலிக்கிறான். பௌதீக விஞ்ஞானிகளும்கூட சூரியனுடைய இயல்பை முற்றிலும் அறிந்ததாகச் சொல்லமாட்டார்கள். சூரிய பகவான் இந்த பூவுலகத்திலுள்ள ஜீவன்களுக்கெல்லாம் மரம், செடி, கொடி உள்பட எல்லா ஜீவராசிகளுக்கும் தாயும் தகப்பனும் ஆவான்.

www.thamizham.net - Free E book No 7426

நம்முடைய உயிருக்கு வேண்டிய எல்லாவற்றையும் தரும் தெய்வம்
சூரியன். அந்த தெய்வத்தின் தேஜஸை நாம் தியானிப்போமாக.
பக்தியுடன் தியானித்தால் அது நம் உள்ளங்களை யெல்லாம் சுத்த
மாக்கி நம்முடைய எண்ணங்களை யெல்லாம் நல்லமுறையில் நடத்தும்.
சூரிய பகவான்தான் நமக்குப் பலம், விவேகம், அன்னம், ஆரோக்
கியம், எல்லாம் தரும் தெய்வம், இதுவே மகாமுனிவர் உலகத்துக்குத்
தந்த காயத்ரீ மந்திரம். சூரிய பகவானுக்கு நாம் செலுத்தும் பக்தி
நம்முடைய நோக்கங்கள் எல்லாம் வெற்றி பெறச் செய்வதாக! இந்த
மாநாட்டில் சுருக்கமாக நான் சொல்லும் செய்தி என்னவென்றால்,
இது முதற்கொண்டு நானும் காமராசரும் ஒன்று என்பதை உணர்வீர்
களாக. தேசம் அபாய நிலையில் இருக்கிறது. நாம் இருவரும் தேசத்
தின் நலனுக்காக ஒரு நுகத்தடியின் கீழ் வண்டியை இழுத்துச்
செல்வோமாக. எங்களுடன் உழைப்பவர்கள் எல்லோருக்கும் என்னு
டைய ஆசீர்வாதம்''-எப்படி, அறிக்கை? 'சத்வேத சதஸௌக்கோ, சூரிய
பகவானின்' கோடியார்ச்சனைக் கும்பாபிஷேகத் திருவுத்ஸவத்'திற்கோ
விடுக்கப்பெற்ற ''ஸௌர்ய நாம ஸங்கீர்த்தனம்' அன்று இது. ஓர்
அரசியல் மூதறிஞர் (!) என்று விளம்பரப்படுத்தப்பெறும் பூணூல்
அறுக்காத, ஒரு 'சுத்த' 'வைதீக' ஆரியப் 'பிராமண'ராகிய இராசாசி
என்னும் ஓர் அரசியல் கட்சியின் வழிகாட்டி, அண்மையில் சேலத்தில்
கூட்டப்பெற்ற அவரது கட்சி மாநாட்டிற்கு விடுத்த செய்தி!

இப்பொழுது சொல்லுங்கள்; அவர் அரசியலைப் பற்றி ஏதாவது
கவலைப்படும் செய்தி இதில் எங்காவது வருகின்றதா? அல்லது ''இந்
நாட்டு மக்களெல்லாம் அறியாமையிலும் வறுமையிலும் சிக்கித்
தொல்லைப்படுகின்றனர். அவர்களை மீட்பதற்கு எவரும் முன்வரவில்லை.
நானும் காமராசரும் இந்நாள் வரையிற் பிரிந்திருந்தோம். ஆனால் இன்
றைய மக்களோ நாளுக்குநாள் முன்னேற்றம் அடையாமலேயே இருக்
கின்ற நிலையைப் பார்க்கின்ற பொழுது, நாங்கள் இருவரும் பிரிந்திருப்,
பது எனக்குச் சரியாகப் படவில்லை; எனவே ஒன்று சேர்ந்து, மக்க,
ளெல்லாரும் தாங்கள் தாங்கள் கற்பித்துக்கொண்ட குல, இன வேறு
பாடுகளை அறவே நீக்கிக் கொள்ளவும், சம வாய்ப்புடன் கல்விகற்க
வும், நாட்டு நலன்களை ஒருமித்து நுகரச் செய்யவும் பாடுபடுவோம்,
அதற்கு முன்னேடித்தனமாக இதோ பாருங்கள் என் மேனியிலிருந்த
பூணூலைக் கழற்றி யெறிந்து விட்டேன். விட்டு வைத்திருந்த ஓரிரண்டு
வெள்ளை மயிர்களையும் பிடுங்கி எறிந்து விட்டேன்; இன்றிலிருந்து
நானும் காமராசரும் ஒன்றே!'' —என்ற முறையில் இவ்வறிக்கையில்
கூறப்பெற்றிருக்கின்றதா? இல்லையே! பின் காமராசரும் தாமும் ஒன்று
என்று மக்கள் ஏன் கருதிக்கொள்ள வேண்டும்- என்று இராசாசி குறிப்
பிட்டிருக்கிறார் என்று கேட்கின்றீர்களா? ' மக்களே, தேசம்அபாயநிலை
யில் இருக்கின்றது, அஃதாவது நாஸ்திக வலைவிரிக்கப் பெற்றிருக்கின்
றது. அதில் சிக்கிக்கொள்ளாதீர்கள். அதில் சிக்காமல் இருக்கவேண்டு
மானால், சூரிய பகவானைக் காயத்ரீ மந்திரத்தால் பக்தி செய்து உங்க
ளைச் சுத்தமாக்கிக் கொள்ளுங்கள். காயத்ரீ மந்திரம் தெரியவில்லை
என்று கவலைப்படத் தேவையில்லை; என் ஜாதிக்காரர்கள் அங்கங்கே
இருக்கிறார்கள்; இதோ, என் பக்கத்தில் உள்ள கருப்புக் காக்கை காம
ராஜை நான் காயத்ரீ மந்திரத்தால் ஆசீர்வாதம் செய்து சுத்தப்படுத்தி

www.thamizham.net - Free E book No 7426

விட வில்லையா? அப்படியே சுத்தப்படுத்துவார்கள். நீங்களும் உடனே 'சோப்பு' 'கீப்பு' என்று ஒன்றும் போட்டு 'ஸ்நானம்' பண்ணுமலேயே சுத்தமாகி விடுவீர்கள்" என்று பச்சையாகப் பொருள் படும்படியும் "இத்தகைய நம்இனக்காப்பு வேலைகளுக்காகவே காமராஜ விபீஷணத் தலைவரைத் துணையாகக் கொண்டுள்ளேன்; அவரும் இனிமேல் என் சொற்படி நடப்பதாக உறுதி கொடுத்துள்ளார்'- என்றும், அவர்களுக்கு விளக்கியிருக்கின்றார். இந்தப் பொருளைத் தவிர அந்த அறிக்கையில் வேறு என்ன எழுதப்பட்டிருக்கின்றது என்பதைஎந்தச்'சுதேசமித்திர'னு வது, 'தினமணி'யாவது, 'கல்கி'யாவது, 'ஆனந்தவிகட'னுவது, 'துக்ளக்'காவது அல்லது எந்த வீடணப் பிரகலாதனுவது விளக்கிக் கூற முடியுமா?

இராசாசி என்ன 'சூரியபகவானு'க்குத் தாத்தாவா? அல்லதுபெய ரனு? அல்லது 'புரோகிதரா'? சூரியன் 'ஜகஜ்ஜோதியாக' 'ஜொலிப்பது', மூதறிஞர்(!) இராசாசி சொல்லித்தான் உலகத்திற்குத் தெரியுமா? 'அவன்தான் இந்தப் 'பூவுலகத்திலுள்ள ஜீவன்களுக்கெல்லாம், மரம், செடிகொடி உட்பட எல்லா ஜீவராசிகளுக்கும் தாயும் தகப்பனும் ஆவான்' என்றால், அவன் பிள்ளைகளாக உள்ள நமக்குள் ஏன் பூணூல் தன்மையும், பூணூலற்ற தன்மையும்? பூணூல் போட்ட பார்ப்பனப் புரோ கிதர்கள் எந்தச் சூரியனுக்குப் பிறந்தவர்கள்? போடாதவர்கள் எந்தச் சூரியனுக்குப் பிறந்தவர்கள்? 'சூரியபகவான்தான் நமக்குப் பலம், விவேகம், அன்னம், ஆரோக்கியம், எல்லாம்' என்றால், சீனனுக்கும், உருசியனுக்கும் அமேரிக்கனுக்கும் வேறு சூரிய பகவானு இவற்றைக் கொடுத்துவருகின்றான்? காயத்ரீ மந்தரத்தால் தினம் 'பக்தி செலுத்தித், தியானித்து' அவன் 'தேஜஸைப்' பெறவிரும்பாத அவர்களுக்கு, இந்த இராசாசியின் தாத்தாவான சூரியபகவான் எதற்காக நம்மை விடப் 'பலம்', 'விவேகம்', 'அன்னம்,, 'ஆரோக்கியம்' முதலிய எல்லா நலன்களையும் தரவேண்டும்? நாள்தோறும் ஆயிரக்கணக்கான பிரா மணப் 'புரோகிதர்கள் பல்லாயிரக்கணக்கான நீர்நிலைகளில் நின்று கொண்டு, காலையும் மாலையும் 'காயத்ரீ' மந்திரத்தைச் சொல்லிப் 'பக்தி'யுடன் 'தியானிக்'கும் இந்த நாட்டில் ஏன் அறியாமையும், பஞ்ச மும், பட்டினியும் தாண்டவமாட வேண்டும்? சூரியத் 'தாத்தா'வையே அளந்தறிய முற்படும் அறிவியல் காலத்தில் எதற்காக இந்தப் பித்த லாட்டமெல்லாம்? இராசாசிக்கு மூளைக் குழப்பமா என்ன? நாட்டின் மேலாளுநர் (Governor General)ஆக இருந்த ஒருவர், பச்சையாகப் புளுகி இந்த அளவில் மக்களை ஏமாற்றுவதா? இந்தக் கொடுமை எந்த நாட்டில் நடக்கும்? இவர் எப்படியோ உளறிக் கொட்டிக்கொண்டு கிடக் கட்டும்! இந்தக் காமராசருக்கு என்ன வந்தது? ஏன் அவருடைய மூளை இப்படியெல்லாம் போனது? தெளிவான கொள்கையும், கருதியதைச் செய்யும் துணிவும், வல்லமையும் படைத்தவராகக் கருதப்பெற்று வந்த அவருக்கு ஏன் இந்த இழிநிலை வந்தது?

'அவரவர் தலையெழுத்துப்படி படிக்கட்டுமே!'—என்று அன்று இராசாசி கூறியதற்கு வெகுண்டெழுந்து, "தலையெழுத்தா? எவனதை எழுதினன்; கொண்டுவா; நான் அதை மாற்றி எழுது

www.thamizham.net - Free E book No 7426

கிறேன்'' என்று '67 தேர்தலில் கூட்டந்தொறும் முழங்கி வந்தவர், '72 வருவதற்கு இரண்டாண்டு இருக்கையிலேயே, தம் தலையெழுத்தை மாற்றி யெழுதும்படி ஏன் இராசாசியிடம் போய்த் தலையைக் குனிந்து கொடுத்தார்? தூ...! இதுவும் ஓர் அரசியல் பிழைப்பா? இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற வீடணப் பிரகலாதன்களான பக்தவத்சல, சுப்பிரமணியன்களை ஏற்கனவே தலையாய 'சீடர்'களாக ஏற்றுக் கொண்டிருக்கும் இராசாசியிடமே காமராசர் மூன்றாந்தரச் 'சீடரா'கப் போய்ச் சேர்ந்ததைப்போல 'நல்லடிமைக் கதை' தமிழக வரலாற்றிலேயே இல்லை என்ற குறைபாட்டைக் காமராசர் நீக்க முற்பட்டு விட்டாரா? இத்துணை இழிவோடு அரசியல் நடத்தி எந்த மக்களை வாழ வைத்துவிட உறுதி பூண்டுள்ளது இவ்வுருவம்? இந்த அரசியல் முல்லை (கற்பு)மாறித்தனங்களையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, இத் தகைய அரசியல் நாடகமாடிகள் இக்கால் தலையாய அரசியல் சிக்கலாக்கி வாழ்வு நடத்த முற்பட்டிருக்கும் பயிற்சி மொழித் திட்டத்தைப் பற்றிச் சிறிது பார்ப்போம்.

தமிழக அரசின் பயிற்சி மொழித் திட்டம், மிகத் தெளிவானதும் செப்பமானதுமாகும். இஃது ஏற்கனவே இருந்த பேராயக் கட்சியின் ஆட்சியிலேயே உறுதிப்படுத்தப் பெற்ற திட்டமேயாகும். இத்திட்டச் செயற்பாட்டில் எவ்வகைப் பதற்றமோ, உணர்ச்சி வயப்பட்ட நிலையோ இன்றுவரை ஏற்பட்டதே இல்லை. இது பற்றிய இன்றைய அரசின் கொள்கை இது:

(1) தாய்மொழி (அஃதாவது தமிழ் நாட்டிற்கு) தமிழ், நாட்டு மொழி (அஃதாவது இந்தியாவில் மிகுதியான பெயர்களால் பேசப் படுவதாக நடுவணரசின் வெறியர்களால் விளம்பரப்படுத்தப்பெற்ற) இந்தி, உலக மொழியாகவும், அறிவியல் மொழியாகவும் உள்ள ஆங்கிலம் என்னும் மும்மொழித் திட்டம் தேவையற்றது. தமிழும், ஆங்கிலமுமே போதும் என்ற இரு மொழிக் கொள்கையே சரியான கொள்கை என ஏற்கப் பெற்றது. இக்கொள்கையையே மக்கள் ஏற்றுக் கொண்டனர் என்பதற்கு, மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்ட பேராயக் கட்சியைத் தேர்தலில் தோல்வியுறச் செய்து மூலையில் அமர வைத்ததே சான்றாகும்.

(2) தாய்மொழியாகிய தமிழைப் பல வகையிலும் ஆங்கில மொழிக்கு ஈடான மொழியாக ஆக்குவதும், உலகத் தொடர்புக்குரிய ஆங்கிலத்தில் போதிய அளவு திறமையுள்ளவர்களாக எதிர்காலக் குடிமக்களாகிய மாணவர்களை ஆக்குவதும்;

www.thamizham.net - Free E book No 7426

*(3) இதுவரை ஆங்கில மொழி வழியாகப் பயிற்றுவித்த நிலையைப் படிப்படியாக மாற்றித் தமிழில் அறிவியலையும் பிற துறைகளையும் கற்பிப்பது.*


*(4) ஆங்கிலத்தில் திறமையுள்ள மாணவர்களுக்கு மட்டும், அவர்கள் விருப்பினுல், ஆங்கில மொழியிலேயே கல்லூரிக் கல்வியைக் கற்பிப்பது. ஆங்கிலத்தில் திறமைக் குறைவான மாணவர்களுக்கு மட்டும் அவர்கள் தாய்மொழியாகிய தமிழிலேயே கற்பிப்பது.*

இத்திட்டங்கள்தாம் தமிழக அரசின் பயிற்சிமொழித் திட்டம். இவ்விடத்தில் எல்லாரும் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். கல்வி என்பது ஒரு மொழியைக் கற்பது அன்று. ஏதாவது ஒரு மொழிவழியே உலக அறிவைப் பெறுவதே கல்வி. எனவே உலகிலுள்ள எல்லாத்துறை அறிவையும் தமிழ்மொழியாகிய தாய்மொழி வழியாகவே கற்பிக்க வேண்டித், தமிழ் மொழியில் அதற்குரிய கலைச் சொல்லாக்கம் நடைபெற்றுக், கல்லூரிக் கல்விக்கான பாடநூல்களை ஆக்கும் வேலையில் கவனம் செலுத்தப்பெற்று, இத்திட்டம் நன்ருகச் செயல்பட ஊக்கமளிக்கப் பெற்று வருகின்றது. ஆங்கில மொழியில் வழிவழியாகத் திறம்பெற்று வருபவர்கள் இராசாசி இனத்துப் பார்ப்பனர்களே என்பதாலும், அவர்கள் ஆங்கிலக் கல்வி கற்று எத்துறையிலும் நம் தமிழ் மாணவர்களை விஞ்சக்கூடும் என்று கண்டதாலும், தமிழ்வழிக் கல்வி கற்கும் தமிழ் மாணவர்கள் வாழ்க்கை நிலையில் பின்தங்கிவிடக் கூடாதே என்பதற்காகத் தமிழைப் பயிற்று மொழியாக் கொண்டு கல்லூரிக் கல்வி கற்றவர்களுக்கே, தமிழை ஆட்சி மொழியாகக்கொண்ட அரசினர் அலுவல் துறைகளில் முதலிடம் தருவது என்று அரசு முடிவு செய்தது. இதில் இராசாசி இனத்தார் கொதிப்படைவதிலேனும் கொஞ்சம் பொருளுண்டு. காமராசர் கொதிப்பதற்கு என்ன பொருள் என்று நமக்கு விளங்க வில்லை. ஆரியப் பார்ப்பனர்களே எல்லா மாநிலங்களிலும் எல்லா நாடுகளிலும் எல்லாத் துறைகளிலும் புகுந்து வாழ்வு நலன்களை நுகர்ந்து கொண்டு வருகையில், தமிழ்வழிக் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் தமிழ் நாட்டில்கூட வாழ்தற்கு வழி செய்யாத நிலை எப்படிச் சரியாகும்? இதைப் புரிந்து கொள்ளாத தமிழ் மாணவர் சிலரும், பார்ப்பன மாணவர்களுடனும் காமராசர் போன்ற காட்டிக்கொடுப்பான்களுடனும் சேர்ந்துகொண்டு தங்கள் எதிர்கால வாழ்க்கைக்கே வளங் கொடுக்கும் இத்திட்டத்தை ஏன் எதிர்க்க வேண்டும்? பதற்றமடைந்துள்ள மாணவர்கள் நன்கு எண்ணிப்பார்க்க வேண்டுகின்றோம்.

www.thamizham.net - Free E book No 7426

இத்தகைய குழப்பங்களை யெல்லாம் நோக்குகையில், பார்ப்பனர்களுடன் இணைந்து வாழும்வரை, அவர்களின் தனி நலத்திலேயே முழுக்கவனமும் செலுத்திக் கோடி கோடியாகப் பொதுப் பணத்தைக் கொட்டியழும் நடுவணரசுடன் இணைந்து போகும் வரை, நமக்கென்று —நம் மக்களுக்கென்று எந்தத் தனித் திட்டத்தையும் வகுத்துக் கொள்ளக்கூட நமக்கு உரிமை கிடைக்காது என்றே எண்ணவேண்டியுள்ளது. கோயில் பூசனை முறைகள் போன்ற ஒரு சில துறைகளில் ஏற்படும் திருத்தங்களுக்குக்கூட எதிர்ப்புக் காட்டும் இப்பார்ப்பனச் சலசலப்புக்கெல்லாம் இனி விடை சொல்லிக்கொண்டிருக்கத் தேவையில்லை என்றே நாம் கருதுகின்றோம்.

எனவே நம் தமிழக அரசினரும், தன்மானம் மிக்கத் தமிழர்களும் இனித் தமிழகப் பிரிவினைக்குப் போராடித்தான் தீரல் வேண்டும். என்ற நிலை உருவாகிவிட்டது. எனவே தன்மானத் தலைவர் பெரியார் அவர்கள் விடுதலைப் போராட்டத்தை உடனடியாகத் தொடங்கி, எதிர்காலத் தமிழ் மக்களையேனும் முழுவுரிமைபெற்று தமிழ்நாட்டில் வாழச் செய்வதற்கு வழிவகுக்க முன் வருதல் வேண்டும் என்று தலைவணங்கிக் கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு போராட்டந் தொடங்கின் நாமும் எம்மைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மறவர்களும் அவர்தம் கட்டளைக்குத் தலைவணங்கி, அவர் இட்ட கட்டளையை ஏற்று, எந்தமிழுக்காகவும் இந்நாட்டிற்காகவும் போராடுவோம் என்று சூளுரைத்துக் கூறுகின்றோம். அந்த நல்ல நாள் விரைவில் வருவதாகுக!



**மதுரை மாநாட்டுக்கு வரும் அன்பர்களுக்கு ஒரு நற்செய்தி!**

மதுரை மாநாட்டில் பழைய தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்கள் பாதி விலைக்குக் கிடைக்கும். இவ்வரிய வாய்ப்பை அன்பர்கள் பயன்படுத்திக் கொள்க.

**தென்மொழி விரைவில் மாத ஈரிதழாக வெளிவரும்!**

www.thamizham.net - Free E book No 7426



# நூறாசிரியம்

துரை-மாணிக்கம்.

## பாட்டு: உக.

முற்றச் சிலம்பியின் நுண்ணிழை பெய்த
அற்றங் காவா ஆடை போர்த்து
மறுகிடை அசையும் மடக்கொடி யோயே!
நாண்மிக வுடைத்தே நிற்பெண் டகையே!
என்கொல் அறிகிலம் நின்னுளக் கிடக்கை?
இளம்பொன் மேனி எழிற்காட்டு வையினே
மைம்புகை யாடி ஒளிமழுக் கல்போல்
மெய்யுமிழ் வனப்பை நின்னுடை மறைக்கும்!
ஆகலின் அக்கலை அகறலும் நன்றே!
ஈங்கிது பெண்மைக் கிழுக்கென் பையினே,
யாங்குநிற் குணர்த்துவ னம்மே? தூங்கெழில்
ஏதென நூலோர் இயம்பின ரென்னின்
பூங்குழன் மாதர்க்குப் பொருந்துநல் நாணும்,
விரையொளி நுதலோர்க்குப் புரையிலா நெஞ்சும்,
துவர்வாய்க் கனியோர்க்குத் தவறிலா நடையும்,
அச்சக் கதவமும் எச்சமில் உரையும்,
என்றிவை தாமே யன்றிப் பிறவே
வென்றி ஆடவர் உளம்வீழ்த் தாவே!

பொழிப்பு:

*மனைமுற்றத்துக் கட்டிய சிலம்பியினது நுண்ணிய வலையின் இழையினைக் கொண்டு நெய்வது போலும், மறைவிடங்களைக் காவாமல் வெளிப்படுத்திய மெல்லாடையை உடுத்து, மாந்தர் புழங்கும் தெருக்களிடையே அசைகின்ற நடையினளாய்ச் செல்கின்ற இளங் கொடி போன்றவளே! மிக்க நாணுமாறு உடையது நின் பெண்மைத் தன்மை. நின் உள்ளத்து ஊறிக்கிடக்கும் எண்ணம் எதுவோ என அறிகிலம். இளமைக் கொழுமையும் பொன்போலும் அழகுச் செழுமை*

www.thamizham.net - Free E book No 7426

யும் வாய்ந்த நின்மேனியினது முழு அழகையும் எல்லார்க்கும் கர வின்றிக் காட்டுதற்கு விரும்புவையாயின், கருமையான புகையேறிய ஆடி உள்ளிருக்கும் சுடரொளியை மழுக்கிக் காட்டுவதுபோல், நின் உடல் வெளிப்படுத்தும் கட்டழகை நீ போர்த்துள்ள இம் மெல்லிய உடையுங்கூட மறைத்து விடும். ஆகலின் அதனையும் அகற்றி விடு தலே நின் கருத்துப்படி சிறந்ததாகும். இவ்வாறு செய்வது பெண் மைக்கே இழுக்காகும் என்பையாயின், அம்மே, நினக்குப் புரியுமாறு உணர்த்துவது எப்படி?

செறிந்திருக்கின்ற அழகு என்பது யாது எனச் சான்றாண்மை மிக்க நூலாசிரியர் எதனை இயம்பினர் எனில், பூப்பொதிந்த கூந்தலை யுடைய கவர்ச்சிமிக்க பெண்டிர்க்கு என்றும் அப்பூப்போலும் பொருந் தியிருந்து அழகும் நன்மையும் தருவதாகிய நாணமும், மணமும் ஒளியும் நிறைந்த நெற்றியை உடைய மகளிர்க்குக் குற்றமிலாத உள்ளமும், செங்கனிபோலும் வாயை உடைய அவர்களுக்குத் தவறு சேராத ஒழுகலாறும், அப் பெண்மையைக் காவல் செய்வதாகிய அச் சம் என்ற கதவும், குற்றமில்லாத உரையும்-என இவை தாமே அல்லாது அப்பெண்டிரை வெற்றி கொள்ளக் கருதும் ஆடவர் தம் உள்ளத்தை வீழ்த்தி அடிமைப் படுத்துவன வேறு அல்ல.

விரிப்பு:

இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

பெண்டிர்க்கு வேண்டிய தற்காப்புப் பண்பியலை நெகிழ விட்ட ஓர் இளமகள் தனக்கு, அவள் கைக்கொள்ள வேண்டிய அரும் பண் பியல்களைக் கூறி, சான்றோர் அறிவுறுத்தியதாகும், இப்பாட்டு.

ஆடவரைக் கவர்வதன் பொருட்டு, உடலின் அகவெழிலைப் புறங் காட்டும் ஆடையுடுத்து நடைபயிலும் ஓர் அழகிக்கு, அவ்வெழிற் புனைவுகளால் மனக்கிளர்ச்சி யுறுவார், ஆண்மை குறைந்த ஆடவர் தாம் என்பதையும், ஆண்மை மிக்க ஆடவர் அவற்றிற் கருத்து வையார் என்பதையும், அத்தகைய ஆடவருள் ஒருவன் மனத்தைக் கவர்ந்திழுத்து அவன் அன்பைப் பெறவேண்டின், பெண்மைக்குகந்த நாணும், புரையில் நெஞ்சும், தவறற்ற நடையும், அச்சமும், குற்றமு மிலாத உரையும் ஆகிய பண்புகளே என்றும் அறிவு கொளுத்தினர் என்க.

முற்றச் சிலம்பியின் நுண்ணிழை: மனையின் முற்றத்தே கட்டி யிருக்கும் சிலந்திவலையின் நுண்ணிய இழை. காட்டுச் சிலந்தியின்

www.thamizham.net - Free E book No 7426

வலையின் இழையினும் வீட்டுச் சிலந்தியின் வலையிழை மெல்லி தாகையால் முற்றச் சிலந்தி கூறப்பெற்றது.

பஞ்சினின்று இழுக்கப் படுவதால் நூல், இழை எனப்பெற்றது. சிலந்தியினதும் அதுவே.

பெய்த: இடைச்செருகிப் பின்னிய-நெய்த.

அற்றங் காவா ஆடை: மறைப்புறுப்புகளைக் காவாமல் வெளிப் படுத்தியவாறு நெய்த மெல்லிய ஆடை.

போர்த்து: மேலே போர்த்துக் கொண்டு. உடுத்தல் என்னது போர்த்தல் என்றமையான், அவை உடுத்தியிருந்த முறை அறியப் பெறும்.

மறுகிடை: தெருவிடை. விளவும், வீடுமின்றி இடைக்குறை யாக இருத்தலின் தெரு மறுகு எனப்பெற்றது.

அசையும் மடக்கொடி யோயே: அசைந்து செல்லும் இளங் கொடிபோன்றவளே! மடப்பம்-இளமை. மடமை மிக்க கொடியவளே என்றும் சிறப்புப் பொருள் கொள்க.

நாண்மிக வுடைத்தே நிற்பெண் தகையே: நினக்குற்ற பெண் தகைமை பார்ப்போர்க்கு நாணத்தை உண்டாக்குகின்றது. பெண் மைக்கு நாணம் அணிகலன். அஃது அவளிடத்தில் இல்லாமையால் அவளைப் பார்ப்போர் நாணமுற வேண்டியிருக்கின்றது என்க.

என்கொல் அறிகிலம் நின் உளக் கிடக்கை: நின் தோற்றத் தைப் பார்க்குங்கால் நினக்குற்ற கருத்து யாதெனப் புலப்படவில்லை. உளக்கிடக்கை என்பது அடிமனத்தே புதைந்து கிடந்து எவர்க்கும் எளிதே புலப்படாத ஆசை என்க. கிடத்தல்-தோய்ந்து கிடத்தல்.

இளம் பொன் மேனி எழில்காட்டுவையினே; பருவப் பூரிப்பும் பொன்மையும் சான்ற அழகிய உறுப்புகளைக் காட்ட விழைவது நின் கருத்தாயின்.

அவளின் புறத்தோற்றம் காண்பவர் ஒருவேளை அவளுக்குற்ற எண்ணம் அதுவோ என ஐயுறவேண்டியிருந்த தென்க.

மைம்புகை யாடி: கரிய புகை தோய்ந்த கண்ணாடிக்குமிழ்.

ஒளிமழுக்கல் போல்: விளக்கின் சுடரொளியை மழுக்கிக் காட்டு வதுபோல்.

www.thamizham.net - Free E book No 7426

கரிய புகை தோய்ந்த கண்ணாடிக்கூமிழ், உள்ளிருக்கும் ஒளியை ஒருவாறு காட்டினாலும் தெளிவுறக் காட்டாமைபோல், அவள் உள்ளுறுப்புகளின் எழிலை அவள் போர்த்தியுள்ள மெல்லாடை முற்றும் வெளிப்படுத்தாமற் போயினும் ஒருவாறு மழுக்கமுறக் காட்டிய தென்க. இங்கு உள்ளுறுப்புகளை முழுவதும் காட்டவேண்டும் என்பது அவள் கருத்தாயின், அஃது அவள் அணிந்துள்ள உடையால் நிறைவுறவில்லை என்பது குறிக்கப்பெற்றது.

ஆகலின்.......... நன்றே: ஆகையால் அவள் அவ்வுடையையும்கூட அகற்றி விடுதல் நன்று என்று அவட்கு மானம் புலப்படச் சுட்டிச் சொல்லப் பெற்ற தென்க.

ஈங்கிது: இப்படிச் செய்வது. அஃதாவது அவ்வுடையை முற்றும் அகற்றுவது,

பெண்மைக்கு இழுக்கு என்பையினே; (அவ்வாறு செய்வது) பெண் தன்மைக்கே இழுக்காகும் என்று சொல்வாயானால்.

யாங்கு நிற்கு உணர்த்துவன் அம்மே! நீ கொண்ட தோற்றத்தால் பெற்ற இழிவை எவ்வாறு நினக்குப் புரியுமாறு உணர்த்துவது, அம்மே!

தூங்கெழில்: செறிந்த அழகு,

ஏதென............என்னின்: எதுவென்று அறநூல் எழுதிய சான்றோர் எடுத்துக் கூறுவர் என்று கேட்பாயானால்,

பூங்குழன் மாதர்க்கு: பூவை மிடைந்த கூந்தலையுடைய மாதர்க்கு.

பொருந்து நல்நாணும்: பொருந்துகின்ற நல்ல நாணையும். அழகுவேண்டி எங்ஙன் கூந்தலுக்குப் பூவைச் சூட்டுகின்றனரோ, அவ்வாறே பெண்மைக்கு அழகு வேண்டின் நாணத்தைச் சூட்டிக் கொள்ளுதல் வேண்டும் என்று குறிப்புணர்த்தியவாறு,

விரையொளி..........நெஞ்சும்: மணமும் ஒளியும் பொருந்திய நெற்றியை உடைய பெண்டிர் தம் பெண்மைக்கு மணமும் ஒளியும் சேர்ப்பதாகிய குற்றமற்ற உள்ளத்தையும்.

துவர்வாய்.........நடையும்: சிவந்து கனிபோலும் விளங்குகின்ற வாயையுடைய பெண்டிர்களுக்குத் தவறு சேராத ஒழுகலாறும்

www.thamizham.net - Free E book No 7426

வாய், செம்மையாய் இருத்தல் போலவே நடையும் செம்மையாய் இருத்தல் வேண்டும் என்பதாம் என்க.

அச்சக் கதவமும்: பூரியர்க்கு அச்சமூட்டுகின்ற, அல்லது தான் அஞ்சியொடுங்குகின்ற தன்மையும். இது பெண்மைக்குக் காப்பாக அமைதலின் கதவம் எனலாயிற்று.

எச்சமில் உரை: குறையற்ற உரை. குற்றமற்ற சொல். இது பிறர் தம்மேல் சொல்லுதலும், தாம் பிறர்பால் உரைத்தலும் என இரு வகைப் பொருளையும் தரும்.

என்றிவை தாமே அன்றி: இங்குக் கூறப்பெற்ற பண்பியல்புகள் மட்டுமே அல்லாமல்.

பிறவே: நீ உடுத்துக் கொண்டிருக்கும் மெல்லிய உடைகளோ, உறுப்புகளைப் பிறர் பார்த்து மனமயக்கமுறும்படி வெளியில் காட்டுவது போன்ற பிறவகையில் செய்யும் புனைவுகளோ.

வென்றி ஆடவர். வெற்றி பொருந்திய ஆடவர், ஆண்மை மிகுந்து விளக்குந் தன்மையர்

உளம் வீழ்த்தாவே: உள்ளங்களை ஈர்த்து உன் அடிகளில் வீழ்த்த மாட்டா.

பெண்மைக் கிழிவான நின் செயல்களால் கவர்ச்சியுறுவோர் ஆண்மை நிறைந்தவர் ஆகார். நின் இழிந்த தோற்றத்தால் அவர்தம் ஆண்மையில் தோல்வியுற்று நிற்றலால் நீயே வென்றவளாகின்றனை. ஆனால் உண்மையான பெண்மையை சிலர் வெற்றி கொள்வதால், அவரே உண்மையான ஆண்மை மிக்கவராகவும் வென்றவராகவும் ஆகின்றனர். எனவே அத்தகையோரே வென் ஆடவர் எனக் கூறத்தக்கவராவார்.

பெண் தனக்கியல்பாகிய நாணத்தையும் அச்சத்தையும் துறந்த விடத்தும் ஆடவரில் சிலர் அல்லது பலர் அவளை விரும்புவராயினும், அத்தகையோர் நல்லாண்மை அற்றவர் என்றே சான்றோரால் கருதப் பெறுவர் என்க. அவ்விழிந்த மன நெகிழ்ச்சியுடையவர் அவளைத் தொடர்ந்து விரும்புதற்கும் பேணுதற்கும் இயலாது, மேலும் மேலும் அத்தன்மை வாய்ந்த புதுப்புதுப் பெண்டிரையே விரும்பி நுகரத் தலைப்படுவர். ஆகையால் அவர் நிறைந்த ஆண்மை உடையவராகக் கருதப்படுவதிலர். என்னை? நிறையுடைமை கட்டழிந்து

www.thamizham.net - Free E book No 7426

போயின் வல்லாண்மை பெறுவதெங்ஙன்? பிறன் மனை நோக்காத தன்மையே பேராண்மை—என்று கூறப்பெறுவதையும் காண்க.

உடல் உறுப்புகள் வெளிப்படுமாறு ஆடை உடுத்தும் பெண்மையின் இழிவுத் தன்மையை நீக்குமாறும், ஆடவரை அத்தன்மையால் கவர்தல் அவர்க்குக் கருத்தாதலின் அவ்வுறுப்புகளை வெளிக்குக் காட்டாவாறு மறைத்தலே மனவியல்படியும் அறவியல்படியும் பொருந்துவதாம் என்றும், அவ்வாறின்றி அகப்புறப் படுத்தும் ஆடை உடுப்பதால் விளையும் கவர்ச்சிக்கு நல்லாண்மை சான்றவர் மயங்கார் ஆதலின் அத்தன்மை வாய்ந்த பெண்டிர்க்கு ஆண்மைக் குறைவுடைய ஆடவரே துணைவர்களாய் வாய்த்து விடுவர் என்றும், நாணமும், புரையிலா நெஞ்சும், தவறு சாரா வொழுங்கும், அச்சம் நிறைந்த காவலும், இழிவு தோயாத உரையுமே நிறைந்த பெண்மைக்குக் காப்பும் அழகும் என்றும், இத்தகைய நிறை பெண்மைக் குணங்களாலேயே ஆண்மை மிக்கவோர் ஆடவனைத் துணையாகத் தேர முடியும் என்றும், அவ்வாறு தேரும் பெண்ணும் தேரப் பெற்ற ஆணும் போன்றவர்களாலேயே இவ்வுலகம் நிறைந்த பயனெய்த முடியும் என்றும் அறிவுறுத்துவது இப்பாட்டாம் என்க.

இது புறத் திணையும், முதுமொழிக்காஞ்சி என்னும் துறையுமாகும்.


தனித்தமிழ் வளர்க்கும் புதிய ஏடு.

**அறிவு**

திங்கள் ஈரிதழ்.

ஆசிரியர். மு. தமிழ்க் குடிமகன், க. மு.

தனியிதழ் 15 காசு. ஆண்டொப்பம். 3-50.

தேவைக்கு எழுதுக.

அறிவு

அல்லி அச்சகம், கோரிப்பாளையம்—மதுரை-2.

உ. த. க. விற்கென ஒரு கொள்கை முரசம்.

உ. த. க-வின் அதிகார இதழ்.

**முதன் மொழி**

ஆசிரியர்: பேரா. தி. வை. சொக்கப்பனார், க மு.

தனியிதழ்: 20 காசு. ஆண்டொப்பம். 2-50.

பிறவிளக்கங்களுக்கு,

முதன்மொழி

'தமிழ்க் குடில்', அளகாபுரம், சேலம்-4.


www.thamizham.net - Free E book No 7426

# தமிழ்மீது எனக்குத் தனிவெறுப்பில்லை.

பெரியார். ஈ. வே. இரா.

தமிழ்மொழி, ஆங்கில மொழி இரண்டைப் பற்றிய என்னுடைய கருத்தைப் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

ஆங்கிலம் வளர்ந்த மொழி—அறிவியல் மொழி என்பதும், தமிழ்—வளர்ச்சி அடையாத பழங்கால மொழி என்பதும் என்னுடைய மதிப்பீடாகும். இதை நான் சொன்னதற்கான தலையாய நோக்கம், தமிழ்மொழி, ஆங்கிலமொழி அளவுக்கு அறிவியல் மொழியாகவும், பகுத்தறிவு மொழியாகவும் ஆகவில்லை என்பதுதானே தவிர, தமிழ் மீது எனக்குத் தனி வெறுப்பில்லை.

நான் பேசுவதும் எழுதுவதும் தமிழில்தான். தமிழ் எழுத்துகளில் நான் பல சீர் திருத்தங்களை எனது இயக்கத் தாளிகைகளான 'குடியரசு', 'பகுத்தறிவு', 'விடுதலை', 'உண்மை', ஆகியவற்றில் புகுத்தியிருக்கின்றேன்.

இன்றுள்ள தி. மு. க. அரசு நெடுநாளைக்கு முன்பு காமராசர் முதலமைச்சராக விருந்தபோது தமிழ்ப் பாடமொழித் திட்டமாக ஆக வேண்டும் என்று எடுத்த முடிவை விரைவு படுத்துகின்றதே யொழிய, இதில் புதிய செயல் ஏதுமில்லை. ஆகவேதான் அதற்கான புதிய சொற்களை அறிவியல், பகுத்தறிவுச் சொற்களைக் கொண்ட பொத்தகங்கள் வெளியிடப் பெறுகின்றன.

தமிழில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போய் விடுமோ என்ற கவலையைப் போக்க, அண்மையில் அரசினர் அலுவல்களில் தமிழில் படித்தவர்களுக்கு நிறைய வாய்ப்பு என முதலமைச்சர் தந்துள்ள உறுதிமொழி, பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு எதிர் காலத்தில் தமிழ்நாட்டு அரசினர் அலுவல்களில் நிறைய இடம் கிடைக்கும் என்பதற்கான முன்னறிவிப்பாகும்.

ஆங்கிலம் படித்தவர்கள்தாம் வெளிமாநில வேலைக்குச் செல்ல முடியும் என்று சொல்லுகிற கூற்றில் பசை இருப்பதுபோல் தோன்றினாலும் அந்த வேலை வாய்ப்புகளை இதுவரை பெற்றிருப்பவர்கள் யார்? இனிமேல் பெறக்கூடியவர்கள் யார்? எப்படியாவது, எதைப்படித்தாவது வேலை கிடைக்குமோ என்று பார்த்தால் 100-க்கு 90 பேர் பார்ப்பன இனத்தைச் சேர்ந்தவர்தாமே வேலை கொடுப்பவர்களாக இருக்கிறார்கள். தில்லியைச் சூழ்ந்து கொண்டிருப்பவர் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்தாம்.— தமிழ்நாட்டு அரசாங்க அலுவலகங்களிலும் அவர்கள் தாம் நிரம்பி யிருக்கிறார்கள்.

இதையெல்லாம் வெளியில் சொல்ல முடியாமல் மனத்தில் வைத்துத்தான் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு நன்மைகள் செய்யும் நோக்கத்தோடு தமிழில் பாடமொழித் திட்டம் முடுக்கமாக நடைமுறைப்படுத்தப் படுகிறது என்று கருதுகின்றேன். இதைப் பார்ப்பனரல்லாத மாணவர்கள் நல்லவண்ணம் புரிந்து நடந்துகொள்ள வேண்டுகின்றேன்.

—விடுதலை: 1—12—70.

www.thamizham.net - Free E book No 7426

# மரபிகள்.

-ந. முத்துக்குமரன், அறி. இ., ஆ. ப.,

ஒரு தலைமுறையினரின் குணவியல்புகள் அடுத்த தலைமுறையின ரிடம் காணப்படுவது நாம் அனைவரும் அறிந்ததே. அவை தலை முறைப் பண்புகள் என விடுத்துச் செல்லுகிறோமே யன்றிக் காரணம் யாதென ஆய்வதில்லை. ஆனால் சொகான் கிரிகர் மெண்டல் என்ற ஆத்திரியத் துறவி இதைப்பற்றி ஆழ்ந்து எண்ணினார். பல ஆய்வு களை நடத்தினார். "ஏதோ ஒன்று" இந்தக் குணவியல்புகளைப் பின் தலைமுறையினர்க்குக் கடத்துகின்றது என்பதை அறிந்தார். அந்த ஏதோ ஒன்றை 'மரபுரிமைக் கரணியங்கள்' (Hereditary factors) என்று மெண்டல் பெயரிட்டார். அவருடைய மரபுரிமைக் காணியங் களின் அடித்தளத்திற் கட்டப்பட்டதே இன்றைய அறிவியலின் பிரி வாகிய மரபியல் (Genetics). மெண்டல் மரபுரிமைக் காணியங்கள் என்றழைத்ததைச் சொகேன்சன் என்பவர் மரபிகள் (Genes) என்று குறிப்பிட்டார். அன்றிலிருந்து மெண்டலியக் கரணியம் (Mende-lian factor) அல்லது மரபிகள்தான் மரபியலின் அலகு என்று கரு தப்படுகிறது.

முதலில் இஃது 'ஏதோ ஒன்று' என அழைக்கப்பட்ட தென்றோம். புலன்கட்கு அப்பாற்பட்டதெனக் கருதப்பட்ட இந்த 'ஏதோ ஒன்று' தான் மெண்டலின் விதிகட்குக் கட்டுப்பட்டதும், அகவை முதிர்ந்த உயிரியின் பண்புகளைத் தீர்மானிப்பது மாகும்.

மெண்டலியக் கரணியங்களும் நிறயாக்கை (Chromosomes) களும் நடத்தையில் ஒத்திருந்தன. அதனால் இக்கரணியங்களை நிற யாக்கைகள் என்றோ அல்லது நிறயாக்கையின் ஒரு பகுதி என்றோ அல்லது நிறயாக்கையிலுள்ள நுண்ணியங்களென்றோ கருதலாம்.

மரபிகளை நுண்ணோக்கியின் உதவியாலுங் காணவியலாது. ஆத லால் மரபிகளை இதுவரை யாருங் கண்டதில்லை. மரபுப் பண்புகள் கடத்தப்படுவதில் அவை செயல்படுவதினின்று அவை இருக்கின்றன என்ற உண்மை தெளிவாகின்றது. மரபிகளை யாருங் கண்டாரிலர் என்பதால் அவற்றைப்பற்றி உண்மையில்லாதன எதுவும் உரைக்கப் படவில்லை. வேதியலார்க்கும் பூதநூலார்க்கும் அணு எப்படியோ அப் படியே உயிரியலார்க்கு மரபிகள்.

கண்ணறை இயலின் (Cytology) நுண்ணிய ஆய்வுகள், நிற யாக்கைகள்தாம் மரபியற் காணியங்களைக் கடத்துகின்றன என்ற

www.thamizham.net - Free E book No 7426

உண்மையை வெளிப்படுத்துகின்றன. நிற யாக்கைகளை, "மரபுரிமை யான அல்லது பிறப்புத் தொடர்பாகச் செயல்படும் வேதியல் இம்மிகள் அல்லது மரபிகளின் நேர்கோட்டுத் தொகுதி என்று" வரையறுக்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு நிறயாக்கையும் 100 முதல் 1000 வரை மரபிகளைப் பெற்றிருக்கும்.

'மரபிகள் ஒரே நிறயாக்கையிலிருக்கும்போது பிணைக்கப்பட்டும், மாறுபட்ட நிறயாக்கையிலிருக்கும்போது கட்டற்றும் நடந்துகொள்ளும்' என்கிறது மார்கனுடைய பிணைப்புக் கோட்பாடு (Theory of linkage). கண்ணறை பிரியும்போது நிறயாக்கைகள் பெருக்கற்குறியை உண்டாக்குகின்றன. இந்தப் பெருக்கற் குறி உருவாகும் பொழுது பிணைக்கப்பட்ட கரணியங்கள் முறிந்து இடம்மாற வாய்ப்பு இருக்கிறது. இந் நிகழ்ச்சியை எதிர் கடத்தல் (Crossing Over) என்ப. 'மரபிகள் நிறயாக்கையில் ஒற்றை நேர் கோட்டில் கோவையாக உள்ளன வென்றும், ஒவ்வொரு மரபிக்கும் குறிப்பிட்ட இருப்பிடமும், ஒவ்வொரு மரபியும் அல் மரபி (Non-genie) அல்லது உயிர்ப்பற்ற பொருளால் பிணிக்கப்பட்டுத் தனித் தனியாகப் பிரிந்துள்ளன' என்ற கருதுகோளு(Hypothesis)க்குப் பிணைப்புக் கோட்பாட்டின் மதிப்பீடுகள் இடந்தருகின்றன. ஒரு தொகுதியாகப் பிணைக்கப்பட்டுள்ள மரபிகளின் பிணைப்பு மதிப்பைத் தனித் தனித் தொலைவுகளையும் அவற்றின் வரிசை முறைகளையும் தீர்மானிக்க இயலும். இவ்வாறு பிணைப்புத் திட்டம் (Linkage Maps) வரையப்படுகின்றது. தொடக்கத்தில் மரபுரிமையின் அலகு எனக் கருதப்பட்ட மரபி, பின்னர் எதிர் கடத்தல் அலகு அல்லது உள்ளார்ந்த நிறயாக்கை முறிவுகளின் இடைவெளியின் அலகு என்று கருதப்படுவதாயிற்று. இவ்வாறாக மரபிகள் உள்ளன என்பதற்கு ஆய்வு முறையான சான்றுகளே உள.

ஒவ்வொரு கண்ணறையிலும் வகைக்கு ஒன்றாக இரண்டு நிறயாக்கைகள் இருக்கும். அவை நேர் ஒப்பு (homologous) நிறயாக்கைகள் எனப்படும். அவையிரண்டும் கருவுயிர்த்தலின்போது தாய் தந்தையரால் கொடுக்கப்படும் பங்குக்குப் பகரமாகும். அவை ஒவ்வொன்றும் தன்னைப் போன்ற மரபிகளைப் பெற்று இணைகளை உருவாக்குகின்றன. ஒரோ வழி மரபிகள் வேதியல் மாற்றம் அடைதலுமுண்டு. இந்த மாற்றம் நிகழாவிட்டால் மாற்றமமையும் பெர்ரு ளும் வழக்கமான மரபியும் சேர்ந்து ஓர் இணையை நேர் ஒப்பு நிற

www.thamizham.net - Free E book No 7426

யாக்கை (Homologous chromosomes) களில் ஒன்று இந்த மரபி க்ளின் கோவையை மாற்றுகின்றது என்று கருதவும் இடமுண்டு. ஓர் உட்கருவில் 'அ' நிறயாக்கை இணைகள் உள்ளன என்பதும், 'அ' மரபித் தொகுதி இணைகள் உள்ளன என்பதும் ஒன்றே. ஆனால் இந்த மரபிகள் ஒரு நேர் கோட்டு வரிசையில் ஒழுங்காக வைக்கப்பட் டுள்ளன. இதிலிருந்து மரபிகள் தாம் மரபுரிமைக் காரணியங்கள் என்பது விளங்கும். நிறயாக்கை முழுவதையும் மரபுரிமைக் கரணி யங்களாம் எனக் கொள்ளல் தவறு.

ஆய்வின் அடுத்த பகுதி கூர்தலறத்திலும் வளர்ச்சியிலும் இந்த மரபிகளின் பங்கு என்ன என்பதைப் பற்றியதாகும்.

மரபிகள் முழுதும் தற்சார்பு அல்லது தன்னுண்மை (Completely Independant) உடையன அல்ல. ஒரு மரபியை வழக்கத்துக்கு மாறான சூழ்நிலையில் வைத்தால் அதன் தன்மை (வெளியீடு) மிகவும் மாற்றப்படுகின்றது. இஃது இட விளைவு (Position Effect) எனப் படும். இவ்வாறு ஒரு மரபி அண்மையிலிருப்பவற்றையும் மரபிக் கலப்பி (Gene Complex)லுள்ள தொடர்புடைய இடத்தையும் சார்ந் தது. ஆதலால் ஒரு மரபியை அதன் பின்னணித் தொடர்பைக் கருத்திற் கொண்டே எண்ணிப் பார்த்தல் வேண்டும். (கண்ணறைப் பிரிவின்போது மரபிகள் தம்மைப் போன்றே மறுபகர்ப்புகளைப் பெருக் கிக் கொள்ளும் திறன் வாய்ந்தன).

மரபியின் இன்னொரு பண்பு, திடீர் மாறுதலடையுந்தன்மை (Mutation). இத் திடீர் மாற்றம் அயனித்தல் (ionisation) என் னும் ஒரே நிகழ்ச்சியில் நடைபெறுகின்றது.

புதிர்க் கதிர் (x-ray) ஆய்வுகளின் துணைக்கொண்டு ஒரு குறிப்பிட்ட X- நிறயாக்கையிலுள்ள மரபிகளை அளவிட முடியும் இதனால் மரபிகளைப் புதிர்க் கதிர் மாற்ற இலக்குகள் அல்லது இடங் கள் என்றும் கூறலாம். குச்சில்களிலும் (Bacteria) நச்சு (Virus) களிலும் இப்புதிர்க் கதிர் இலக்குகள் கணிக்கப்பட்டன. பழ ஈயின் X-நிறயாக்கையிலுள்ள புதிர்க் கதிர் இலக்குகளைவிட நச்சுகளில் புதிர்க் கதிர் இலக்குகள் குறைவாக இருக்கின்றன. இன்னுஞ் சில சிறு நச்சுகளில் ஒரே இலக்கு மட்டுங் காணப்படுகிறது. எனவே சிறு நச்சுகளை ஒற்றை அமண் மரபி (Single Naked gene) என்றுங் குறிப்பிடலாம். ஆயினும் இக்கருத்துக்குப் போதிய முடிவான சான்றுகள் தேவை.

www.thamizham.net - Free E book No 7426

மரபியின் பருமன்: முல்லர் என்ற அறிஞர் பழ ஈயின் எச்சிலி லுள்ள நிறமாக்கையின் மிகச்சிறு அளவிற்குக் கணக்கிட்டார். மரபி கள் சாயங்களை உறிஞ்சும் பண்பின. இப் பண்பைக் கொண்டு பல ஆய்வுகளை நடத்தி ஒரு மரபியின் பருமன் 10 A· ஆங்டான் அலகுகள் என்று கணித்தார். [ ·001 மில்லி மீட்டர் ≈ 1·00 மியூ(u) = 10,000 ஆங்டான் (A·)].

மரபியைக் புதிர்க் கதிர்க் கொண்டு தூண்ட முடியுமென்று முன் னரே சொன்னோம். இப்புதிர்க் கதிர்க் கணக்கு ஆய்வுகளால் பழ ஈ மரபியின் உணர்ச்சிப் பருமன் (Sensitive Volume) அல்லது இலக் குப் பருமன் 2 முதல் 6 மியூ எனக் கணித்திருக்கின்றனர். ஆனால் மரபியின் உணர்ச்சிப் பருமனை மரபியின் பருமன் எனக் கொள்ள வியலாது.

மரபியின் வேதியற் பண்பு: ஒரு மரபி என்பது பெரும் உள் ளாற்றலுள்ள மிகச் சிறிய வேதியல் இம்மி (Particle) அல்லது ஒரு பொருளின் மிகச்சிறிய நலக்கூறு என்றுங் கொள்க. பல தேர் வாராய்ச்சியாளர் (Investigators) மரபிகளை உட்கருப்புரத மூலக் கூறு கள் (Nucleo Protein Molecules) எனக் கருதுகின்றனர். மேலும் மரபியின் தனித்தன்மை உட்கருக் காடியிலுள்ள பகுதிப் பொருள் களைப் பொறுத்தது. மரபியின் உயிர்நிலையானது DNA (உட்கருக் காடி RNA, DNA என இரு வகைப்படும்) DNA எப்பொழுதும் நிற யாக்கையோ டிணைந்தே காணப்படுவதாலும், கண்ணறையின் வேறெந்தப் பகுதியிலும் காணப்படாததனாலும் DNA மரபியின் முகாமையான பகுதியாகக் கருதப்படுகிறது. மேலும் ஒரு நிறயாக் கைத் தொகுதியில் குறிப்பிட்ட நிலையான அளவு DNA காணப்படு கிறது. நிறயாக்கைகளை இரட்டித்தால் DNAயின் அளவு இரட்டிக் கின்றது.

அண்மைக் காலத்தில் நடைபெற்ற வேறிரண்டு குறிப்பிடத்தக்க ஆய்வுகளும் மரபியின் பெரும்பகுதி DNAவே என்ற கருத்தைத் தோற்றுவிக்கின்றன. சில வகைக் குச்சில் (பாக்டீரியாக்)களிலிருந்து DNAவைப் பிழிந்து எடுக்க முடியும். இவ்வாறு பிழிந்தெடுக்கப் பட்ட DNA வேறொரு தொகுதிக் குச்சிலில் செலுத்தப்பட்டது. இவ் விரண்டாம் வகைத் தொகுதி முதற்றொகுதியின் பண்புகளைப் பெற்று விரிவுபடுத்திக் கொண்டது. இதன் பின் தலைமுறையிலும் இந்தப் பெறப்பட்ட பண்பே காணப்பட்டது. இதனால் DNA ஒரு தலைமுறை

www.thamizham.net - Free E book No 7426

யிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படுகிறது என்பது தெளிவாயிற்று. இவ்வாறு ஒன்றை வேறொன்றாக்குவதற்கு மாற்று முறை (transforming Principle) என்று பெயர். மேலும் சில வகை நச்சுகள் குச்சில்களின் கண்ணறையைத் தாக்குகின்றன. இவ்வாறு தாக்கும்பொழுது நச்சுகளிலுள்ள DNA குச்சிலில் நுழைகிறது. நச்சுகளால் தாக்கப்பட்ட குச்சில்களின் DNA நச்சுகளின் DNA போன்றிருக்கின்றன. இந்தச் சான்றும் DNAவே பின் தலைமுறைக்கு அனுப்பப்படுகின்றது என்பதைக் காட்டுகின்றது. சில சிறு நச்சுகள் வெறும் உட்கருக் காடியால் (NA) மட்டுமே ஆனவை இவை சற்றேறக்குறைய மரபிகள் போலவே நடந்துகொள்கின்றன. இதிலிருந்து என்ன தெரிகின்றது? உட்கருக்காடியின் மூலக்கூறுதான் மரபிகள் என்ற கருத்தைத் தெரிவிக்கின்றன.

மரபியின் முகாமையான இயல்புகளில் ஒன்று இனப் பெருக்கம். ஒரு கண்ணறை பிரியும்போது ஒவ்வொரு நிறயாக்கையும் தொகுப்பு முறையில் இரட்டிக்கின்றது. ஒவ்வொரு மரபியும் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களிலிருந்து தன்னைப் போன்ற ஒரு படியைச் சமைத்துக் கொள்கின்றது. இத் தொகுப்பு எப்படி நடக்கின்றது என்பது தெளிவாகத் தெரியவில்லை. மரபியின் பெரும்பகுதி DNA என்பதை ஏற்றுக்கொண்டால் DNA எப்படித் தன்னைப் போன்ற இன்னொரு DNAவை உண்டாக்குகிறது என்ற சிக்கல் குறையும். ஆகையால் மரபியின் இனப்பெருக்கம் என்பது அடிப்படையில் DNA பெருக்கமே. படி சரியாக அமையவில்லை யாயின் அது வேதியல் முறையில் வேறுபடுகின்றது. இவ்வாறு சிறிது மாற்றமடைந்த மரபியை 'மாறி' (Mutant) என்பர். இது போன்ற மாற்றம் மரபியால் வேறுபாடுகளில் முகாமையானது. இம்மாற்றத்தை மரபியின் திடீர் மாற்றம் (Gene Mutatiou) என்பர்.

**மரபியின் செயல் முறை:** உரொட்டியில் படரும் ஒரு வகைக் காளானில் ஒரு குறிப்பிட்ட மரபி இருந்தால் சில நொதிகள் (enzymes) சுரக்கப்படுகின்றன. இம் மரபியைச் செயலற்றதாக்கிவிட்டால் நொதிகள் சுரப்பது நின்றுவிடுகின்றது. இதனால் ஒரே மரபியின் மாறுதல் காளானின் வாழ்க்கையில் ஒரு நிலையே தடைப்படுகின்றது என அறிகின்றோம். இவ்வாறு சில மரபிகள் நொதிப் பெருக்கத்திற்கு நேரடிப் பொறுப்பாகின்றது.

www.thamizham.net - Free E book No 7426

# இயற்றிநிலை (WILL POWER)

-புலவர். திருமேனி நாகராசன்.

வரையறை: இயற்றிநிலை என்பது உள்ளத்தின் கூறுகளில் ஒன்று. உள்ளத்தில் எழுகின்ற விருப்பும் ஆர்வும் உள்ள இருவேறு செயல்களில் உயர்குறிக்கோளை உடைத்தாய் எதிர்கால இன்பத்தைத் தரவல்ல ஒரு செயலையே தெளிந்தெடுத்து, அச்செயலில் ஆள்வினை காட்டுதலே இயற்றிநிலை ஆகும்.

இயற்றிநிலைச் செயல்: இயற்றிநிலையின் மிக முகாமையான பண்பு உயர்குறிக்கோளுடைமையே ஆகும். பகலில் பேசும் படக்காட்சிக்குச் செல்லாது பள்ளித் தேர்வெழுதும் மாணாக்கனின் செயலிலும் "காதலா? கடமையா?" என வந்துற்றபோது காதலைத் தள்ளிக் கடமைவழி ஒழுகும் மறவன் செயலிலும், தன் பெண்டுபிள்ளை வாழ்வு நோக்காது, தாய்த்திரு தமிழின் வாழ்வு நோக்கும் தொண்டனின் செயலிலும் இயற்றிநிலை உண்டென்று அறிதல் வேண்டும்.

இயற்றிநிலையில் நான்கு நிலைகள்: எந்தவொரு இயற்றிநிலைச் செயலிலும் பின்வரும் நான்கு நிலைகள் உண்டு. அவை: க, எதிர்கால விளைவைக் கற்பனை செய்து காண்டல். உ. ஒப்புநோக்கல். ங. முடிவு காணல். ச. செயல்படல். ஈண்டுச் சான்றுக்கு ஒருசெயலை எடுத்துக்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

மரபிகள் தன் வினை யூக்கம்(Autocatalysis)என்னும் இயல்புடையவை. மரபிகள் கண்ணறை வளர்ச்சியிலும் வேறுபாட்டிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ வினையூக்க முகவராக(Catalytic Agent) வேலை செய்கின்றன.

உயிரியின் மிகப்பல பண்புகள் மரபிகளின் கூட்டுச் செயல்களின் விளைவாகும். ஆனால் எல்லா மரபிகளும் ஒரு குறிப்பிட்ட செயலில் ஈடுபடுவதில்லை. ஒரு மரபி ஒரு குறிப்பிட்ட வேதியற் பொருளின் பெருக்கத்தைத் தூண்டும். இவ்வேதியற் பொருள் இரண்டாம் மரபியின் பெருக்கத்திற்கு முன் தேவை (Prerequisite)யாக இருக்கும். இவ்வாறு ஒரு தொடர்போன்று இயங்கும்.

பொதுவாக மரபியின் செயல் முறை கண்ணறையில் மரபியைச் சுற்றியுள்ள பொருள்களைப் பொறுத்தது. மரபிகளுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்படும் செயலெதிர் செயலின் (Interaction) விளைவையே மரபியின் குணவியல்பு என்கிறோம். 0

www.thamizham.net - Free E book No 7426

காட்டுவாம். புதுநாடு காண நண்பர்களோடு கடலில் சென்று கொண்டிருந்த கொலம்பசு புதுநாடு கண்டு பிடிக்கின் ஏற்படும் விளைவுகளைப் பற்றிக் கற்பனை செய்து கொண்டே இருந்தார். இது முதல்நிலை. நாட்கள் பலசென்றும் கரைகாணமையால் கலக்குற்ற அவருடன் சென்றோர் தாயகம் செல்ல அவரை வற்புறுத்துகின்றனர். அப்பொழுது கொலம்பசுக்கு இரண்டு எண்ணம் ஏற்படுகின்றது. ஒன்று, உடன் வந்தோர் வற்புறுத்தலுக்கு உடன்பட்டுத் தாய்நாடு திரும்பல். மற்றொன்று, தொடர்ந்து சென்று, என்னவாயினும் புது நாடு கண்டுபிடித்தல். இஃது இரண்டாவது நிலை. ஆனால், அவர் இரண்டு செயல்களையும் சீர்தூக்கிப் பார்த்துத் தொடர்ந்து கடற் செலவைத் தொடர்வதெனவே தெளிகின்றார். இது மூன்றும் நிலை. தெளிந்த பின்னர் மேலும் தம் செயலில் ஆர்வும், ஆள்வினையும் கொண்டு உழைக்கின்றார் இது நான்காம் நிலை. இவ்வாறு எந்த வொரு செயலிலும் நான்கு நிலைகளும் இருத்தல் கண்கூடு.

உடற்கூறு ஏதுக்கள்: இரும்பொற்றசையும், எஃகு நரம்பும் மார்ந்தர்க்கு வேண்டும். அந்நிலையில்தான் இயற்றிநிலை கைவரப் பெறும். விவேகானந்தர் போற்றுவதற்கு விழுமிய இயற்றிநிலை கைக் கொண்டு ஒழுகியதற்குக் கரணியம் அவர்தம் நலமுற்ற வலிமையான -உடற் கூறேயாகும். ஈண்டு அண்ணல் காந்தி அடிகளையும் இவ் வேதுக்கு நல்ல சான்றாகக் கொண்டு மகிழ்க.

இன்ப ஏதுக்கள்: யாவர்க்கும் எதிர்கால இன்பத்தைக் கருதித் தான் இயற்றிநிலை ஏற்படுகிறது. இன்ப ஏதுக்கள்தாம் இயற்றிநிலை உருவாதற்குக் கரணியம். அவ்வின்பத் தூண்டல் நிலையானதாயும், தெளிவானதாயும் இருத்தல் இன்றிமையாதது. எதிர்கால இன்பப் பயனை எண்ணி நிகழ்காலத்தில் துன்புறினும் துணிவாற்றிச் செயல் படுவாரை ஈண்டு நினைவில் வைக்க. புல்லும் புதரும் களைந்து, மரங்கள் வெட்டி, மண்ணைத் திருத்தி, உழுது பண்படுத்தி, நீர் பாய்ச் சிப் பயிரிட்டு இரவு பகல் நோக்காது, மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து உழவர் பாடாற்றுவது எற்றுக்கு? குவைகுவையாய் நெல் மணிகளைக் குவிப்பதற்கன்றோ?

*"துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி*
*யின்பம் பயக்கும் வினை"*

என்னுங் குறளில் வான்புகழ் வள்ளுவன் 'இன்பம் பயக்கும் வினை என்றது இயற்றிநிலைச்செயலே என்று எண்ணி இன்புறுக.

www.thamizham.net - Free E book No 7426

அறிவு ஏதுக்கள்: இயற்றிநிலை அறிவுடன் இயைந்ததாக இருக்க வேண்டுவது இன்றியமையாதது. ஒழுக்கத்தின்பாற்பட்டு, புகழைஉயர்த்தக்கூடிய தாய்அமைவதே இயற்றிநிலைக்கு அழகென்று அறிக. பெரும்பழி துடைத்தற் பொருட்டுக் கண்ணகி தன்கணவன் கள்வனல்லன் என மன்னற்கு எடுத்துக் காட்டியது அவளின் இயற்றி நிலையை வெளிப்படுத்துகிறது. குடும்பமானம், தாய்நாடு, தாய்மொழி இவற்றிற்கென மாந்தர் முழு ஆற்றலையும் செலவிடுதலும் இயற்றி நிலையின் பாற்படும். இவ்வாறு தாய்நாடு, தாய்மொழிகளுக்காகப் பாடாற்றியவர்களின் பெயர்கள் இன்றும் வரலாற்றில் வரையப்பட்டிருத்தலைப் படித்தறிக.

குமுகாய ஏதுக்கள்: ஒருவனுடைய இயற்றிநிலை அவனது குமுகாயச் சூழ்நிலைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். குமுகாயக் கட்டுப்பாடு, பழக்க வழக்கம், நடைமுறைகள் ஆகியவற்றிற்குப் பொருந்தியதாக இயற்றிநிலை இருக்க வேண்டும் என்பது மெய்யறி வாளர் கொள்கை. காந்தி அடிகள், பேரறிஞர் இடால்சுடாய் போன்றவர் இயற்றிநிலைச் செயல்கள்குமுகாயச் சீர்திருத்தம் பற்றியவையே. இனி, அறிஞர் உருசோ போன்ற மெய்யறிவாளர் சிலர் குமுகாயத்தை வெறுத்து அஞ்சி அதனின்றும் விலகி அதன் கட்டுப்பாட்டிற்குப் புறம்பாக ஒதுங்கி வாழ்ந்த வரலாறும் உண்டென்று அறிக. அயல்நாட்டில் பண்டு ஒரு சிறுவன் அணை உடைந்து ஆற்றுவெள்ளம் தன்னூர்ப் புகாமல் தன் கைகொண்டு அணையின் சிற்றுடைப்பை நெடும்பொழுது காத்தான் என்பது கதை அச்சிறுவனின் செயல் குமுகாய ஏது இயற்றிநிலைக்கு ஏற்புடைச் சான்றென அறிக.

இயற்றிநிலையோடு தொடர்புடையவை: இயற்றிநிலையோடு நெருங்கிய தொடர்புள்ளவை கவனமும் ஆளுமையுமாகும். மாணாக்கனுக்குப் பாடங்கேட்கும்போது இயற்றிநிலையும் கவனமும் கலக்கின்றன. எல்லாச் செயல்களிலும் இம் மூன்றும் தொடர்புறுகின்றன எடுத்துக்காட்டு:- கம்பனின் இயற்றிநிலை: ஒப்பற்ற பாவியம் பண்ணல்; அவனின் கவனம்: இலக்கணத்தில் வழுவாமை; அவனது ஆளுமை: ஆரியர் பண்பாட்டைத் தமிழர் பண்பாடாக மாற்றியது.

குழந்தைகளின் இயற்றிநிலை: பிறந்த குழந்தைக்கு இயற்றிநிலை இராது. அதன் செயல்கள் அனைத்தும் மறிவினையின் பாற்பட்டு நிகழும். பின்னர் மறிவினை வளர்ச்சி அடைந்து இயல்பூக்கமாக மலரும். 3 அல்லது 4 அகவையில் இயற்றிநிலை போன்ற ஒருநிலை குழந்

www.thamizham.net - Free E book No 7426

தைக்கு உண்டாகிறது. ஆனால், அஃது உண்மையான இயற்றிநிலை அன்று. ஒரு சிறுவன் தெருவினில் விற்கும் இனிப்புப் பண்டத்தை வாங்கித் தரச்சொல்லுவான். வாங்கித் தரவில்லையாயின் அழுது நீண்டநாழிகை அடம்பிடிக்கிறான். அடம்பிடிக்கிற அவன் போக்கு இயற்றிநிலை அன்று. ஆனால், அவ்விடாப்பிடிப்பழக்கமே நாளடைவில் அஃதாவது 5 அல்லது 6 அகவையில் உண்மையான இயற்றிநிலை யாக உருவாகிறது. சிறுவர்கள் தொடர்ந்து பெரியவர்களை வினவிக் கொண்டிருப்பது அவர்களது இயற்றிநிலை வன்மையை வெளிப் படுத்துகின்றது. பெரியோர்கள் பொறுமையுடனும், உவப்புடனும் சிறு வர் வினாக்களுக்கு விடையிறுத்துக் கொண்டே இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான், சிறுவர்களது இயற்றிநிலை செழித்தோங்கும் என் பதை எண்ணத்தில் வைக்க. பொதுவாக மாந்தர்க்கு 8 முதல் 20 அகவை வரை இயற்றிநிலை உருவாகும் பருவமாகும். அதனால், பெற் றோரும் ஆசிரியர்களும் மற்றோரும் இப்பருவத்தினர்க்கு இயற்றிநிலை வளர வாய்ப்பளித்தல் வேண்டும்.

இயற்றிநிலை கைவர மேற்கொள்ள வேண்டிய பயிற்சிகள். அ. நரம்புக்கட்கு அடிமை ஆகாமை. ஆ. நற்பழக்கங்களைக் கைக்கொள் ளல். இ. வழக்கமான செயலில் விரும்பித்தடை ஏற்படுத்திக்கொள்ளல் ஈ. புதுச்செயலை வழக்கமான செயலாய்ப் பழக்கிக்கொள்ளல். உ. செயல் முடிவை முன்கூட்டியே எண்ணிப் பார்த்தல். ஊ. கவன ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளல். எ. உயர்ந்த உணர்வுகளைப் பெறு தல். ஏ. கூடி வாழ்தல்.

இயற்றிநிலைப்பயன்: இயற்றிநிலை இன்றேல் இவ்வுலகே இன்று. அதன் பயன் அளப்பரியது. அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கும், உலகையே அழிக்கவல்ல அணுக்குண்டுகள் படைப்பிற்கும், நிலவு மண்டிலச் செலவிற்கும். கலை இலக்கிய ஆக்கங்களுக்கும், பல நுண் துறை முன்னேற்றத்திற்கும் இயற்றிநிலையே கரணியம். இன்னும் பிறவற்றிற்கும் இயற்றிநிலையே காரணியமாதலைக் கண்டுகொள்க.

முடிவுரை: இன்றைய உலகில் பெரும்பாலோர் செயலின் தொடக்க நிலையிலேயே சிறுதோல்வி கண்டவிடத்து மனமொடிந்து செயற்படாது போய்விடுகின்றனர். இதற்குத் திண்மையற்ற இயற்றி நிலையே கரணியமாகும். உடனே இத்திண்மையற்ற இயற்றிநிலையைக் கல்வி எறிதல் வேண்டும். திண்மையற்ற இயற்றிநிலையால் சிறுவர் களும், இளைஞர்களும் சோர்வுறும்போது பெற்றோரும் ஆசிரியர்களும் அவர்களை ஊக்கப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும் வேண்டும். இப் படி இளமை முதற்கொண்டே நம்தமிழச் சிறுவர் சிறுமியர்க்கு இயற்றிநிலைப் பயிற்சி அளித்துவரின் அவர்கள் எதிர்காலத்தில் நம் தமிழக விடுதலைக்கே தலைநிற்பர் என்பது கல்மேல் எழுதுக்கு நேராகி விடும். O

www.thamizham.net - Free E book No 7426



## [ம-107] எகுபதியர் பழம்பாண்டியரே!

செவ்வி மாருச் செந்தமிழ்ப் பெரியீர், வணக்கம். 20-8-70-ஆம் நாளில் வெளிவந்த "கல்கண்டு" எனும் கிழமையிதழின் பதின்மூன்றும் பக்கத்தில் கீழ்க்காணும் செய்தி காணப்படுகின்றது.

"எகிப்து நாட்டில் (DER-EL-BAHRI) தெறல் பஃறி என்று ஓர் ஊர் இருக்கிறது. இந்த ஊரில் அசுடாப் (ஹஸ்டாப்) அரசியின் நினைவு மண்டபம் ஒன்று இருக்கிறது. இந்த மண்டபச் சுவரில் எகிப்திய மொழியில் எழுதப்பட்டிருக்கும் குறிப்பு இது: 'தென்கடலகத்துக் குமரி நாட்டிலிருந்து நைல் ஆற்றங்கரைக்கு வந்து குடியேறிய மக்களே எகிப்தியர்கள்; இவர்கள் பாண்டியர்கள், பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்கள்" இதனை ஆராய்ந்து தென்மொழியில் வெளியிட வேண்டுகிறேன்.

—எல். இராமசாமி, கோவை-1.

## [ம-108] இறைப்பற்றுள்ளவரா நீர்?

பெருமைமிக்க பாவல! ஆரியத்தைப்பற்றி அணுவணுவாக அறிந்த நீவிர், அதை அடியோடு வெறுக்கும் நீவிர், அதையழிக்க அரியேறுபோற் சீறிப் பாயும் நீவிர், ஆரியப்பார்ப்பனரின் மேலான வாழ்வுக்கு அடிப்படையும், நமது வீழ்ச்சிக்கு மூலகரணியமுமானது இறை நம்பிக்கைதான் என்பதை அறியீரா? இல்லை உமது ஆழ்ந்த இறைப்பற்று உமது பகுத்தறிவை மறைத்து விட்டதா? இறை நம்பிக்கை உடைய நீவிர் ஏன் பெரியாரைப்பற்றி எழுதினீர்? எழுதினும் போகட்டும் விளக்க உரையேன் எழுதினீர்? அந்த உரை பெரியாரின் பகுத்தறிவுக்குக்களங்கம் உண்டாக்காதா? உண்மையில் பெரியார் இறைநம்பிக்கை உடையவரா? நீர் நவிலும் கடவுட்கொள்கை தமிழர் தந்தைக்கு உடன்பாடு என்பதை எந்த அடிமடயனும் நம்பமாட்டான். அவர் அப்பழுக்கற்ற "நாத்திகர்" என்பதை எதிர்காலத்திலும் அவரது படிமத்தின் கீழ் எழுதியுள்ள எழுத்துகள் பறை சாற்றும். இஃது உமக்குத் தெரியாததன்று. தெரிந்தும் உமது இறைக் கொள்கையை அவர்மீது ஏன் திணிக்கிறீர்? கரணியமென்ன?

www.thamizham.net - Free E book No 7426

நூருசிரியம் இருபத்து நான்காம் பாடலைப்படிக்குமுன், "பெரியாருக்குப்பின் நம்இனக் காவலர் நீர்தான்" என நான் நம்பினேன். அந்த நம்பிக்கையை உமது இறைக்கொள்கை தகர்த்து விட்டது. இறைநம்பிக்கையுள்ள எவராலும் தமிழரை ஆரியப்பிடியிலிருந்து விடுவிக்கமுடியாது. இது வரலாறு காட்டும் உண்மை. எந்த இறைக் கொள்கையையும் தமக்குத் துணையாக ஆக்கிக்கொள்ளப் பார்ப்பனருக்குத் தெரியும். இறையென்னும் நுழைகடவு வழியாகப் புகுந்து பைந்தமிழ்ப் பயிரைப் பார்ப்பன எருமைகள் மேய்ந்துவிடும் என்பதைத் தாங்கள் அறியாதவரல்லர். எனவே தமிழப் பயிரைக்காக்கும் தமிழத் தலைவனுகிய உழவன் ஆரிய எதிர்ப்புணர்ச்சி என்னும் வேலியில், கடவுள் மறுப்பு என்னும் இலந்தைமுள்ளை வைத்து, நுழைவழியில்லாமல் பகுத்தறிவென்னும் அகிணியால் வலுவான கட்டுப் போடுபவனுயிருக்க வேண்டும். அஃதாவது தமிழைத் தமிழரை ஆரியப் பிடியிலிருந்து விடுவிக்க விரும்பும் தமிழத் தலைவன் முழு 'நாத்திகனு'யிருந்து தமிழ்மக்களையும் 'நாத்திக'ராய்மாற்றவேண்டும். இல்லையேல் தமிழர் நிலை இன்றுபோலவேதான் என்றும் என்பதைக் கல்லில் செதுக்கி வைத்துக்கொள்ளலாம். எனவே சிறந்த தமிழறிவும், தந்நலமற்ற தொண்டுள்ளமும் கொண்ட நீர், உமது தொண்டால் தமிழும், தமிழர் குமுகாயமும் பயனடைய வேண்டின் முழு "நாத்திக"ரய் மாறியே ஆகவேண்டும். இன்றேல் உமது தொண்டால் மொழிக்கும் நாட்டுக்கும் நல்ல பயன் ஏற்படாது. உம்போன்ற இறைக் கொள்கையுடைய சித்தர்கள், தாயுமானவர், இராமலிங்க அடிகள் இவர்களால் என்ன பயன் ஏற்பட்டது? ஆரியத்தை அசைக்க முடிந்ததா? இல்லையே! அதேபோல்தான் அதே இறைக்கொள்கையையுடைய உமது தொண்டின் பயனும் என உறுதியாகச் சொல்கிறேன்.

உண்மையான இறைக்கொள்கையை யாரும் மறுத்தற்கியலாதென்றும், அவ்வாறு மறுப்போர், காற்றைக் களப்பென்றும் களப்பைக் காற்றென்றும் கூறுவோர் போன்றவர் என்றும் பகுத்தறிவாளரைத்தாக்கியிருக்கிறீர். இது வருந்தத்தக்கது. நுமது மெய்க்கடவுட் கொள்கையை, நுமது கடவுளால் மாந்தனுக்கு ஏற்படும் பயனை மிகத் தெளிவாக, விளக்கமாக, எளிய சொற்களால் எல்லாருக்கும் புரியும் நடையில் எழுதி மெய்ப்பிக்க வேண்டுகிறேன். தொடங்கட்டும் மெய்க் கடவுட் போராட்டம்! உமது கடவுளையும் ஒருகை பார்க்கலாம்!

கொ. செ. சின்னப்பா, கொம்மக்கோவில், ஈரோடு.

www.thamizham.net - Free E book No 7426

## (ம-109) பாவாணர்க்கு ஐயாயிரம் உருபா...!

தண்டமிழ் காக்கும் தலைவா!

வணக்கம்! கடந்த தென்மொழித் திங்களிதழின் ஆசிரியவுரை கண்டேன்; பெரும் புளுகடைத்த பிராமணீயத்தின் பேருண்மை உணர்ந்தேன்; வாழ்விலே துணிந்து செய்யக் கூடிய செயல்களில் இஃதும் ஒன்றன்றோ! அதற்காகப் பாராட்டுகிறேன். பிராமணீயத்திற்கு விட்ட இறுதி எச்சரிக்கை என்பதைவிட, அறிந்து நடக்க வேண்டிய அருந்தமிழர்க்கு விட்ட இறுதி எச்சரிக்யைாகவும், விழிப்புணர்ச்சிக்குரிய வழியாகவும் கொள்ளலே சாலச் சிறந்தது. இவ்வாசிரிய உரை இன்னும் நீண்டு-ஏன்? தென்மொழியின் ஒரு திங்களிதழ் முழுமையுமே இவ்வுரையாக இருக்கக் கூடாதா என ஏங்கினேன்! என்னவல் நிறைவேறுமா?

அடுத்தபடியாக, பாவாணரைத் தெரியாத கருத்திருமன்கள் அறிவதற்கேற்றபடி மலரிலிருந்து ஒருபகுதி எடுத்து வெளியிட்டிருந்தீர்கள். இது மிகவும் பாராட்டுதற்குரியது; பொருத்தமுமுடையது. கருத்திருமன் அவர்களே இவ்விதழைக் கண்டிருந்தால் உண்மையிலேயே வெட்கித் தலைகுனிந்திருக்க வேண்டும், அறிய வேண்டியவரை அறியாத தவற்றுக்காக! ' பாவாணரா,? யார் அவர்? நீங்கள் சொல்லித்தான் கேள்விப்படுகிறேன்'' என்று அவர் சிங்கப்பூர் தமிழ்முரசுக்கு அறிவித்த செய்தியினை மீண்டும் எண்ணிப் பார்க்கும் போது, உள்ளம் எரிமலையாக மாறிக் கொதிக்கின்றது! நெஞ்சு நஞ்சுண்டது போலத் துடிக்கின்றது' மூச்சே நின்றுவிடும்போல்இருக்கிறது.

அன்பரே! உங்கட்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

தென்மொழியின் ஒவ்வோர் இதழிலும், குறைந்தது ஒரு பக்கமாவது பாவாணரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளைப் படிப்படியாக, வரிசைப்படி வெளியிட்டுவரின், எல்லாருக்கும் நலம் பயக்கும். அவர்நிலை யுணர்ந்த சில உள்ளங்கள், உண்மை யுணர்ந்து உதவி செய்ய முன்வரும். இதில் எள்ளளவும் ஐயப்பாடில்லை. 'திருவேறு; தெள்ளியராதலும் வேறு,-என்பது மெய்யாகத்தா னிருக்கிறது. அவரின் தந்நலங் கருதாத் தன்மானத் தன்மையை எண்ணும்போது அவரை எப்படிப் பாராட்டிப் புகழ்வது என்றே புரியவில்லை. பொருள் வளம் படைத்த ஒருவர், மனவளமும் சிறிது படைத்திருந்தால் இவ்

www.thamizham.net - Free E book No 7426

வுண்மையை உணர்ந்து, எல்லா நூல்களையும் முதற்கண் மதிப்பிடுவ தற்குமுன் வருவார் என்பது ஒருதலை. எனக்குப்பொருள்வளம் கிட்டின், முதலில் ஐம்பதினுயிரம், உருபாக்களைப் பாவாணர் அவர்களிடம் கொடுத்து, அவருடைய அறிவு நூல்கள் அத்தனையையும் பதிப்பித்து வெளிக்கொணரச் செய்வதே என் அவா; அதுவே எனது தலையாய குறிக்கோளும் என்பேன். அவரின் இறுதிக்காலம் நெருங்க, நெருங் கத் தமிழுக்கு இதுவரை யில்லாத நல்வாய்ப்பு நழுவி விடுமோ என எண்ணி உள்ளம் தேய்புரிப் பழங்கயிறுபோல நைகின்றது. என் செய்வேன்? அவருடைய ஆக்க நூல்கள் அத்தனையையும் பேணுத லன்றோ அரியவற்றுள் எல்லாம் அரிது. தமிழர் இன்னும் இதை அறிந்தாரில்லையே!

ஒவ்வொரு தென்மொழியிலும் பாவாணரைப் பற்றிய குறிப்பு வந்துகொண்டே இருக்குமானுல் அந்நினைவு, தமிழர் எல்லாருடைய உள்ளங்களிலும் வியாதடியுறையும் நிழல்போல இருந்து கொண்டே யிருக்கும் என நம்புகிறேன்; நனி மகிழ்கிறேன். நன்றி!

அன்பன், வீ. வீராச்சாமி, பேரையூர், மதுரை.

## [ம-110] தமிழிசைச் செல்வம்...!

அன்புடையீர், வணக்கம். "வசந்தம்" என்னும் பெயருடைய திங்களிதழின்கண் (கும்பம்-1950) வெளிவந்த 'சிலம்பு இசை' எனுங் கட்டுரையில் சகோடயாழ்பணி, பி.ஓ. கே. நடராசன் (பிள்ளை) அவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"தமிழ் நாட்டில் இருந்து அழிந்துபோன இசைநூல்கள் முதுநாரை, முதுகுருகு, சிகண்டியார், இசைநுணுக்கம், இந்திரகாளியம், பஞ்ச பாரதீயம் என்னும் நூல்கள்.

இவற்றில் இசை நுணுக்கம், இந்திர காளியம், ராகசிகிச்சா என் னும் இம்மூன்று நூல்களும் கோவை சங்கீத வித்வான் வேணுகானம் டி. ஆர். வேணுகோபால் (நாயுடு) அவர்களிடம் இருப்பதை நான் நேரில் பார்த்தேன். எல்லாம் ஏட்டுச்சுவடிகள். இவை வெளிவந்தால் தமிழ் மக்களுக்கு மிகப்பெரிதும் பயன்படும். இச்செய்தியை அரசினர்க் குப் பன்முறை நேரிலும் மடல் வழியாகவும் தெரிவித்தும் பயன்படாமல் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் ஆயிற்று"

—எல். இராமசாமி, கோவை-1.

www.thamizham.net - Free E book No 7426

# (மடல்-111) தமிழ்ப் பற்று? மொழிவெறியா?

ஏடா தமிழா! விழித்தெழுவாய்!! வீறுகொள்வாய்!!!

"செந்தமிழ்ச் சொல்லால், செயலால், தடம்பெருந் தோளால் தொடங்குக பணியை"

மொழிமேல் பற்றுவேண்டும்;மொழிவெறிகூடாதாம். இற்றையப் பொழுதுவரை உன்னை அடிமையாக்கி ஆண்டுவரும் ஆரியனிட மிருந்து விடுதலைபெற மனம் வரவில்லையா? உன்னையும் உன் வயிற்றையும் எக்கி எக்கிப் பார்த்துக்கொண்டே இருக்கிறாய். பணக்காரரோ தமிழ்ப் பேசுவதே நாகரிகமில்லாதது என்று கருதுகின்றனர். இப்படி இருந்தால் தன்மானம் என்பது இருக்காதா என்ன? உன்னைப் பெற்ற அன்னையை ஒருவன் பழித்தால் கண்சிவக்க, அனல் பறக்க விழிக்கிறாய். தமிழ் உன் தாயில்லையா? தாய்க்குத் தாயாயிற்றே! உன் உடலில் ஓடும் ஒவ்வொரு சொட்டுக் குருதியும் தமிழமுதத்தில் ஒன்றிப்போனவை என்பதை மறந்துவிட்டாயா? வயிறு சிறிது நிரம்பி விட்டால் ஈன்ற தாயை, தாய்க்குத்தாயாம் தமிழை மறந்து விடுவதா? தமிழர் பரம்பரை அவ்வளவு இழிந்ததன்றே! பின் ஏன்மானம் இழந்து மதிகெட்டுப் போய்விட்டாய்? ஆம், ஆரியன் உன்னை மழுக்கிவிட்டான் எண்ணிப்பார்! பின் செயலாற்று. உரிமைக்குரல் கொடுக்கும் நம்மை-உலகத்தின் முதுகுடி மக்களாம் நம்மைப் பார்த்து மொழிவெறியர்கள் என்று கருதுகின்றாய். சட்டம் என்ற பெயரால் இந்திய அரசியல் ஒரு புறம் ஆட்டுவிக்கத் துடிக்கிறது. மறுபுறம் பட்டாளத்தில் தற்பொழுது இருக்கும் இந்தி பற்றாது என்று 36 ஆயிரம் கலைச் சொற்களைப் புகுத்துகின்றனர். நம்மையெல்லாம் ஆரியம் என்ற பேய் வாயில் போட்டு விடத் துடிக்கும் ஆரியர் எல்லாரும் மொழிவெறியர்கள் இல்லையா?

"தென்னாட்டை அழிக்க வடநாடு செய்த
வஞ்சங்கள் சிறிதல்ல தம்பி" என்றும்,

"தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்!
செந்தமிழர் நிலை நினைத்தால் துடிக்கும் நெஞ்சம்"–

என்றும் உன்னைத் தட்டி யெழுப்பிய புரட்சிப் பாவலரை மொழிவெறியன் என்கிறாய்.

எத்தனையோ தென்னிந்தியர் மராட்டியமாநிலத்திலிருந்தும் தமிழனை மட்டும் வாட்டி வதைத்த "பால்தாக்ரே"க்களும் மைசூர் மாநிலத்

www.thamizham.net - Free E book No 7426

தில் தமிழர்களை எத்தனையோ இடர்களுக்குள்ளாக்கி வேடிக்கைபார்த்த வத்தல் "நாகராசு"க்களும் இனம் காப்போர், மொழிகாப்போர் என் பாய். தனித்தமிழுக்கும், தமிழனுக்கும்வேண்டி,

**"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய்கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லை; எனவே தமிழர் தோளெழுந்தால் எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!"**

என்று தூங்கிக்கிடக்கும் உன்னை எழுப்பும் பாவலர் பெருஞ் சித்திரனாரையும் மொழிவெறியர் என்பாய். இனியாகிலும் பிழையான கருத்தைக் கொள்ளாமல்,

"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று முரசுகொட்டு! ஆரியப் பிடியிலிருந்து விடுதலைப் போராட்டம் நடத்து! வெற்றி நமதே!

**—ம ரு. தமிழ்நம்பி-கப்பல் மீகாமன், பம்பாய்-1**

## [ம-112] குடத்துள் விளக்கா?

தமிழ்ப் பாவல! வணக்கம். தென்மொழி தமிழ்ப் பற்றுடையோர் கைகளில் தவழ்ந்தால் போதுமா? தனது குறிக்கோளை அடையவேண் டாமா? அடைவதற்கு அடியேன் கூறுவன: சிறுகதை வளர்ச்சி தமிழுக்கு இல்லையா? நல்ல தமிழில் நல்ல உயிர்த் துடிப்புடைய கதை களை வெளியிடலாமே! அத்தகைய உயிர்த்துடிப்புடன் எழுதுவோர் இல்லையா? ஏன்? பழைய தமிழ்நடையைப் (Classical Style) பற்றி எழுதித் தற்கால மக்கள் நடையை விடுவதேன்? வெளிநாடுகள் பற் றித் "தென்மொழி" ஒன்றும் உரையாது இருப்பதேன்? வெளிநாட் டறிஞர் கருத்துகளை வெளியிடாததேன்?

நாடக வளர்ச்சி நாடும் நாம் ஒரு நாடகம் ஒன்றைத் தொடர்ச்சி யாக வெளியிடலாமே! நேற்றுவந்த "துக்ளக்" நிமிர்ந்து நடக்கிறான். தென்மொழியோ சவலைப்பிள்ளை போன்று இன்னும் எட்டு வைக்காம லிருப்பது வருந்தத்தக்கது.

நூற்குசிரியம் "தமிழ் கற்றோர்" சுவைக்கத் தக்கதே யன்றித் தமி ழர் சுவைக்கத் தக்கதன்று. இதை இக்கால இன்றமிழில் எழுதலாம்; அல்லது இதை விடலாம்.

எழினி பற்றித் திறனாய்வுப்பகுதி வெளியிடலாம். இந்தியச்செய் திகளை விளக்கி அதில் தமிழனின் இடத்தைக் கூறலாம். நல்லறிஞர்

www.thamizham.net - Free E book No 7426

படங்களையும், சிறப்பிடங்களின் படங்களையும் இணைக்கலாம். கருத்துப்படங்கள், அரசியற் கட்டுரைகள் கட்டாயம் இடம்பெறவேண்டும். தி. மு. க. ஆட்சிக்கு வர "மாலைமணி" செய்த அருஞ்செயலைத் "தென்மொழி" பின்பற்ற வேண்டும். தந்தை பெரியாரவர்கள் பார்ப்பன ஏடுகள் வாங்காமை இயக்கத்தைத் தொடர்ந்துள்ளார்கள். பார்ப்பன ஏடுகள் தவிர நல்ல முன்னேற்றத் தமிழேடுகள், இதழ்கள் உண்டா? மக்களைத் தன்வயப்படுத்தாத நிலையில் தென்மொழி உள்ளது. குடத்துள் விளக்காய் இருந்தமையாற்றான் திரு. கருத்திருமன் முதலியோருக்குப் பாவாணர் போன்றோர் தென்படவில்லை. மக்களைத் தன்வயப்படுத்தாவிடின்–அதற்குரிய பகுதிகள் தென்மொழியில் இல்லாவிடின்–தொன்மொழி யெனும் தென்மொழியின் முடிவு அருகுள்ளதென்றறிக!

–கோட்டூர். சூ. இளஞ்சேரல், நெல்லை-2.

## (ம-113) "பாசறை" செய்த பணிகள்.

தனித் தமிழியக்கத் தானைத் தலைவர் அவர்கட்கு,

நலம். தங்கள் நலத்திலும், உ.த.க. நலத்திலும் பெரிதும்நாட்டம்

"தமிழகத்தின் தெருக்களிலே தமிழ்தான் இல்லை" என்று பாவேந்தர் பாடிப் பலநாள் ஆகிவிட்ட பின்பும் அற்றை நிலை முற்றும் மாறிவிட்டதாகத் தெரியவில்லை. எங்கள் ஊர்த் "தமிழியக்கப் பாசறை"க் கிளை இப்பணியில் இறங்கி வெற்றியும் பெற்றுள்ளது. இரண்டு மூன்று கடைகளைத் தவிர ஏனைய கடைகளைத் தற்போது தமிழ்ப் பெயர்ப் பலகைகள் அணி செய்கின்றன. எங்கள் பாசறை உறுப்பினரும், மிகச்சிறந்த ஓவியருமான மு. சு. மணியன் அவர்களைக் கொண்டு எங்கள் செலவிலேயே எல்லாப் பெயர்ப் பலகைகளையும் மாற்றிக் கொடுத்துள்ளோம்.

அவற்றில் சில:

க. திருச்சி டெய்லரிங் மார்ட்—திருச்சி தையலகம்.
உ. M. S. P. சைக்கிள் கம்பெனி—ம. சி. ப. மிதிவண்டி நிலையம்
௩. பஸ் ஸ்டாண்டு கால அட்டவணை—பேருராட்சி மன்றப் பேருந்துக் கால அட்டவணை.
௪. ரயில்வே கால அட்டவணை—புகைவண்டி நிலையக் கால அட்டவணை
௫. Elango Tailaring House—இளங்கோ தையலகம்.
௬. பழனியப்பா சலூன்—பழனியப்பா முடிதிருத்தகம்.

www.thamizham.net - Free E book No 7426

எ. Panchayath Board Park—பேரூராட்சி மன்றப் பூங்கா.
அ K. V. K. சாமி டெய்லரிங் ஹவுஸ்-கே.வி.கே சாமி தையலகம்
க. சோமையா டெய்லரிங் மார்ட்—சோமையா தையலகம்
கூ0. மீனாக்ஷி சைக்கிள் நிலையம்—மீனாட்சி மிதிவண்டி நிலையம்.

"பாசறை" உறுப்பினர்கள் எல்லாருமே அகவையில் மிகச் சிறியவர்களே. அவர்களாலேயே இவ்வளவு செய்ய முடியும் என்றால் ஊர்தோறும் உ. த. க வில் உள்ள பெரியவர்கள் இச் செயலில் இறங்குவார்களானால் வெற்றி உறுதி. "தென்மொழி", தமிழ்ச்சிட்டு" ஆகிய இரு இதழ்களையும் கண்டனூர்க் கிளை நூலகத்திற்குப் "பாசறைச்" செலவில் வாங்கி அளித்து வருகிறோம். இதுபோலும் உண்மைத் தமிழ்ப் பணிகளில் உ. த க. வின் ஆற்றல் மறவர்கள் உடனடியாய் இறங்கல் வேண்டுமென வேண்டுகிறோம்.

**—சித. நாச்சியப்பன், செயலர், தமிழியக்கப் பாசறைக் கிளை, கண்டனூர், முகவை (மாவட்டம்).**

## (ம-114) மதுரையில் நடந்தது தமிழ்வளர்ச்சி மாநாடா?

மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். இத்திங்கள் 6, 7-ஆம் நாட்களில் மதுரையில் நிகழ்ந்த மாணவர் தமிழ் வளர்ச்சி மாநாட்டில் கல்லூரிகளில் ஆங்கிலம் பயிற்று மொழியாக நீடிக்க வேண்டுமெனவும், தமிழ்மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டு படித்தவர்க்கே தமிழக அரசு வேலைகளில் முதன்மை அளிக்கப்படும் என அறிவித்ததைக் கண்டித்தும், தமிழ் வளர்ச்சிக்கு மாறான பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

இம் மாநாட்டில் சிறப்பாகப் பங்கேற்ற திருவாளர்கள் காமராசு, நிசலிங்கப்பனார், அசோக்மேத்தா, குருபாதனார், கருத்திருமன், திருவாட்டி. தாராகேசுவரி அம்மையார் போன்றவர்கள் தமிழ்மொழியில் ஆழ்ந்த தெளிந்த அறிவுடையவர்களா எனின் அல்லர். தமிழ் வளர்ச்சி என்னும் பேரால் நிகழ்ந்த மாநாட்டில் பங்கேற்க அவர்கள் கொஞ்சமும் தகுதி உடையவர்கள் அல்லர். இம் மாநாடு வழியாக மாணவர்களைப் பயன்படுத்திக் கொண்டு பேசிய அத்தனைக் கருத்துகளும் அரசியல் கருத்துகளே!

உயர்நெறி மன்றத்தின் நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் இருப்பதை நீக்கி இந்தியில்தான் நிகழவேண்டுமென உயர்நெறி மன்றத்தின் முன் மறியல்செய்த திருவாட்டி தாரகேசுவரி அம்மையார் அவர்களைத் தற்காலக் கண்ணகி என நிசலிங்கப்பனார் குறிப்பிட்டது கண்டிப்பதற்கு உரியதாகும். எனவே இம் மாநாட்டில் பேசிய பல கருத்துகளை ஒப்புநோக்கிப் பார்க்கும் பொழுது மதுரை மாநகரில் நிகழ்ந்த மாநாடு பேராயக்கட்சி மாநாடேயன்றித் தமிழ்வளர்ச்சிமாநாடு அன்று.

**—பெ. சு. அன்பரசன், மதுரை.**

www.thamizham.net - Free E book No 7426

# காலிங்கம்

பேராசிரியர். க. ப. அறவாணன், க. மு.

3.3. அதிகாரப் பொருள் கோடலில் காலிங்கரின் தனிப்போக்கிற்கு ஒரு சான்று-பொச்சாவாமை, (அதி; 54) என்ற அதிகாரத்திற்குப் பரிமேலழகர் (மறவியாகிய) சோர்தலைச்செய்யாமை என்றும், மணக்குடவர் மறவாமை என்றும், பரிதியார் ஆங்காரத்தால் அறிவில்லாமை என்றும் கூறுகின்றனர். காலிங்கர் இகழாமை என்று பொருள் காண்கிறார். பொச்சாப்பு என்று குறளில் வரும் எல்லா இடங்களிலும் இகழ்ச்சி என்றே பொருள் காண்கிறார்.[9] ஆனால்,

"புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்குசெலச் சொல்லு வார்" (719)

என்ற குறட்பாவில் இகழ்ச்சி என்ற பொருள் கொள்ள இயலாமையால், 'மறந்தும் சொல்லற்க.' என்று உரை காண்பதோடு, குறிப்புரையில் 'பொச்சாந்து = மறந்து' என்று உரை எழுதியுள்ளார். பொய்ச்சாப்பு-பொச்சாப்பு என்று காட்டுகிறார் காலிங்கர் (246)

40. குறள் வைப்பு: பத்துத் திருக்குறளை முன் பின்னாகத் தொடுத்து வைப்பதில், பரிமேலழகர் உரையிலிருந்து முற்றும் மாறுபடுகிறார் காலிங்கர் பரிமேலழகர் குறள்வைப்பிற்குக் காரணம் காட்டுவதோடு குறளையும் ஒருசில உட்பகுப்புகளாகப் பகுத்துக் காட்டுவர். எடுத்துக்காட்டாக இனியவை கூறல் என்ற அதிகாரத்தை, இன்சொல்லின் இலக்கணம், விருந்தோம்பலில் இன்சொல்லின் சிறப்பு, இன்சொல் கூறுவார்க்கு இம்மைப்பயன், மறுமைப்பயன், இருமைப்பயன், இன்னாத கூறலின் குற்றம் என்று ஒவ்வோரதிகாரத்தையும் உட்பிரிவாகப் பகுத்துக் குறட்பாக்களை அடக்கிக் காட்டுவார்; காரணமும் கூற முயல்வார். காரணமும் வைப்பழகும் காண முயன்றதால், பரிமேலழகர் உரையில் குறளமைப்பில் ஓர் ஒழுங்குப்பாடு தவிர்க்க முடியாததாகி விட்டது! இவ்விரு நோக்கமும் காலிங்கருக்கு இல்லையாதலால், அவரது உரையில் திருக்குறட்பாக்கள் சிதறிக் கிடக்கின்றன. ஒருசில குறட்பாக்கள் அதிகாரம் விட்டு அதிகாரம் கூட மாறிக் கிடக்கின்றன. 'வீழ்வாரின்' எனத் தொடங்கும் 1198-ஆம் குறள் தனிப்படர் மிகுதி (அதி. 120) எனும் அதிகாரத்தில் ஏனையோர் வைத்திருக்கக், காலிங்கர் நினைந்தவர் புலம்பல்

9. காலிங்கர் உரைபார்க்க: 199, 249, 285, 531 முதல் 540 வரை

www.thamizham.net - Free E book No 7426

(அதி. 121) என்ற அதிகாரத்தில் இறுதிக் குறளாக இதனை வைத்துள்ளார்.

4.1. 1198-ஆம் குறள் இருந்த இடத்தில், அவர் வயின் விதும்பல் (அதி. 127) என்ற அதிகாரத்திலுள்ள 'உரன் நடைஇ.' என்ற திருக்குறளைக் கொண்டு வந்து வைத்துள்ளார்.

4.2. நினைந்தவர் புலம்பல் (அதி. 121) என்ற அதிகாரத்தில் உள்ள 'விடாஅது' (1210) என்ற குறளை அவர்வயின் விதும்பல் என்ற அதிகாரத்தின் (127) ஆறுவது குறளாக வைத்துள்ளார். 'விடாஅது' என்ற குறள் இருந்த இடத்தில் தனிப்படர்மிகுதி என்ற (120) அதிகாரத்து 8-ஆம் குறளைக் கொண்டுவந்து அமைத்துள்ளார்.

4.3. இம்மாற்றத்திற்குக் காரணம் தனிப்படர்மிகுதி (120) நினைந்தவர் புலம்பல் (121) அவர்வயின் விதும்பல் (127) என்ற மூன்று அதிகாரங்களும் தனிமைத்துயரைத் தருவனவாதலால் இக் குறள் மாற்றம் நிகழ்ந்ததுபோலும். இக்குறள் மாற்றங்கள் திருவள்ளுவர் தம் காலத்தில் அதிகாரப் பெயர்களை அமைக்க வில்லை என்ற கருத்திற்கு இடம் தருமா என்பது ஆராயத்தக்கது.

4.4. 'அ'கரத்தில் தொடங்கி 'ன'கரத்தில் முடியும் தமிழ் எழுத்து முறையைப் போலத் திருக்குறளும் அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிவதாகச் சிலர் சொல்லி வருகின்றனர். ஆனால் "அகர முதல எழுத்தெல்லாம், என்ற குறளிலிருந்து எல்லா உரையாசிரியர்களும் தொடங்குகின்றனர் என்பது உண்மை. 1330-ஆவது குறளாக,

"புலத்தலின் புத்தேள்நா(டு) உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னார் அகத்து"

என்ற திருக்குறளை இறுதிக்குறளாகக் கொண்டுள்ளார் காலிங்கர். இவர் மட்டுமன்றி, மணக்குடவர், பரிப்பெருமாள் ஆகியோரின் முறைவைப்பும் இதுபோன்றுள்ளது. காலிங்கர் கொண்ட குறள் வைப்பில் இது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

## உரை ஆராய்ச்சி.

5.0. உரையின் நடை: பலவேறு நிலைகளில் காலிங்கர் உரை தனிநிலை வாய்ந்தது. வினா எழுப்பி விடையிறுக்கும் முறை பரவிக் காணப்படுகிறது. இது வடமொழிச்சமய உரைகளின் முறை என்பது ஈண்டுக் கருதத்தக்கது. பரிமேலழகர் உரைபோலச்சொல்லுரை கூறும்

www.thamizham.net - Free E book No 7426

பாங்கு இவரிடத்துக் காணப்படவில்லை. சிறப்புரை அமைப்பும் தொடர்ந்து காணப்படவில்லை. பெரும்பாலும் எல்லா உரைகளும் பிண்டப் பொழிப்புரைகளாகவே உள்ளன.

5 1. குறளுக்கு உரைகாணும்போது, குறள்வரியையே தம் உரைவரியாகக் கொள்ளும் பாங்கு இவரிடம் உண்டு. 189-ஆவது குறட்பாவில் வரும் நிலம் என்ற சொல்லிற்கு 'அகழ்வாரைத் தாங்கும் பூமி' என்று இவர் உரை வகுப்பதைக் காணலாம். ஏனை உரைகாரர் களிடம் இலக்கிய மேற்கோள் காட்டும் மரபு பெரும்பகுதி காணப்படு கிறது. இவரிடத்தில் அவ்வாறு இலக்கிய மேற்கோள் செழுமையாக இல்லை. ஒரேஓர் இடத்தில் மட்டும் மேற்கோள் காட்டி அமைக்கிறார்.

"இம்மையே தவம்செய் யார்கை இருநிதி அகற்றல் வேண்டி
நம்மையும் கள்ளும் சூதும் நான்முகன் படைத்து விட்டான்"

என்கிறார் (920). இம்மேற்கோளும் எந்த இலக்கியத்தைச் சார்ந்தது என அறிய முடியவில்லை. வேறு இலக்கிய மேற்கோள் எடுத்துக் காட்டுவதாகத் தெரியவில்லை. ஆனால், நாலடியார், புறநானூறு, சீவக சிந்தாமணி ஆகியவற்றை மேற்கோளாகக் காலிங்கர் காட்டியுள்ளார் என்று சிலர் குறித்திருப்பது, பொருத்தமாகத் தென்படவில்லை.[10] இவரது உரைநடையில் தெளிவும் எளிமையும் காணப்படுகின்றன. இறையனார் களவியலுரை நடை போன்ற உரை நடைகளை வரைந் துள்ளார்[11].

5.2. இவர் நடை தனித்தமிழ்நடை என்று குறிப்பர்[12]. அவ் வாறு உரையாசிரியர்களிடமிருந்து இவரைமட்டும் தனியாக எடுத்துக் காட்டுமளவுக்கு இவர் தூய தமிழ்நடை எழுதியவர் என்று கூறு வதற்கில்லை. ஏனெனில் மிக எளிதான இடங்களில்கூட மிக எளிதாக வடசொற்களைக் கையாளுவதைக் காணலாம்.

| | |
|---|---|
| உபகாரம் 92, 166. | ஞானம் 270 |
| க்ஷேமம், 126, 459, | இலட்சணம் 294. |
| பரிகரிக்க 132 | மனம் 332. |

10. உரையாசிரியர்கள்:-மு. வை. அரவிந்தன்-பக்-297 .
11. பார்க்க: 475, 576, 650, 677, 1082, 1279.
12. திருப்பனந்தாள் பதிப்பு-பொருட்பால்-பக் 36.

www.thamizham.net - Free E book No 7426

நியாயம் 161
ஞாயம் 165
லட்சுமி 167
சேஷ்டாதேவி 167
தருமம் 189
பூமி 189
புண்ணியம் 225
மதம் 225
மூர்க்கன் 239, 572
காரியம் 224
அசனம் 259
ஓமத்திரவியம் 259
சித்தி 265
முத்தி 265
சொர்க்கம் 265
வாக்கு 332
காயம் 332
இலாபம் 420, 449
விநியோகம் 478
செயம் 481
பூபாலர் 554
கிலேசபாரம் 570
விநோதம் 720
சத்ரு 751
மித்ரு 751
பாதாதிகேசம் 761
சேவகன் 770
உபாயன் 912
விசேஷித்தல் 18, 29, 71
நிமித்தீகமத்தர் 18, 29, 71
துக்கம் 34

6.0. புத்துரை: பரிமேலழகர் உரை, கொளு, பதவுரை, சிறப்பு உரை, இலக்கணங்கூறல், மேற்கோள் காட்டல், அதிகார உட்பகுப் புக் கூறல், பாட வேறுபாடு காட்டல், பொருள் வேறுபாடு காட்டல், வேற்றுரையை மறுத்தல் என்றமையும். காலிங்கரிடம் இத்தகைய ஒழுங்குமுறை இல்லை. காரணம், பரிமேலழகருக்கு முன், பல உரை யாசிரியர்கள் அமைத்து வைத்த உரைப்பாதையில் பரிமேலழகர் எளிமையாக அழகான பாதையை அமைத்துக் கொண்டார். காலிங் கருக்கு முன் சில உரைகள் இருந்தவேனும், அவை தொடக்க உரை களாக இருந்திருக்க வேண்டும். ஆதலான், காலிங்கர் உரை முறை யான பகுப்புடையதாக அமைந்திருக்கவில்லை. எனினும் அதனுள் இருக்கும் புதுமையினையும் சிறப்பினையும் மறுத்தற்கில்லை.

பரிமேலழகர் உரையையும் காலிங்கர் உரையையும் ஒப்பிட்டுப் பார்த்ததில், 1330 குறட்பாக்களினுள் 806 குறட்பாக்களுக்கு இவர் பிறரிடமிருந்து மாறுபடும் உரை கண்டிருத்தலைக் காண்கிறோம். அறத்துப்பால் 160 (380), பொருட்பாலில் 472 (700) காமத்துப் பாலில் 174 (250) என்ற அளவில் உரையில் பிறரிடமிருந்து மாறு பாடு காணப்படுகிறது.[18]

---

13. புள்ளிவிரிவுகள், திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு–கி.வா.ச. திருக்குறள் வரை வேற்றுமை–பேரா. சாரங்கபாணி, திருக் குறள் திருப்பனந்தாள் பதிப்பு ஆகியவற்றை அடிப்படை யாக வைத்தெடுக்கப்பட்டவை.

www.thamizham.net - Free E book No 7426

7.0. சிறப்புஉரை: மூலத்திற்கு உரைபொருள் கூறுவது முதற்கட்டம். அதற்கு விளக்கமும் சிறப்பும் கூறுவது இரண்டாம் கட்டம். இவ்வமைப்பு பரிமேலழகர் உரையில் நன்கு சிறந்து காணப் படுகிறது. காலிங்கர் உரையிலும் இவ்வமைப்பு பெரும்பான்மையக் குறள்களில் காணப்படுகிறது. இச் சிறப்புரையைக் காலிங்கர் சொல் விளக்கமாகவே பெரும்பாலும் அமைத்திருக்கிறார். இவரது உரையில் தலையாய சிறப்பு இதுவாகும். சில சொற்களுக்கு அகரமுதலி போலச் சுருங்கப் பொருள் தருவது இவரது பாணி.

எச்சம்–ஒழுக்கம் 114
இறத்தல்–கடத்தல் 152
சீர்மை–ஒழுக்கம் 195
சிறப்பு–ஆக்கம் 195
பொச்சாப்பு–இகழ்ச்சி 199
அவாவல்–சூழ்தல் 215
கடப்பாடு-முறைப்பாடு 218
காட்சி–அறிவு 218
எவ்வம்–துன்பம் 238
எச்சம்-செல்வம் 238
உறுகண்–இடுக்கண் 221
சிமிழ்த்தல்–வாய்மேல் விரலேற்றிப் பறவைபோல) விளித்தல்(வேறுயாரும் சொல்லாத உரை) 275
எள்ளாமை–இகழாமை 281
ஒளி–புகழ் 546, 870
உறை–உறைவிடம் 564
எய்யாமை–முயலாமை–296.
தன்நெஞ்சு–உள்ளக்கருவி–293
குடம்பை–புள்இயற்றும்கூடு–338
ஒருதலை–இணையிறந்ததலைமைப்பாடு
துப்புரவு–நுகர்வு–378
மாடு–பொருள்–400
நுழைதல்–எஃகுதல்-407
இவறல்-உலோபித்தல் 432
உயிரெச்சம்-முத்தி 501
நிரப்பு–இறப்பு 532
எழுமை–மறுமை 538
ஓர்ந்து–புரிந்து 541
எண்பதம்–எண்ணும் நெறி 548
உறை–மழைத்துளி 559
ஒருவந்தம்–பெருஞ்செல்வம் 563, 593 14

14. ஒருவந்தம் என்பதன் பொருளாக ஏகாந்தம் என்பதைக் குறிக்கிறார் பரிமேலழகர். 'ஒரு' என்ற தமிழ்ச்சொல்லும் அந்தம் என்ற வடசொல்லும் கலந்த கலவைச் (Hybrid) சொல் எனக் கொள்வர் பேராசிரியர் எசு. வையாபுரிப்பிள்ளை (காவியக்காலம் பக்-52) கலவைச் சொல்லாகக் கொண்டு. கலவைச்சொல் பெருகி வழங்கிய காலம் பத்திக் காலமாதலால், திருக்குறளும் பத்திக் காலத்தை ஒட்டியதே எனத் தருக்கமிடுவர். ஆனால் காலிங்கர் உரையின்படி ஒருவந்தம்–பெருஞ்செல்வம் எனப் பொருள் கொள்ளின் அச்சொல் கலவைச்சொல் எனக் கொள்வது பிழையாவதைக் காணலாம்.

www.thamizham.net - Free E book No 7426

கை-ஒழுக்கம் 567, 925, 935, 1036.
வெறுக்கை-செல்வம் 600
ஊழ்த்தல்-மலர்தல் 650
சுதை-மணலும்நீரும் கூடிய சுண்ணும்பு 714
கொட்பு-புரிதல் 789
எவ்வம்-துக்கம் 853
தவல்-குறைதல் 856
மண்பகை-நீர்வெள்ளம் 883
அலகு-கலப்பை 1034
நுதுத்தல்-அமுக்குதல் 1148
அதர்-வழி 594
தெய்வம்-விதி 619
வாலிமை-வெண்மை 714
அரணிப்பு-நாவடக்கம் 715
உப்பு-இனிமை 801, 1328
தா-வருத்தம் 853
உலகம்-ஒழுக்கம் 874
பொன்-இரும்பு 888
கஃசு-காற்பலம் 1037

8.0. விரிவுரை: • சுருக்கமாகச் சொல்லுக்கு விளக்கம் தருவதோடு சில இடங்களில் விரிவான விளக்கமும் தருகிறுர்.

> "சுழன்றும்ஏர்ப் பின்ன(து) உலகம் அதனுல்
> உழந்தும் உழவே தலை" (1031.)

இப்பாவிற்குக், "கடலோடியும், மலையேறியும், காடுமண்டியும், நாடுபரந்தும், ஓடித்திரிதலே யன்றியும், உண்பான் பொருட்டு இதனைப் பிறபிற முயன்று அலம் வந்தும் அதனுல் ஒரு பயனும் இல்லை. ஆதலால் ஏர்கொண்டு வாழ்வார் தமது வாழ்வைச் சேரலே பயனுள்ள வாழ்வாம்; மற்று அஃது எங்ஙனமெனில், உழுகைப் பொருட்டாக உழுகருவிக்குக் காடு புக்கு மரம் தடிதலும், கனவிய கொழுவும் அதற்கேற்ற பல கருவியும், வன்புலம் மென்புலம் வடிவித்து ஏற்றலும், படைக்கால் அமைத்தலும் முதலிய பலவகைப் பயிர்வளம் முற்றியவை அவையனைத்தும் உழந்தும் உழவேற்றலே தலைமைப்பாடு ஆவது என்று காலிங்கர் எழுதுகிறுர். சொற்பொருளைக் காட்டிலும், அக்கருத்து எழுச்சியின் பின் புல விளக்கத்தைக் காண்கிறேம். இதுபோன்ற அமைவு, 408, 585, 635, 949 ஆகிய பாக்களிலும் காணப்படுகின்றது.

(தொடரும்)

## உறுப்பினர்களுக்கு.........!

உறுப்பினர்கள் தொகை, மடல் விடுக்கையில் தவருது தங்கள் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள்.

—அமைச்சர்

www.thamizham.net - Free E book No 7426

# கருப்பையுள் நம் ஒன்பதுமாத வளர்ச்சி!

செ. பன்னீர்ச்செல்வன்.

தோற்றுவாய்: உயிரினங்கள் உலகினின்றும் அற்றுப்போகாமல் தொடர்ந்து வரவே உயிர்த்தோற்ற அமைப்புகள் ஒவ்வோர் உயிரினங்களிலும் அமைந்து கிடக்கின்றன. உயிர்த் தோற்றத்திற்கு அடிப்படையானவர் பெற்றோரே. ஆண் பெண் என்ற இரு பாலினங்களில் பெண்ணினமே உயிர்த்தோற்ற நிலைகட்கு நிலைக்களனாகவும் சிறப்பாகவும் கருதப் பெறுகின்றது. ஆணினால் வெளியேற்றப் பெறும் உயிரணுவும் (Sperm) பெண்ணின் கருப்பையில் தோன்றும் சினைமுட்டையும் (Ovum) உயிர்த் தோற்றத்தின் வித்து ஆகும்.

ஒரு புழுவைப் போன்று நெளிந்து வளைந்து செல்கின்ற ஒரு நுண்ணிய ஆண்கரு உயிரணு, ஒரு முதிர்ந்த சினை முட்டையினுள் வலிந்து நுழைந்து இரண்டறக் கலக்கின்ற நொடிப்பொழுதில்தான் நம் ஒவ்வொருவருடைய வாழ்வும் தொடங்குகின்றது. ஆண் உயிரினங்கள் பல்லாயிரக் கணக்கான அளவில்-ஓர் ஊசிமுனை மீது மிக எளிதே கொள்ளும் அளவுக்கு மிகமிக நுண்ணியவாக இருக்கின்றன. ஒரு வேளையில் ஆணினின்றும் வெளியாகும் உயிரணுக்களின் எண்ணிக்கை நாற்பது கோடி எனக் கணக்கிடப் பெற்றுள்ளது. ஆண் கரு உயிரணு சினை முட்டையை அடைவதற்குப் பெண்ணின் சினைக் குழல் வழியே செல்லுதல் வேண்டும். அச்செலவில் கோடிக்கணக்கான வற்றுள் ஒன்றே ஒன்றுதான் வெற்றி பெறுகின்றது. இச்சந்திப்புத் தவறுமேயாகில் இரண்டுமே அழிந்து போகின்றன. அவை யிரண்டும் சந்திக்கும் நிகழ்ச்சியே கருக்கொள்ளல் எனப்பெறும்.

இக் கருக்கொள்ளல் நிகழும் நொடிப்பொழுதில்தான், புதிய மாந்த உயிரினத் தோற்றம் மட்டுமல்லாமல், தன் பாலினம் (Sex) தனிப்பண்பு (Individuality) ஆகியவையும் முடிவு செய்யப் பெறுகின்றன அது தன்னுடைய இரு பெற்றோரின் உடலியற் சாயல்களை மரபுரிமையாகப் பெற்றுப், பின், தன்னுடைய வழிமுறையினர்க்கும் தன் முறையாகச் செலுத்துகின்றது. உயிரியல் கொள்கைப்படி பாலியல் நிகழ்ச்சிக்குரிய ஏற்பாடுகள் யாவும் இப்பெற்றோர்களின் பாலியல் உறுப்புகளில் தனித்தனியே அவை பிறப்பதற்கு ஒன்பது திங்கள் கட்கு முன்பாகவே அமைக்கப் பெறுகின்றன. இத்தகையப் புதிர்ப் போன்ற உயிரணுக்களின் கூட்டம்தான் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த வழிமுறையினர்க்கு "உயிர் கொளுத்தும்" செயலை மேற்

www.thamizham.net - Free E book No 7426

கொள்ளுகின்றது. பாலியல் உறுப்புகள் குழந்தைப் பருவத்தில் இயக்கம் ஓங்கியிருக்கின்றன.

குழந்தை எப்படியிருத்தல் வேண்டும் என்பது, பெற்றோரின் ஆண்கரு உயிரணு, சினைமுட்டை இவற்றில் ஒவ்வொன்றிலும் 48 ஆக அடங்கியுள்ள இனமரபு இழைமக்கூறுகளின் (Chromosome), சரிபாதியின் ஒருங்கிணைவின்போதே உறுதி செய்யப் பெறுகின்றது. அவ்விழைமக்கூறுகளின் பல்வேறு வகைப்பட்ட ஒழுங்கும் முறைமையும் அற்ற இணைவுகள் தாம் ஒரு குடும்பத்தில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையின் தலைமுறையின் வண்ணம், அதன் தன்மை, கண்கள், தோல் இவற்றின் நிறம், உடலின் அமைப்பு இவை யாவற்றிற்கும் பொறுப்பாகின்றன. இவ் வழிமுறைப் பண்பியல்புகள் ஒரு குழந்தைக்கு இரு பெற்றோரிடமிருந்தும் வருவதால், அஃது எப்போதும் தன் தாய் தந்தையின் தனித்தனி உருவம் போன்று அமைவதேயில்லை. அஃது ஒரு துறையில் தனிச்சிறப்பும், புகழும், வெற்றியும் கொண்டு விளங்கிய தன் பெற்றோரின் ஆற்றல் முழுமையும் அப்படியே பெறுதல் இயலாது. வேண்டுமாயின் அத்துறையில் செல்லுதற்கு ஏற்ற நாட்டம் அல்லது உளப்பாங்கு கொண்டு அமையும். இவ்வாற்றல், ஒருவன் தன் தன் முயற்சியினால் மட்டுமே பெறக்கூடியதாக இருக்கின்றது.

முதல் திங்கள்: முதல் திங்களில் நாம் தாயின் கருப்பையில் ஒரு கடுகைக்காட்டிலும் சிறிய முட்டை உயிரணுவிலிருந்து ஏறக்குறைய நீளத்தில் கால் விரற்கிடை (Inch) நீளமும், அளவில் ஐம்பதுமடங்கும், எடையில் எண்ணுயிர மடங்குமாக வளர்கின்றோம். ஒரு சிறிய வட்டவான முட்டை உயிரணுவிலிருந்து தலை, உடல், வால் துடிக்கின்ற நெஞ்சாங்குலை (Heart) சுழற்சியுடைய குருதி இவற்றையுடைய ஓர் உயிரியாக மாறுகின்றோம். நமக்கென அளவிடப்பெற்ற வாழ்நாளில் நமக்காகப் பணியாற்றப் பெரும்பான்மை எல்லா உறுப்புகளும், பிறப்புக்கு முன்பாகவே மறைந்து போகின்ற சில உறுப்புகளும் தோன்றத் தொடங்குகின்றன.

கருக்கொள்ளல் (Fertilization) நிகழ்ந்தவுடன் ஆண்கரு உயிரணுவின் நுழைவால் முட்டைக்குள் ஏற்பட்ட கலக்கம் முட்டையை இரண்டு உயிரணுக்களாகப் பிரிக்கின்றது. இம்முறை, இரண்டு நான்காகவும், நான்கு எட்டாகவும், மாந்த உடலமைப்பு முழுமையும் வளர நிகழ்கின்றது.

www.thamizham.net - Free E book No 7426

தாயின் குருதியானது, உயிர்வளி, நீர், உணவு இவற்றை நச்சுக்கொடிக்குத் தருகின்றது. அங்கு அவை உயிரணுத் தொகுதியினால் உறிஞ்சப்பெற்றுக் கொப்பூழ்க்கொடியிலுள்ள (Umblical cord) குருதிக் குழல்களின் வழி முட்டைக் கருவுயிர்க்கு அனுப்பப்பெறுகின்றன. அதனுடைய கழிவுப் பொருள்கள் நச்சுக் கொடிக்குக் (Placenta) கொண்டு வரப்பெற்றுத் தாயின் குருதிக்கு மாற்றப்பெறுகின்றன. தாயின் குருதி அவற்றைக் குண்டிக் காய்கட்கும் (Kidneys) நுரையீரல்கட்கும் (Lungs) வெளியேற்றப் படுவதற்காக அனுப்புகின்றது.

நம் உணவுக்கான போராட்டத்தையும் நாம் இப்பொழுதே தொடங்குகின்றோம். இதற்காகவே உயிரணுத் தொகுதிகளால் (Trophoblast) ஆகிய ஓர் உண்பிக்கும் ஏடு (Feeding Layer) இச் சிறு உருண்டையான உயிரணுவைச் சுற்றி அமைகின்றது. இப்பொழுது முட்டைக் கருமுளை பனிநீர் (Amuiotic Fluid) என்னும் நீர்மச் சூழலுக்குள் மிதக்கின்றது. இந் நீர்மச் சூழல் அதிர்ச்சித் தாங்கியாகச் செயற்படுகின்றது. மிகக் கடுமையான அடிகள் தாயின்மீது விழ நேர்ந்தாலோ அல்லது தாயின் உடல் குலுங்கப் பெற்றாலோ, அவ்வதிர்ச்சி கருமுளைக்குச் செல்வதில்லை. மேலும் கருமுளையின் வெப்ப நிலை மாறுபடாமலும் இது காக்கின்றது.

அதனுடைய எளிய அமைப்பில் முதலில் நெஞ்சாங்குலையும், மூளையுந்தாம் பெருக்கமடைகின்றன. இது, பதினேழாம் நாளில் தனிக்குடில் போன்ற அமைப்பாகத் தோன்றுகின்றது. இவ்வெளிய குழல் நெஞ்சாங்குலையின் சாயலைப் பெறுமுன்னர், பல மாறுதல்கட்குட்படுகின்றது. தன் பணியினைத் தொடங்குவதற்குச் சேய்மையிலுள்ள ஒரு நாளுக்காகக் காத்திராமல் உடனேயே துடிக்கவும், ஒலி ஒழுங்குடன் சுருங்கி விரியவும் தொடங்கி வாழ்நாள் முடிவுறும்வரை தொடர்ந்து துடித்துக்கொண்டே யிருக்கின்றது.

இதே நேரத்தில், தடித்த, முட்டை வடிவமுள்ள ஒரு தட்டு நரம்பு மண்டில அமைப்பாகத் தோன்றுகின்றது. பிறகு ஒரு குழல் இத்தட்டின் விளிம்பிலிருந்து தோன்றி மாறுதல் பெறுகின்றது. இக் குழலின் முன் முனைப்பகுதி மூளையாகவும், பின்முனைப் பகுதி முதுகந் தண்டாகவும் (Spinal Chord) பின்னர் மாறுகின்றன. வயிறும் வாயும் தோன்றத் தொடங்குகின்றன.

www.thamizham.net - Free E book No 7426

இருபத்தைந்து நாட்களில் தலை, வால்முளைகள். வயிறு. முதுகு இவற்றையுடைய ஒரு விரற்கடை நீளமுள்ள உயிரியாக இருக்கின்றது. நுரையீரல்கள் முன்பகுதி உள்ளுறுப்பின் அடித்தளத்தில் ஓர் ஆழமற்ற வரிப்பள்ளம் போன்று தோன்றுகின்றது. ஈரற்குலையானது நெஞ்சாங்குலைக்குச் சற்றுப் பின்புறத்தில் அவ்வுள்ளுறுப்பின் சுவரில் தழும்புபோல் அமைகின்றது. அஃது இறுதியில் தன்னுடைய குண்டிக்காய்களை அமைக்கின்ற மிக நீண்ட பணியினையும் மேற்கொள்ளுகின்றது.

திங்களிறுதியில் முட்டைக் கருமுளை, கால் விரற்கடை நீளமும் முற்றிலும் வட்டமாக வளைந்தும், தன் வயிற்றுக்குக் கீழே குட்டையான மிகச்சிறு வாலையுடையதுமாக இருக்கின்றது. தன்னுடைய உடலின் இரு பக்கங்களிலும் சிறிய முளைகளைத்(Nubbins)தொடக்க நிலைக் கைகளாகவும் கால்களாகவும் கொண்டுள்ளது. முதிர்ச்சியுருத முளைக் குழலினின்று உந்தித் தள்ளப்பெற்ற சிறு பைகளைப்போல் தலையில் கண்கள் தோன்றுகின்றன. தலையின் முன்புற மேல்தோலில் ஏற்படும் தடிப்பு மூக்கின் தொடக்கமாக இருக்கின்றது. ஒவ்வொரு கண்ணுக்கும் பின்புறத்தில் அண்மையிலேயே காது ஒன்று விரிவடையத் தொடங்குகின்றது.

இரண்டாந் திங்கள்: இரண்டாந் திங்களில் அது வாலுடன் கூடிய குமிழ்போன்ற உருவத்துடன் தலைப்பிரட்டை (Tadpole) போல் தோற்றமளிக்கின்றது. இருப்பினும், மிகப்பெரிய, கீழ்நோக்கி வளைந்துள்ள தலை, மீனிற்கு உள்ளது போன்ற செவுள் வெடிப்பு கால்கள், கைகள் இவற்றிற்கான அமைப்பில்லாத முளைகள் இவற்றைக்கொண்டு, மாந்த அமைப்பின் தோற்றத்தைச் சிறிதளவு பெற்றிருக்கின்றது. எலும்புகளும், தசைநார்களும் மேற்றோலுக்கும் உள்ளுறுப்புகட்கும் இடையில் உடலின் பொதுத்தோற்ற அமைப்பைச் சுற்றிலும் பெருக்கமுறுகின்றன. இப்பொழுது மேற்புற. கீழ்ப்புறத் தாடை எலும்புகளை எல்லையாகக் கொண்ட வாய், ஒன்றியிணைகின்ற தசைநார்களினால் படிப்படியாகத் தன் அளவில் குறைந்து உருவாகின்றது. அகன்ற மூக்கொன்று அமைகின்ற வரையில் மூக்குக்குரிய உட்பைகள் மெதுவாக ஒன்றுக்கொன்று அண்மையில் நகர்கின்றன தலையின் இரு பக்கங்களிலும் அமைந்த கண்கள் முன்புறத்திற்கு மாற்றப் பெறுகின்றன. இத் திங்களின் இறுதிக் கிழமையில்தான் கண்ணிமைகள் வளரத் தொடங்கி விரைவிலேயே மூடிக்கொள்ளுகின்

www.thamizham.net - Free E book No 7426

றன. பக்க உறுப்புகளின் முளை (Limb Buds) நீட்சி பெறுகின்றன. துடுப்பின் விளிம்பு போன்று தட்டையாக ஆகின்றன. விரைவில் ஒவ்வொரு தட்டுக்குள்ளேயும் விரல்களுக்காக ஐந்து விளிம்புகள் வரிப் பள்ளங்களால் பிரிக்கப் பெற்று வெட்டப் பெறுகின்றன. ஒவ்வொரு பக்க உறுப்பிற்குள்ளேயும், முழங்கை, மணிக்கட்டு, முழங்கால் கணுக்கால் இவற்றைத் தோற்றுவிக்கும் தசைநார்கள் தோன்றுகின்றன.

மாந்த வால் (Human Tail) ஐந்தாங் கிழமையில் மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்த போதிலும், விரைவிலேயே அதன் இயக்கம் தாழ்வுறுகின்றது. நெறிபிறழ்வான நிகழ்ச்சிகளில் மட்டும்தான் அது பிறக்கும் குழந்தைகளில் காணப்படுகின்றது.

திங்களிறுதியில் பாலினப் புறவுறுப்புகள் குறிப்பான தோற்றம் பெறுவதால் பாலினம் உள்ளுறுப்புகளில் தெளிவாக உறுதி செய்யப் படுகின்றது. இவற்றின் வளர்ச்சியில் மிக்க வியப்பூட்டும் படியானது, இரு பாலினங்களிலும், முதலில் அமைகின்ற உறுப்புகள் யாவும் ஒன்றுபோன்று இருப்பதுவே யாகும்.

இத்திங்களில் அது தன்னுடைய நீளத்தில் ஆறு மடங்கும், எடையில் ஏறத்தாழ ஐந்நூறு மடங்குமாகப் பெருகுகின்றது. இத் திங்களின் வாழ்க்கையானது மாந்தச் சாயலின் அடையாளம் கருமுளை மீது பொறிக்கப் பெறுவதோடு முடிவுறுகின்றது.

மூன்றாந் திங்கள்: இப்பொழுதுதான் இந்த ஆண்மை மிக்க ஆணினக் கரு எளிதில் மருட்சியடைகின்ற பெண்ணினக் கருவின்மீது தன்னுடைய மேம்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்கின்றது. ஏனெனில் பெண்ணினக் குழந்தைகள் பாலினக் கருத்தின்றியே காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்கும் பொழுது, ஆணினக் குழந்தைகளோ தங்கள் பாலினப் பெருக்கத்தின் முயற்சியிலேயே ஈடுபடுகின்றன.

இக் காலப் பிரிவின் தொடக்கத்தில் குழந்தைப் பருவத்தின் தற்காலிகப் பற்கள் இருப்பதும் அவற்றிற்கான பொருத்துக் குழிகளும் (Sockets) கடினமாகிக் கொண்டிருக்கும் தாடை எலும்புகளில் தோன்றுகின்றன. "குரலொலியை எழுப்புகின்ற குரல்வளை அதிர்வு நாளங்கள் (Vocal Cords) இப்பொழுது தோன்றுகின்றன" இவை தடித்தும் மென்மையாயும், நுண்துளை நிரம்பியவையாயும் இருக்கின்றன.

www.thamizham.net - Free E book No 7426

மூன்றுமாத முதிர்கரு முளையினுடைய செரிமான இயக்கமுறைத் தன்னியக்கத்தின் அடையாளத்தை அறிவிக்கின்றது. வயிற்றின் உட்புறத்தில் ஏடுபோல் அமைகின்ற உயிரணுக்கள், சளி போன்ற பாய்மத்தைச் (Fluid) சுரக்கத் தொடங்குகின்றன. அப் பாய்மம் செரிமான உறுப்புகளின் வழியே உணவு செல்கின்ற பாதையில் வழ வழப்பை உண்டாக்குகின்றது. ஈரல் உணவுக் குழலின் கீழ்ப்பகுதியினுள் பித்த நீரைச் (Bile) சொரியத் தொடங்குகின்றது. குண்டிக்காய்களும் சிறுநீரைச் சுரப்பிக்கின்றன.

உள்ளுறுப்புகளின் மீது அமைந்திருப்பவை, எலும்புகளும் தசை நார்களுந்தாம். அவை, உடலின் அமைப்பு, புறத்தோற்றம் (Contours) வலிவு, ஆகியவற்றை முடிவு செய்கின்றன.

நான்காந் திங்கள்: இத் திங்களில் கருமுளை, தன்னுடைய தலையும் முதுகும் போதிய அளவு விறைப்பாகவுள்ள ஓர் இயல்பான குழந்தையின் சாயலைக் கொண்டிருக்கின்றது! முகம் அகன்றும், நல்ல அமைப்புடனும் அகன்ற இடவெளியைக் கொண்ட கண்களுடனும், இருக்கின்றது. கைகளும், கால்களும் நனருக அமைந்துள்ளன. விரல்கள் சற்று அகன்றும் நெகிழ்வானவையாகவும், இருக்கின்றன. ஒவ்வொரு கை, கால் விரல்களின் முனையிலும், கை, கால் விரற்கோடுகளும், இவற்றின் அடிப்படையான தோல் விளிம்பாலாகிய வட்ட அடுக்குகளின் அமைப்பும் தோன்றுகின்றன. இத்தோல் விளிம்புகளின் அமைப்பு குறிப்பிடத்தக்க வகையில் ஒவ்வொரு கருமுளைக்கும் வேறுபட்டே இருக்கின்றது.

உடலின் தோல் பொதுவாகக் கருஞ்சிவப்பு வண்ணமாயும் முற்றிலும் சுருக்கங்கள் உடையதாயும், இப்பொழுது இருக்கின்றது. தோலினடியிலுள்ள குருதி நாளங்களில் செல்கின்ற குருதி அதனுடைய நிறத்தை முடிவு செய்கின்றது. தோலினடியில் கொழுப்பு அமைகின்ற வரையில் அது தனித்தும், சுருங்கியுமே இருக்கின்றது.

இப்பொழுது கருமுளை கிளர்ந்தெழுகின்றது; தசை நாண்களை விறைப்பாக்குகின்றது; மிக்க வலிவோடு கை கால்களை உந்தித் தள்ளுகின்றது, தாயினுல் உணரப் பெறுகின்ற. முதல் அசைவு, பறவை இறக்கைகளை அடித்துக்கொள்ளும் தன்மையில் இருக்கும். கருப்பையைச் சார்ந்த சுவரில் விழுகின்ற குழைந்தையின் அடிகளை அதன் தாய் ஓர் உயிர் கருப்பையின் கதவினைத் தட்டுவதாக, அறிந்து உணர்ந்து மகிழ்வாள்.

www.thamizham.net - Free E book No 7426

ஐந்தாந் திங்கள்: உழைப்பு, பங்கீடு, தனித்துறைப்பாடு, விளை பொருள் மாற்றம் இவை எவ்வளவு சிறப்பாக யாந்தக் கூட்டுறவு அமைப்பில் உள்ளனவோ அவ்வாறே உயிரணுத் தொகுதிகளிலும் உடலுறுப்புகளிலும் அமைந்துள்ளன. செரிமான உறுப்புகள் உணவாக உட்கொண்ட பொருளை உயிரணுக்களின் ஆக்கக் கூறுகளாக (Component) நிலைமாற்றுகின்றன. குருதியில் சுழற்சி பெறுகின்ற பாய்மங்கள் பரவலான போக்குவரத்து அமைப்பு முறையாக அமைகின்றன. நரம்புகள் யாவும் கம்பிவடமாகவும் (Cable) மூளை நடுவண் இணைப்பகமாகவும் (Central Exchange) இயங்குகின்றன. ஆற்றல் வாய்ந்த உட்சுரப்பிகள் பல, உடலியக்கங்களினுடைய உறுதி, செயலூக்கம், விரைவாற்றல் இவற்றை வரையறுக்கின்றன.

தோல் உடலைக் காப்பதாகவும், உறுப்புகளின் கூட்டுறவைக் கட்டுப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது பிறப்பிற்குப்பின் நடைபெறுவது போன்றே, மேற்பரப்பிலுள்ள உயிரணுக்கள் யாவும் இடைவிடாது கழற்றி எறியப்பெற்று, தொடர்ந்து வளர்ச்சி பெறுகின்ற தோலினால் கீழிருந்து மாற்றி அமைக்கப் பெறுகின்றது.

வெயர்வைச் சுரப்பிகளும், ஒவ்வொரு மயிர்க்கால்களிலும் எண்ணெயைக் கசியச் செய்கின்ற சுரப்பிகளும் அமைகின்றன. ஐந்தாந் திங்களின்பொழுது இச் சுரப்பிகள் கொழுப்புக் கசிவைப் பொழிகின்றன. இது, தோலிலிருந்து உரிந்து இறந்துபோன உயிரணுக்களுடன் கலந்து பாலடைக்கட்டி போன்ற பிசுபிசுப்புள்ள பசை போல் அமைந்து உடல் முழுவதும் மூடிக்கொள்ளுகின்றது. கருமூளையைச் சுற்றிச் சூழ்ந்துள்ள பாய்மத்தில் இப்பொழுது கழிவுப் பொருள்கள் இருப்பதாலும், அஃது அசைவற்ற. மென்மையான அதன் தோலை அரித்துவிடக் கூடுமாதலாலும், இப்பொருள் அதற்குக் காப்புப் போர்வையாக உதவுகின்றது. நுண்மையுடைய மயிர் எல்லா மயிர்க் கால்களிலும் தோன்றுகின்றது. கை, கால் விரல்களின் முனையில் உகிர்கள் (நகங்கள்) தோன்றுகின்றன. பற்களின் முனையில் முத்துப் போன்ற வெண்மைப் பூச்சும் (Enamel) கீழ்ப்பகுதியில் எலும்பு போன்ற பற்களும் (Dentine) தோன்றுகின்றன. இவ்வைந்து மாத முதிர்கரு, மெலிந்த உயிரியாகவும், சுருக்கங்கள் உடைய தோலுடன், ஓரடி நீளமும் ஒரு கையெடை (பவுண்டு) நிறையுள்ளதாகவும் இருக்கின்றது.

www.thamizham.net - Free E book No 7426

ஆறாந் திங்கள்: ஆறாம் திங்களில் முன் மாதங்களில் உருவாகிய கண்ணிமைகள் ஒன்றாக இணைந்திருந்து மீண்டும் திறக்கப் பெறுகின்றன முழுநிறைவு பெற்ற கண்கள் அமைகின்றன. அவை ஏழாந் திங்களில் ஒளியுணர்வை ஏற்கும் பாங்குடையனவாக இருக்கின்றன. புருவங்களும் கண்ணிமை மயிர்களும் பெருக்கமடைகின்றன.

வாயினுட்புறம் சுவையுணர்வு அரும்புகள் தோன்றுகின்றன. இவை நாக்கின் மேற்பரப்பு, சுற்றுப்புறம், தொண்டை இவற்றில், முதுமைப் பருவத்தில் இல்லாத அளவுக்கு மிக்க எண்ணிக்கை உடையவையாக இருக்கின்றன.

கை, கால் இவற்றின் அசைவுகளினாலன்றி, இக்கருமுளை தன்னைத் தன் தாய்க்குப் பலவழிகளிலும் நினைவூட்டிக்கொண்டே யிருக்கின்றது. தன்னைச் சூழ்ந்திருக்கும் பனிநீரைக் குடித்துவிடுவதால் அதற்கு விக்கல் ஏற்படுகின்றது. விக்கலினால் குலுங்கும் குழந்தையின் அசைவு தாயினால் நன்கு உணரப்பெறும். இப்பொழுதே சில குழந்தைகள் கைவிரலைச் சூப்பும் பழக்கத்திற்கு ஆளாகின்றன. சில அழுகின்றன; சில வெளியில் ஏற்படுகின்ற ஒலியினை உணரும் இயல்பை உடையனவாகவும் இருக்கின்றன.

இம்மாத இறுதியில் அம் முதிர்கரு 12 அல்லது 14 விரற்கடை நீளமும், ஏறத்தாழ ஒன்றேமுக்கால் கையெடை (பவுண்டு) நிறை உள்ளதாகவும் இருக்கும். தலைமயிர் கருமையும், பளபளப்பும் கொண்டு நன்கு வளர்ந்திருக்கும். மேல்தோல் சுருங்கிக் காணப்பெறும். கண்கள் திறக்கப்பெற்றிருக்கும்.

ஆறு திங்கள் நிரம்பிய குழந்தை பிறந்தால், உயிர்க்கவும் அழவும்- தெளியவும் கூடும். பல மணிநேரம் உயிருடன் இருக்கவும் கூடும். இவ்வகையான உரிய காலத்திற்கு முற்பட்டுப் பிறக்கும் குழந்தையை இளவெப்பப் பேழையில் (Incubator) வைத்துப் பாதுகாத்தாலன்றி அஃது உயிர் வாழ்தல் இயலாது.

ஏழாந் திங்கள்: அடுத்த இரு மாதங்களைக் கருப்பையினுள் கழிக்கவேண்டி யிருந்தாலும், அக்கருமுளை, உரியகாலத்திற்கு முற்பட்டு இத்திங்களில் பிறந்தால், தானாகவே வாழ்வதற்குப் பெரும்பாலும் தகுதியுடையதாகவே இருக்கின்றது. இவ்வாறு பிறக்கின்ற

www.thamizham.net - Free E book No 7426

இளங்கருமுளைகள் இறந்து போவதற்குத் தலையாய காரணியங்களில் ஒன்று, நரம்பு மண்டிலத்தின் போதுமான பெருக்க மின்மையே என்று எண்ணப்படுகின்றது. ஏனெனில் இந்நரம்பு மண்டிலந்தான் நிலையான உயிர்ப்பை ஓம்புதற்கும், விழுங்குவதற்குத் துணை செய்கின்ற தசை நார்களின் சுருங்குகின்ற இயக்கத்தை நிகழ்விக்கவும், உடலின் வெப்ப நிலையைப் பேணிக்காக்கவும் துணை செய்கின்றது. மேலும் உடலின் எல்லா உறுப்புகளையும், மூளையுடனும் முதுகந் தண்டுடனும் இணைக்கின்றது

இத்திங்களில் மூளையின் இரு பகுதிகளிலுமுள்ள நுண்ணிய நரம்புயிரணுக்களும் (Nerve Cells) இழை நாளங்களும் (Fibers) முதிர்ச்சி பெற்று முழுமையடைகின்றன.

இந்த ஏழுமாதக் கருமுளை சிவந்த, சுருக்கங்கொண்ட மேல் தோலுடன் முதுமைத் தோற்றங்கொண்டு பதினாறு விரற்கடை நீளமும், ஏறத்தாழ மூன்று கையெடை (பவுண்டு) | நிறையுள்ளதுமான குழந்தையாக இருக்கின்றது. இப்பொழுது பிறந்தால், அதனால் அழவும், மூச்சுவிடவும் விழுங்கவும் கூடும். தொற்று நோய் மிக எளிதில் பற்றிக் கொள்ளக்கூடிய நிலையில் இருக்கின்றது. அதனுடைய மிகவும் நொய்மையான உடலுக்குப் புறவுலகில் ஏற்படும் அதிர்ச்சிக்குத் தனிக்காப்பும் தேவையாக இருக்கின்றது. அஃது இருளுக்கும் ஒளிக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை உணர்ந்து கொள்ளவும் கூடும்.

**எட்டாந் திங்கள்:** இத்திங்களில்தான் கருமுளை நாம் விரும்புகின்ற நிலையை அடைவதற்கு மாந்தக் கருமுளையின் தனிச்சிறப்பு மிக்க தோற்றக் கூறுகளைப் பெறுகின்றது. தன்னுடைய உடலை முடிவாகச் செப்பம் செய்து கொள்ளுகின்றது. கேள்விக்குரிய தன் அழுகையும் பெருக்கிக் கொள்கின்றது.

அதனுடைய உடலைச் சுற்றிலும் உள்ள வன்மையற்ற, சுருக்கங்களுடைய தோலை வழவழப்பாக்குவதற்குத் தேவையான கொழுப்பு மிக விரைவாக அமைகின்றது. தோலினுடைய மங்கிய நிறம் நீங்கித் தசை நாரின் வெண்சிவப்பு நிறமாக அது மாறுகின்றது.

கண்களின் விழிப்படலம் (Iris) கூட இவ்வண்ண மாற்றத்திற்குள்ளாகின்றது. பிறப்பின் பொழுது பெரும்பான்மையான குழந்தைகளின் கண்கள் வெண்ணீலச் சாம்பல் வண்ணமாக இருக்கின்றன. பின்நாளில் அமையப்போகும் அவற்றின் வண்ணத்தை முன்னறி

www.thamizham.net - Free E book No 7426

வித்தல் இப்பொழுது இயலாது. அதன் நிறை இத்திங்களில் ஐந்து கையெடையும் (பவுண்டும்) நீளம் பதினெட்டு விரற்கடையுமாகும்.

ஒன்பதாந் திங்கள்: முழுமையான வளர்ச்சியைப் பெற்ற குழந்தை இத்திங்களில் மேலும் சில மாறுதல்களையும், அமைப்புகளையும் பெறுகின்றது. மேல் தோல் சுருக்கம் நீங்கப்பெற்று மழமழப்பாகி விடுகின்றது. தலையைத் தவிர்த்து உடல் முழுமையும் இருந்த மயிர்கள் யாவும் உதிர்ந்து போகின்றன. தாயின் பாலை உறிஞ்சிக் குடிப்பதற்கேற்ற உணர்வையும், ஆற்றலையும் அதன் வாய் பெறுகின்றது. நுரையீரல் வெளிக்காற்றிலுள்ள உயிர்வளியை எடுத்துக்கொண்டு கரிவளியை வெளியிடக்கூடிய தன்னாற்றல் பெறுகின்றது. கழிவுப் பொருள்களை வெளியேற்றக் கூடிய அளவுக்கு அகவுறுப்புகள் தகுதிபெற்று விடுகின்றன. பனிநீர் சூழ்ந்திராத வெளியுலக வாழ்க்கையில் உள்ள தட்பவெப்ப நிலைகளை ஏற்கக் கூடிய மாறுதல்களையும் குழவி பெறுகின்றது.

அஃது எவ்வகையாலும் அமைதியுடையதும், சார்பு இயக்கம உடையதும், பிறப்புவரையிலும் தன்னுடைய வினைப்பாடுகளை நிறுத்தி வைப்பதும் அன்று. தன்னுடைய கைகளையும் கால்களையும் விரைவாக மோதுகின்றது. நெருக்கடியான தங்குமிடமாகிய கருப்பையினுள் தன் நிலையை மாற்றிக்கொள்கின்றது. சிறிது நேரம் துயில்கொள்வது போன்றும், அதன் பிறகு சிறிதளவு உடற்பயிற்சி எடுத்துக்கொள்வது போன்றும், துயில் நேரத்தையும் இயக்க நேரத்தையும் மாற்றி மாற்றிக் காண்பிப்பது போல் தோன்றும்.

பிறப்பு: குறிப்பிட்ட எந்த ஓர் ஆற்றல், பிறப்பின் படிப்படியான நிரலொழுங்குகளைத் தொடக்கி நிகழ்த்துகின்றது என்பது இன்னும் அறியப்படாமலேயே இருக்கின்றது. பிறப்பின்போது ஏற்படுகின்ற உடனடி மாறுதல்கள் தாயின் முழு உடலையும் சார்ந்தவாக இருக்கின்றன. ஆற்றல் வாய்ந்த உட்சுரப்பிகள் (Glands) குருதிக் குழலில் செலுத்துகின்ற வேதியல் பொருள்களின் எதிர் வினையாற்றல் கருப்பையின் தசைநார்ச் சுருக்கத்தைத் தூண்டிக் குழந்தையை வெளியே அனுப்புவதாகத் தெரிகின்றது.

மகப்பேற்றின் பொழுது, ஒரு பெண்ணின் உடலில் வியக்கத்தக்க மாறுதல்கள் ஏற்படுகின்றன. குழந்தை கடந்து வரவேண்டிய பிறப்புக் கால்வாய்க்கு உள்ளியல்பும் தனித்தன்மையும் வாய்ந்த இடுப்பெலும்பு உறுதியான உறுதுணை செய்கின்றது. ஆனால் பெண்

www.thamizham.net - Free E book No 7426

ணின் பேற்று நேரத்தைத் தவிர்த்த காலங்களில் பெண்ணின் இடுப் பெலும்பிற்கு இடைப்பட்ட மென்மையான தசைநார்கள் வேறு வகை யாக இயங்குகின்றன. கருப்பைக்கும் வெளிப்பகுதிக்கும் இடைப்பட்ட வழி, கருக்காலத்தைத் தவிர்த்த நேரங்களில் ஒரு குழந்தையின் தலை யில் பாதி அளவைக்கூட தன்னகத்தே ஏற்கமுடியாத அளவுக்கு மிகச்சிறு அளவினதாக இருக்கின்றது. அது பிறப்பின் போது ஐந்து முதல் பத்து கையெடை (பவுண்டு)யுள்ள குழந்தைக்கு வழிவிடும் அளவுக்குத் தன்னுடைய மென்மையான தசைநார்களைப் போதுமான அளவுக்குத் தளர்த்தியும், நீட்டிவித்தும் இயங்கும் தகுதி யைப் பெற்றிருப்பது வியப்பினும் வியப்பாக விருக்கின்றது. தாயின் குருதிச் சுழற்சியினின்றும் பெற்றுக்கொண்டிருந்த உயிர்வளி முழு மையாகத் துண்டிக்கப்பெற்றமூன்று அல்லது நான்கு நிமையங்களுக் குள் (Minutes), ஒரு குழந்தை தன் தாயின் கருப்பையினின்று வெளி யேறி அது தன் நுரையீரல்களினுதவியால் தானே காற்றைப்பெறும் முயற்சிக்கு ஏதேனும் தடை நேருமாயின், அதன் மூளையிலுள்ள உயி ரணுக்கள் நிலையான அழிவுக்கு உள்ளாகிவிடும். இதனால்தான் ஒன் பது மாதங்களாகத் தன் தன் தாயினிடம் சார்புநிலை வாழ்க்கையை மேற்கொண்டிருந்த குழந்தையைப் புறவுலகத்திற் கேற்றவாறு முழு மையான தன்னியக்க வாழ்விற்கு மிகக் காப்பாக மாற்றுவதில் இயற்கை மிகச்சிறு கால அளவை ஒதுக்கியிருக்கின்றது போலும்!

புதிபதாகப் பிறந்த குழந்தை எவ் வகையிலும் முற்றுப்பெற்ற முழுநிறைவான மாந்த உயிரி அன்று. நுரையீரல்கள் பல நாட்களுக் குப் பின்புதான் முழுமை பெறுகின்றது. நெஞ்சாங்குலை படிப்படியாக மிகவும் பொதுவாகத் துடித்துக்கொண்டே மாந்த நெஞ்சாங்குலை யின் துடிப்பளவை நோக்கிச் செல்கின்றது. குடல் உறுப்புகளும் அதன் உட்பொருட்களும் நோய் நுண்மங்கள் அற்ற, தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கின்றன. மிகுதியாக நுண்மக் கூட்டங்கள் எல்லா மாந்த உயிரிகளின் குடல் உறுப்புகளில் பிறப்பிற்குப் பின்னரே தோன்றுகின்றன.

பிறப்பின் பொழுது உமிழ்நீர்ச் சுரப்பிகளோ, அல்லது கண் ணீர்ச் சுரப்பிகளோ முழுமையாகப் பெருக்கமடைவதில்லை. புதிய குழந்தை கண்ணீரின்றியே அழுகின்றது. பால் மறக்கும் காலம்வரை அதன் உமிழ்நீர் மாப்பொருளை (Starch) முழுமையாகச் செரிக்கும்

www.thamizham.net - Free E book No 7426

ஆற்றல் பெறுவதில்லை. கண்கள் ஒரு குறிப்பிட்ட பொருளின் மீது பார்வையைச் செலுத்தும் ஆற்றல் பெற்றிருப்பதில்லை.

ஒரு குழந்தை பிறந்த உடனேயே அதற்குச் மூச்சுத்திணறல் ஏற்படுகின்றது. அது, மருத்துவர்களால் கிளர்ச்சியூட்டப் பெறுவதாலோ அல்லது தன்னுடைய பழக்கப்படாத உடலுக்கு இப்புறவுலகு தருகின்ற அதிர்ச்சியாலோ, முதல் கதறியழும் ஒலியை வெளிப்படுத்துகின்றது. நச்சுக்கொடி (Placenta) கொப்பூழ்க்கொடி (Umblical Cord) இவற்றின் பயன் முடிவுற்றதால், அவை, குழந்தையினின்றும் துண்டிக்கப் பெறுகின்றன. அவ்வடு கொப்பூழாக வாழ்நாள் முழுமையும் நம் வயிற்றின்மேல் நிலைத்து நிற்கின்றது. ஒரு காலத்தில் நாமிருந்த 'ஒட்டுண்ணி' (Parasitio) வாழ்க்கையின் மாறாத நினைவெச்சமாக அஃது அமைந்துள்ளது. O


## மொழிப்பேரறிஞர் தேவநேயப் பாவாணரின்
## திருக்குறள் தமிழ் மரபுரை

விலை உரு. 15-00

கிடைக்குமிடம்- திரு. தே.மணி,
ஆ-1135, இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு (வ. ஆ.)

## பாவலர்- பெருஞ்சித்திரனாரின்
## அரிய தமிழ் நூல்கள்.

| | | | உரு. காசு. |
|---|---|---|---|
| 1. | பாவியக்கொத்து | விலை | 2 — 50 |
| 2. | எண்சுவை எண்பது | ,, | 1 — 50 |
| 3. | புரட்சிப்பாவலர் பாரதிதாசன் பதிவஞ்சற் செலவு | ,, | 0 — 50<br>1 — 50 |

கிடைக்குமிடம்:- தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

## நினைவில் வையுங்கள்

தனித்தமிழ் வளர்க்கும் இலக்கிய ஏடுகள்.

**மாணுக்கன்.** தரங்கம்பாடி.

**பூஞ்சோலை.** காரைக்கால்-1.

ஆண்டுக்கட்டணம் ஒவ்வொன்றுக்கும் 3 உருபா.
தனியிதழ் ஒவ்வொன்றும் 25 காசு.

இன்றே உறுப்பினராகுங்கள்.


www.thamizham.net - Free E book No 7426

# பெரியாருக்குப் பாவாணர் விடுத்த வேண்டுகோள் அறிக்கையில் ஒரு மாற்றம்.

தென்மொழிச் சுவடி 7: ஓலை: 10, 11-இல் தமிழ்த் தந்தை ஈ. வே. இரா. பெரியார் அவர்களுக்கு மொழிப்பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் விடுத்த வெளிப்படை வேண்டுகோளில் கீழ்க்காணும் மாற்றங்கள் செய்யப்பெற்றுள்ளன.

1. இத்திட்டத்தின் அடிப்படையில் தொடங்கும் கல்வி நிறுவனம், **பெரியார் தன்மானப் பகுத்தறிவுப் பல்கலைக் கழகம்** எனப் பெயர் தாங்கும்.

2. பெரியார் விருப்பத்திற்கேற்பப், பயிற்று மொழி முற்றும் ஆங்கிலமாகவே இருக்கும்

3. கற்பிக்கப்பெறும் துறைகள்: **ஆங்கிலம், இசை நாடகம், ஏரணம், அறிவியல்** இவற்றோடு **பெரியாரியல்** PERIYARISM) என்ற பகுத்தறிவுக் கொள்கையும் கற்பிக்கப்பெறும்.

**ஞா. தேவநேயன்.**

www.thamizham.net - Free E book No 7426

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# தனிமப் பட்டியல்

இல. க. இரத்தினவேல்
(பூதவியல் விளக்குநர், பெரியார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி)

இந் நீட்டப்பட்டியலில் சிற்சில குறைகளிருப்பினும் இதன் பயன் மிகுதியே! பட்டியலின் இடமிருந்து வலமாகச் செல்லச்செல்ல அணுவெண் கூடும் ஓர் ஒழுங்கு உள்ளது. ஏனைய அமைப்புகளைவிட இஃது அணுவின் மின்னியலமைப்பு (Electron Configuration)களையும், ஒற்றுமை வேற்றுமைகளையும், வேதியற் குணமாறுபாடுகளையும் தெளிவாகப் புலப்படுத்துகிறது. மேலும், பட்டியலைத் தெளிவாக மனத்திலிருத்தி வேண்டும்போது எழுதிக்கொள்ளுமாறு வரிசையான முறையில் அமைந்துள்ளது.

சொல்வளஞ் செறிந்த நம் செந்தமிழ் மொழியில் இத் தனிமப் பட்டியலை மொழியாக்கம் செய்யுங்கால், அறிவியலறிஞர்களின் இயற்பெயர்களையும் நாடு நகரப் பெயர்களையும் தம் பெயராகக் கொண்ட தனிமப் பெயர்கள் உள்ளவாறே இடம் பெறுமாறும், வழக்கிலுள்ள சிறந்த சொற்கள் அப்படியே இருக்குமாறும், உரிய காரணியத்துடன் ஏனையப்பெயர்கள் பொருந்துமாறும் கருத்தையிருத்தி இயன்ற எளிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனினும் சிறந்த சொற்களைக் காணுங்கால் அவற்றை ஈடுறுத்துவதற்காக ஒரு முதல் முயற்சியே, இது.

எம்மொழிச் சார்புமின்றித் தனித்தியங்கவல்ல உலகின் ஒரே முதல் இலக்கியச் செம்மொழியாகவும் உலக மொழிகளுக்கெல்லாம் தாயாகவும் விளங்கும் தமிழின் கன்னித் தன்மையை—உலக வழக்கழிந்தொழிந்து சிதைந்த மொழிகளின் காவலர்களும், பிறரும் தம் மொழி தனித்தியங்க ஆற்றலற்றதுஎன்பதால், தமிழையும் அவ்வாறே ஆக்கவேண்டும் என்ற கூத்தி மனப்பான்மையில், பிறமொழிச் சொற்களைத் தமிழில் வரையிறந்து பெய்து, தாளிகைகளும் நூல்களும் வெளியிட்டுக் கெடுத்துக் கொண்டிருப்பதைச் சிறிதும் அறியாத—அறிந்தும் தெளியாத நம் வீடணப் பிரகலாதர்கள் ஆங்கிலப்பெயரை அப்படியே கொள்ள வேண்டும் எனக் கூறும் மொழியறிவற்ற மறுப்புரைகளுக்கு, உருசிய அறிஞர் உலோமன் சோவின் உரையைக் குறித்துக் காட்டித் தனிமப்பட்டியல் என்னும் அறிவியற் கூடத்துள் புகுமாறு அன்பர்கள் அனைவரையும் அழைக்கின்றேம்.

"இயற்கைப் பொருட்களுக்கும், அறிவியற் கருவிகளுக்கும், விளைவுகளுக்கும் பெயரிடப்பெறும் புதிய சொற்கள் முதலில் வேறுபட்டுத் தோற்றினும் காலப்போக்கில் பழக்கத்தில் மிக்க ஒன்றியைந்தனவாகும் என்பதில் ஐயமில்லை" —உலோமன் சோவ்

www.thamizham.net - Free E book No 7426

# தனிம அகர வரிசை.

பின்னொட்டாக அம் ஈறு பெற்றவை பெரும்பாலும் மாழைகள் (metals)
,, அன் ,, ,, அருவளிமங்கள் (Rare gases)
,, தை ,, ,, உப்பாக்கிகள் (halogens)
இக்குறி > தமிழிலிருந்து அவ்வம் மொழிகளுக்குச் சென்றதைச் சுட்டும்.

குறுக்க விளக்கம்: Gk-Greek
L-Latin
As-.Anglso Saxon E-English
வ-வடமொழி

| குறியீடு 1 | தனிமம் 2 | அணு எண் 3 | Element 4 | Symbol 5 | வேர்ச்சொல், காரணிய விளக்கம் 6 |
|---|---|---|---|---|---|
| அன் | அணுகன் | 54 | Xenon | Xe | வளிமண்டலத்தில் அணு வளவு உள்ள அருவளி; அணு-$11/17 \times 10^{-8}$ (தோராயம்) |
| அமெ | அமெரிசியம் | 95 | Americium | Am | அமெரிக்காவில் செயற்கையாய்ப் பெறப்பட்ட தனிமம் |
| அய | அயலம் | 94 | Plutonium | Pu | நெட்யூனுக்கு (Neptune-Neptunium 93) அயலாயுள்ள கோள் |
| அர் | அர்பிமம் | 37 | Rubidium | Rb | அர்-அரத்தம் (செந்நிறம்; குருதி) > வ. ரக்த > E.rud. [rudd > L. rufus, rubeus; rubidus, E.ruby; Rubidium-இதன் நிறமாலையில் இரு செந்நிறவரிகள் உள; Rhodium-செந்நிற(Rose) உப்புகளாய் அமையும். |
| அர | அரத்தியம் | 45 | Rhodium | Rh | |
| அரி | அரியம் | 66 | Dysprosium | Dy | இம்மாழையைப் பெறுதல் அரிது; Gk. Dysprositos |
| அனி | அருங்கனியம் | 57 | Lanthanum | La | முதல் அருங்கனி (Rare earth) |

www.thamizham.net - Free E book No 7426

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| அவு | அவுரியம் | 49 | Indium | In | நிறமாலையில் இரு அவுரி நிறவரிகள் உள்ள மாழை. |
| அ | அளமியம் | 13 | Aluminium | Al | அளம் E. Alum > L. Alumin; தேவி (Davy) Alumium [என்றே பெயரிட்டார் |
| ஆன் | ஆரகன் | 86 | Radon | Rn | ஆரை > L. radius > radium, ray Radium emanation |
| இசா | இஞ்சாயம் | 73 | Tantalum | Ta | நீரை உறிஞ்சாத மாழை; இஞ்சுதல்-உள்ளிழுத்தல்; இஞ்சு × [இஞ்சா |
| இடி | இடியம் | 90 | Thorium | Th | காண்டிநேவிய இடிக்கடவுள் (Thor) |
| இதி | இத்திரியம் | 39 | Yttrium | Y } | இத்தெர்பி (Ytterby) என்ற சுவீடன் நாட்டுச் சுருங்கை நகர். |
| இதெ | இத்தெர்பியம் | 70 | Ytterbium | Yb } | ஏனையிரு தனிமங்கள் எர்பியம், தெர்பியம் |
| இ | இதரம் | 80 | Mercury | Hg | இதள், இதரம்-பழந்தமிழ் வழக்கு |
| இர | இரட்டியம் | 60 | Neodymium | Nd | அருங்கனியத்தின் (57) சோடி இரட்டியத்திலிருந்து பிரிக்கப் [பட்ட புதுத்தனிமம். |
| இரீ | இரீனியம் | 75 | Rhenium | Re | இரைன் (L. Rhein) யாறு |
| இரு | இரும்பு | 26 | Iron | Fe | இரு(ம்பொ)ன் (> As, Iren, -இரும்பு = கரியமாழை. |
| இல் | இல்லினியம் | 61 | Illinium | Il | இல்லிணுய்சு (Illinois) ப் பல்கலைக் கழகத்தில் காணப்பெற் [றது. |
| இலா | இலாரன்சியம் | 103 | Lawrencium | Lw | அறிஞர் இலாரன்சு (Lawrence) |
| இன் | இலியன் | 18 | Argon | A | செயல் இலி (Gk. Argos-inactive) |
| இழை | இழையம் | 74 | Tungsten | W | மின் விளக்கின் இழைகளாகப் பயன்படும் மாழை. |
| உ | உயிரகை | 8 | Oxygen | O | மிகச்சில நுண்ணுயிரிகள் தவிர்த்து ஏனை எல்லா உயிரிகளும் [உயிர்க்க இன்றியமையாத வளி. |
| உரு | உருத்தீனியம் | 44 | Ruthenium | Ru | உருத்தீனியா (L. Ruthenia) = உருசியா. |

www.thamizham.net - Free E book No 7426

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| உலூ | உலூத்தீசியம் | 71 | Lutecium | Lu | பாரிசு(=L. Lutetia) நகரத்தார் சார்சு உர்பெயினல் [எத்தெர்பியத்திலிருந்து பிரிக்கப்பட்ட மாழை. |
| உவ | உவர்மம் | 11 | Sodium | Na | உவர்க்கும் உணவுப்பில்(NaCl)உள்ள மாழை. |
| உறு | உறுதியம் | 77 | Iridium | Ir | உறுதியான முனைகளுக்குப் பயன்படும் மாழை. |
| எர் | எர்பியம் | 68 | Erbium | Er | எத்தெர்பியத்தைக் காண்க. |
| என்(எல்) | எல்லியன் | 2 | Helium | He | எல்>(Gk. helios) மண்டலத்தில் கண்ட அருவளி. |
| எளி | எளிமம் | 3 | Lithium | Li | எடைமீக்குறைந்த மாழை—எளிமையான கார மாழை. |
| எஃ | எஃகம் | 4 | Beryllium | Be | எஃகுத்தன்மை மிக்க மாழை. |
| ஐரோ | ஐரோப்பியம் | 63 | Europium | Eu | ஐரோப்பா (Europe) |
| ஐ | ஐன்சுடைனியம் | 99 | Einsteinium | E | அறிஞர் ஐன்சுடைன் |
| ஒ | ஒளியை | 15 | Phosphorus | P | தாறுக ஒளிர்வது; |
| ஒர் | ஒளிர்மம் | 27 | Cobalt | Co | சீரிய பளபளப்பை ஏற்கும் மாழை. |
| ஒ | ஓல்மியம் | 67 | Holmium | Ho | தாக்கோம்(Stockholm = Mod.L Holmia) நகர். (தொடரும் |

## திருத்தம்

தனிமப்பட்டியல் கட்டுரையின் முதற் பகுதியில் உள்ள சில சொற்களைக் கீழ்க்காணுமாறு திருத்திப் படிக்க.

| | | | |
|---|---|---|---|
| தீநாறம்—சோரிதை | (Bromine) | வெண்பொன்—சுல்லம் | (Platinum) |
| கறையம்—கத்தரிதை | (Iodine) | வெடியம்—நீறிமம் | (Potassium) |
| தீயதை—உயிரகை | (Oxygen) | கடினியம்—கல்லி | (Silicon) |
| முனையம்—உறுதியம் | (Iridium) | மென்பொன்—எளியம் | (Lithium) |

## ஓர் அறிவிப்பு!

கடலூரில் இரண்டு கிழமைகட்கு மேலாகத் தொடர்ந்து பெய்த அடைமழையின் காரணமாகவும் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலைக்கு வராமையானும் அச்சக வேலைகள் சுணங்கின. எனவே இவ்விதழ் காலந்தாழ்ந்து வருகின்றது. காலத்தாழ்வைப் பொறுத்துக்கொள்ளுமாறு அன்பர்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

—அமைச்சர்.

www.thamizham.net - Free E book No 7426

வெல்க தமிழ்

# உலகத் தமிழ்க் கழகம்

## இரண்டாவது பொது மாநாடு

## தமிழகம்-மதுரை

திருவள்ளுவராண்டு 2001 சிலைத்திங்கள் 25, 26 (1971 சனவரி 9, 10 காரி, ஞாயிறு)

பேரன்பு மிக்குடை நல்லீர், பணிவான கைகூப்பு!

தமிழகத்தில் தோன்றிய தமிழ்வளர்ச்சிக்கான கழகங்கள் யாவற்றிலும் தலைமைசான்றதாய்த் தன்னிகரற்றதாய்த் தவழ்ந்து கொண்டிருப்பது உலகத்தமிழ்க் கழகம். உண்மை உயர்நெறிக்காக்கத் திண்மையார் திட்டங்கள் செறிந்த திறன்மிகு கழகம்.

ஈராட்டைக்கு முன்தோன்றிய இக்கழகத்தின் பேராற்றல் பெரும் பணி, மின்னல் விரைவு காட்டாவிடினும் மெல்ல மெல்ல நல்ல முறையில் மிளிர்கின்றது. பட்டி தொட்டியெங்கும் பரவி வருகின்றது.

உலகத் தமிழ்க் கழகத்தின் இரண்டாவது பொது மாநாட்டுக்கு உங்கள் உறுதுணையை வேண்டிக் கேட்டுப்பெற இவ்வேண்டுகோள் ஓலை தென்றலென உலவுகிறது; உவகையுடன் வரவேற்பீர். ஏற்றமிகு மாநாடு மதுரையில், ஏக்கழுத்தோடும் பீடுநடையோடும் உரிமை முழக்கங்களை உரத்த குரலில் உரைத்திடும் பன்னூற்றுக்கணக்கான மாணவர் தம் எழுச்சியை எடுத்துக்காட்டும் ஊர்வலத்தை உவந்தேற்கும் மாநாடு கூடல்மா நகரில், நம்மொழியின் மெலிந்த கால்கள் வலிந்து நிற்க. நான் மாடக்கூடலில் நற்றமிழர் மாநாடு! ஓய்ந்திருந்த தோள்கள் புடைத்தெழுந் தோடிவ நம் ஒருபெரும்மாநாடு! மூடியிருந்த வாய்களெல்லாம் கனன்று முழங்கும் மாநாடு! மூக்கழகமிருந்த மண்ணில், மொழிநூல் மூதறிஞா உலகத் தமிழ்க் கழகத்தின் தலைவர், ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் தலைமையேற்க, தென்மொழி ஆசிரியர், உலகத் தமிழ்க்கழகப் பொதுச் செயலாளர். பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், பைந்தமிழரைப் பாசறைக் கழைக்கும் மாநாட்டுக்குப் பறந்தோடி வாரீர்! வாரீர்!!

பகைவர் பதை பதைக்கப் பகுத்தறிவாளர் பறையறைகிறார்கள். உங்கள் பங்கென்ன? உவகைமிகு வருகையா? பொன்றமிழைப்புரக்கும் மாநாட்டுக்குப் பொருட் கொடையா? எது செய்ய எந் நாட்டுக்கு என்று கேட்கும் எம்மருமைத் தமிழ் நெஞ்சங்களே, பொருளைக் குவிப்பீர்; இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்பதை மெய்யாக்கிடுவீர். மாநில மெங்குமுள்ள மூத்தமிழன்பரீர், உங்கள் ஊரின் உயர்வை நிலை நாட்ட வேண்டுகிறோம்.

இன்னணம், மாநாட்டுச் செயற்குழுவினர்.

www.thamizham.net - Free E book No 7426

உள்ள பார்ப்பனர் இதை அரசுக்கு அறிவிப்பதாகவும், இவ்விதழைப் பள்ளியில் வாங்கிப் போடலாமா என்றும் தலைமையாசிரியரை மிரட்டி வருகின்றனர். —ஓர் அன்பர், மொறப்பாக்கம், மதுராந்தகம்.

0 221: தண்டமிழ்த் தலைவ! வணக்கம் பல. தங்களின் ஆசிரிய உரை மிகவும் தெள்ளத் தெளிவுற இருந்தது. நிற்க. புதிதாக அறிமுகமான புலவர் பட்டம் பெற்ற நண்பர் ஒருவரிடம், தென்மொழியையும், அதன் தனிப்பெரும் கொள்கைகளையும் எடுத்துரைத்தேன். அவர் இது பிழைப்புக்காக நடத்தும் தாளிகை என்று கூறிப் புறக்கணித்துவிட்டார்.

தமிழின், தமிழனின், தமிழ்நாட்டின் ஒரே தனித்தமிழிதழைப்புறக் கணிக்கும் தமிழர் இருக்கும்போது தமிழ்நாட்டில் தமிழ் சிறப்புறுவது எங்ஙன்? —சுப. தென்னவன், அண்ணாமலை நகர்.

0 222: பைந்தமிழ்ப் பாவல! நும்ஆசிரியவுரையைப் படித்துமகிழ்வும் அதே நேரத்தில் எழுச்சியையும் கொண்டோம். இது போன்ற எழுச்சிதரும்உரையையே தாங்கள் எழுதுங்கள். தங்களுடைய நினைவுகளும், கனவுகளும் நனவாகிக் கொண்டிருக்கின்றன. வளர்க தங்கள் அரும்பணி!

—இளங்தேவன், இளம்வழுதி, தமிழ்ச்செல்வன், சீராமபுரம், பெங்களூர்-21.

0 223: ஐயா, நீங்கள் நடத்திவரும் தமிழ் ஏடான தென்மொழியில் தமிழின் தொன்மையையும், பெருமையையும், அழகையும், வளத்தையும், இனிமையையும், தனித் தன்மையையும் ஞாலமறிய முழங்குவதைக் கேட்கின்றோம். தமிழ் அதற்குரிய உயர் நிலையை அடையவும், தமிழர் விழித்தெழுந்து தன் இனப் பெருமையை உணர்ந்துதலை நிமிர்ந்து வாழவும் வேண்டுமெனத் தென்மொழி ஏட்டின் வாயிலாய் நீங்கள் பாடுபட்டு வருவது அறிகின்றோம். தங்களது இப்பணி வெற்றியடைய வாழ்த்துகின்றோம்.

தங்களது இப்பணி சிறக்க, தென் மொழி தடையின்றி வளர, தமிழ் வளர, தமிழர் வளர நாங்களும் தங்களுடன் இணைகின்றோம். இப்பேரவாவுடன் எங்களது மன்றமும், மன்ற உறுப்பினர்களும் மனமுவந்து அளித்த அன்பளிப்பையும்சேர்த்து உருபா 79-00 (உருபா எழுபத்தொன்பது மட்டும்) கடந்த 3-10-70 நாளன்று பணவோலை மூலமாய்த் தங்கள் முகவரிக்கு அனுப்பியிருக்கிறோம். தங்களது உயரிய பணியைத் தடையின்றித் தொடர்வீர்களாக.

—அரு. கலைமாணிக்கம், அலகாபாது.

0 224: பெறலரும் பெருந்தகையீர்! பேரன்பு கெழுமிய வணக்கங்கள் பல. இம்மடல் தென்மொழி இயக்கத்தில் தாராது உழைக்கும் செயல் மறவர்களில் ஒருவனாக என்னையும் இணைத்துக்கொண்மின் எனக்கேட்கும் வேண்டுகோள் மடலே. யான் இம்மடலை நன்கு ஆய்ந்தே எழுதுகின்றேன். ஏறத்தாழ தங்கள் தென்மொழிப் படிகள் (40 படிகள்) வரி விடாமல் நுணுகிப் படித்த பின்னரே இதனை எழுதுகின்றேன். தங்களைத் திருச்சி மாநாட்டில் கண்டதுடன் சரி; இன்னும் இரண்டாம் முறை காணும் பேறு பெற்றிலேன். தங்களுடைய நூறுசிரியப் பாடலாகிய "பெரியார் வாழ்த்து" போன்றே அடுத்தடுத்து "மறைமலையடிகள் வாழ்த்து" "பாவாணர் வாழ்த்து",

www.thamizham.net - Free E book No 7426

திரு, வி. க. வாழ்த்து" போன்ற ஆசிரியப் பாடல்களை எதிர்நோக்கு கின்றேன். ஏனெனில் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் திகழக் கூடிய நூல் 'நூராசிரியம்' என்பதால்தான். இறுதியாக ஒன்று; என்றும் என்னுடைய பணியும் உழைப்பும் தென்மொழி இயக்கத் திற்கு உண்டு.

—புலவர், சா. அடல்எழிலன், திருவையாறு.

**0: 225:** அன்புடைய பெரியீர், வணக்கம். பல ஆண்டுகளாய்த் தென் மொழியும் தமிழ்ச் சிட்டும் படித்து வருகின்றேன். நிரம்பப் பயன் பெற்றேன். கழகக் காலத்தவரான பெருஞ்சித்திரனார் என்னும் புலவரினும் பல்லாற்றானும் மேம்பட்ட உங்களைப் பெற்றது தமிழர் களின் தவப்பயனே யாகும்.

ஐயன்மீர், கற்ற புலவர்கள் மட்டுமல்லாது தமிழக மக்கள் மட்டு மல்லாது வெளி நாட்டில் வாழும் என்போன்றோரும், தாய்மொழிக்கு அணியமாகி வருகின்றோம் என்பதையும் அதற்குக்கரணியராகிய உங் களுக்கும், புலமைக் கடல் திரு. தேவநேயப் பாவாணர் அவர்களுக் கும் என்றென்றும் நன்றிக் கடன் பட்டவர்கள் என்பதையும் அறி விக்க உள்ளம் விழைகிறது. சென்ற ஓர் இதழில் கட்சிச் சார்பற்ற தன்மையை திரு. பாவாணர் ஐயா அவர்கள் விளக்கி இருந்தமை அன்னாரின் நடுவு நிலையையும் உலகத் தமிழ்க் கழகத்தின் வளர்ச்சி யில் அவர்கள் கொண்டிருக்கும் அக்கறையையும் காட்டுகிறது. தென்மொழியைத் தொட்ட பின்னரே நிரம்ப நூற்களை வாங்கிப் படிக்கத் தொடங்கினேன். என் அறிவில் சுடர்விடும் எல்லாமே தென்மொழிக்கும், அதன் உழைப்பிற்குக் காரணமானவருக்கும், உள்ளத்தில் உறையும் உண்மை வரலாறு படைத்த ஈகச் செம்மல் பாவாணர் அவர்களுக்கும் உரியன என்பதை நான் உளம் விட்டுச் சொல்லித்தான் ஆகல் வேண்டும் நாடும், மொழியும், மக்களும், உய்ய உழைக்கும் உங்களுக்கும், திரு. பாவாணர் ஐயா அவர்களுக் கும் பரம்பொருள் துணை நிற்க மனமார வாழ்த்தும்,

—சிங்கை செங்கோடன், சிங்கப்பூர்.

**0: 226:** அன்புடையீர், வணக்கம். தென்மொழி தவறாது படிக் கும்–தனித்தமிழிற்கு உயிரையே கொடுக்கும் தோழர்களுள் நானு மொருவன். தங்களின் வறுமை நிலையைக்கண்டு நெஞ்சு உருகுத லின்றி வேறெதுவும் செய்ய இயலா நிலை, யானும் அதே வறுமைப் பிடியிற் சிக்கித் தவிக்கின்றேன். தங்களின் தனித்தமிழ்ப் பற்றும், நெஞ்சுறுதியும்தான். நான் வாழ்தற்குப் படிப்படியாய் இருந்து என் போன்ற பல்லோர்க்கும் தெம்பினை யூட்டுகின்றன. எத்தனை இடர் வந்தாலும் மருளாது முன் செல்லுங்கள். நாங்கள் உங்களோடு தொடர்ந்து வந்துகொண்டே யிருப்போம். எங்களுக்குத் தளர்ச்சி வரும்போது தாங்களும், தாங்கள் தளர்ச்சியடையுங்கால் நாங்களும் ஒருவருக்கொருவர் தெம்பினை ஊட்டியவாறு நாம் குறிவைத்த இலக் கினை அடையும்வரை ஓயாது உழைப்போம்! உழைப்போம்!!

—கருமலைத்தமிழாழன்—ஓமலூர்.

www.thamizham.net - Free E book No 7426

# தனிமப் பட்டியல்-THE PERIODIC TABLE

தெளிதமிழ்: சுவடி:8; ஓலை 7

[அணு எண், ஆங்கிலக் குறியீடு, தமிழ்க் குறியீடு, தனிமப் பெயர்]

| இனம் Group / காலம் Period | 1 அ | 2 அ | 3 அ | 4 அ | 5 அ | 6 அ | 7 அ | 8 | | | 1 ஆ | 2 ஆ | 3 ஆ | 4 ஆ | 5 ஆ | 6 ஆ | 7 ஆ | 0 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 H நீ நீரியம் | | | | | | | | | | | | | | | | | 2 He எள் (எம்) எள்ளியன் |
| 2 | 3 Li எளி எளியம் | 4 Be ஏ. ஏ.யம் | | | | | | | | | | | 5 B பு புகரி | 6 C க கரி | 7 N கா காலகை | 8 O உ உயிரகை | 9 F வ வழியகை | 10 Ne புன் புதியன் |
| 3 | 11 Na உவ உவர்மம் | 12 Mg மக மகனீசியம் | | | | | | | | | | | 13 Al அ அளமியம் | 14 Si கல் கல்லி | 15 P ஒ ஒளிகை | 16 S ம மஞ்சி | 17 Cl பா பாசகை | 18 A இன் இமியன் |
| 4 | 19 K தீம் தீதியம் | 20 Ca க கண்ணம் | 21 Sc கதே கதேத்திரம் | 22 Ti வன் வன்மியம் | 23 V காம் காமியம் | 24 Cr கு குருமியம் | 25 Mn காத காத்தகம் | 26 Fe இரு இரும்பு | 27 Co ஒ ஒரிமம் | 28 Ni பூ பூசியம் | 29 Cu செ செம்பு | 30 Zn நா நாகம் | 31 Ga கெ கெலியம் | 32 Ge செர் செர்மானியம் | 33 As ந நஞ்சம் | 34 Se மதி மதி | 35 Br சொ சொரிகை | 36 Kr மூன் மூழ்மியன் |
| 5 | 37 Rb அர் அர்மியம் | 38 Sr கறு கறுத்திரம் | 39 y இதி இத்திரியம் | 40 Zr தூவா தூவாமம் | 41 Cb கொ கொலம்பியம் | 42 Mo புதி புதிலேதியம் | 43 Tc செய செயற்கம் | 44 Ru உரு உருத்தினியம் | 45 Rh அர அரத்திரம் | 46 Pd வி வின்மம் | 47 Ag வெ வெள்ளி | 48 Cd வெம் வெம்மியம் | 49 In அவு அவுரியம் | 50 Sn வெள் வெள்ளீயம் | 51 Sb வெண் வெண்ணீயம் | 52 Te மண் மண்ணியம் | 53 I கத கத்திரிகை | 54 Xe அன் அனுமன் |
| 6 | 55 Cs நீல நீலமம் | 56 Ba பா பாரியம் | * 57—71 | 72 Hf செ செவ்வியம் | 73 Ta இர இர்ர்யம் | 74 W இழை இழையம் | 75 Re இரி இரிலியம் | 76 Os தி திண்மியம் | 77 Ir உறு உறுதியம் | 78 Pt கல் கல்லம் | 79 Au த தங்கம் | 80 Hg இ இதளம் | 81 Tl தளி தளியம் | 82 Pb கா காரீயம் | 83 Bi வா வாலம் | 84 Po பொ பொலனியம் | 85 At நி நிலையிலம் | 86 Rn ஆன் ஆரகன் |
| 7 | 87 Fr பி பிரெஞ்சியம் | 88 Ra க கதிரம் | ○ 89—103 | | | | | | | | | | | | | | | |
| | | * அருங்கனி வரிசை Lanthanides | | 57 La அரு அருங்கனியம் | 58 Ce செ செரியம் | 59 Pr ப பசியம் | 60 Na இர இரட்டியம் | 61 Il இல் இல்லினியம் | 62 Sm செ செமேரியம் | 63 Eu ஐரோ ஐரோப்பியம் | 64 Gd கடோ கடோலினியம் | 65 Tb தெ தெர்பியம் | 66 Dy அரி அரியம் | 67 Ho ஒ ஒல்மியம் | 68 Er எர் எர்பியம் | 69 Tm தூ தூலியம் | 70 Yb இதெ இத்தெர்பியம் | 71 Lu உரு உருத்தியம் |
| | | ○ கதிர்வீசிய வரிசை Actinides | | 89 Ac கதி கதிரொளியம் | 90 Th தொ தோரம் | 91 Pa மு முந்தரியம் | 92 U யு யுரேனம் | 93 P நெ நெப்டியம் | 94 Pu அப அபலம் | 96 Am அமெ அமெரிசியம் | 96 Cm கி கியூரியம் | 97 Bk பெர் பெர்க்கலியம் | 98 Cf கலி கலிபோர்னியம் | 99 Es ஐ ஐன்சுடீனியம் | 100 Fm பெர் பெர்மியம் | 101 Md மெ மெண்டலீவியம் | 102 No நொ நொபெலியம் | 103 Lw இலா இலாரென்சியம் |

www.thamizham.net - Free E book No 7426